# நினைத்து மறுகுதடி நெஞ்சம்

அதிகாலைப் பொழுது. அழகிய ஓவியமாய்ப் புலர்ந்து கொண்டிருந்தது.

வெற்றுக்காகிதத்திற்கு முன்னால், கற்பனை வரக் காத்திருக்கும் கவிஞனைப் போல், வானம் சூரியனின் வரவிற்காக தவமிருந்த பூபாள நேரம்!

சோம்பல் விலகாத படுக்கைகள்... இரைக்காக இசைக்கும் சிறகுகள்... உசுப்பி எழுப்பும் சூரியன்... என்றும் விடியலின் சீதனங்கள்!

''சவுமீ...'' தாயின் குரல், அவளுடைய உணர்வுகளைத் தட்டி எழுப்ப, பிரிய மனமின்றி இணைந்திருந்த இமைகளைப் பிரித்தாள் சவுமியா.

''அம்மா... குட் மார்னிங்!'' என்றபடி தூக்கக் கலக்கத்துடன் சோம்பலாகப் புன்னகைத்தாள். கார்கால வானில் ஒளிரும் மின்னல் கீற்றாய், பளிச்சென்றது அவள் புன்னகை! அதை ரசித்தபடி, ''இன்னிக்கு காலையில ஒன்பது மணிக்கு, உனக்கு ஒரு 'இண்டர்வியூ' இருக்கே...? மறந்திட்டியாடா?'' கனிவுடன் கேட்டார் சியாமளா.

''ம்... மறக்கலைம்மா! இதோ, குளிச்சிட்டு வரேன்!'' என்றவள், உற்சாகத்துடன் எழுந்து, தாயின் கன்னத்தில் செல்லமாக முத்தமிட்டாள்.

பதிலுக்கு, முன்னுச்சியில் இதழ் பதித்துவிட்டு அவர் சென்றதும், காலைப் பொழுதின் இனிமையை ரசிக்க எண்ணி, ஜன்னல் திரையை விலக்கினாள் சவுமியா.

எதிரில் தெரிந்த புன்னை மரத்தில் அமர்ந்திருந்த பெயர் தெரியாத அந்த அழகுப் பறவை, சோம்பலாய் தன் சிறகுகளைக் கோதிக் கொண்டிருந்தது.

சிறிதுநேரம் அதையே ரசித்தவள், பிறகு குளியலை முடித்துவிட்டு நைட்டியுடன் வெளியே வந்தபோது, வெண் பொங்கலின் நறுமணம் வீட்டையே நிறைத்திருந்தது.

**உமா பாலகுமார்**



''பாட்டிம்மா... என்ன, வாசனை ஆளையே தூக்குது...'' என்றபடி சமையலறைக்குள் சென்றாள். அங்கு பாட்டியும், அம்மாவுமாக சேர்ந்து சமையல் செய்து கொண்டிருந்தனர்.

சம்பூர்ணம் பாட்டி, அவளுக்கு தூரத்து உறவு சவுமியாவின் தந்தை இறந்த பிறகு, இத்தனை வருடங்களாக சியாமளாவிற்குத் துணையாய் இருப்பவர் அவர்!

சிறு வயதிலிருந்தே, சொந்தப் பாட்டியைப் போல் அன்பைப் பொழிபவர்.

''சவுமிக் குட்டி... வா...வா... வந்து சாப்பிடு! உனக்கு பிடிச்ச பொங்கல், இட்லி, சாம்பார் எல்லாம் ரெடி...'' என்றார் சம்பூர்ணம் உற்சாகக் குரலில்.

''தேங்க்யூ பாட்டிம்மா...'' சிறு முறுவலுடன் கூறியவள், சாப்பிட்டு முடித்து சுடிதாரணிந்து வந்தபோது, சியாமளாவும் தொழிற்சாலைக்குச் செல்லத் தயாராகி நின்றிருந்தார்.

''சவுமீ! இண்டர்வியூவுக்குப் போற ஹோட்டலுக்கு உனக்கு வழி தெரியாதில்லையா?... அதனால, பக்கத்து வீட்டுக்கு வர ஆட்டோக்காரரையே ஒன்பது மணிக்கு வரச் சொல்லி இருக்கேன்...! இன்னிக்கு அதிலேயே போயிடு... வேலை கிடைச்ச முதல்லே ரூட் பழகட்டும்... அப்புறமா உன் வண்டியை எடுத்துட்டுப் போகலாம். ஆல் தி பெஸ்ட்!'' என்றார், அக்கறையுடன்.

''தேங்க்யூம்மா! நான் வரேன் பாட்டிம்மா!'' என்றபடிக் கிளம்பிச் செல்லும் மகளை அனுப்பிவிட்டு, அவரும் தொழிற்சாலை பேருந்து நிற்கும் நிறுத்தத்திற்கு நடக்க ஆரம்பித்தார்.

சவுமியா, அப்படியே அவளுடைய பாட்டியின் மறுபதிப்பு! நல்ல உயரத்தில்; துருதுருக்கும் விழிகளுடன் செதுக்கிய சிலை போன்ற முக அமைப்பும், இடைவரை மயில்தோகையாக விரிந்த கூந்தலுமாய், கோதுமை நிறத்தின் மினுமினுப்புடன் செப்புச் சிலைப்போல் இருப்பவள்!

விருதுநகரில் ஒரு தனியார் தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்த சியாமளா, கேரளாவில் ஆலப்புழாவிற்கு அருகிலிருக்கும் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்து இரண்டு மாதங்களே ஆகின்றன.

கேரளாவிற்கு வந்ததுமே வீடு பார்த்து குடிவந்து, மொழிப் பிரச்னையில் சிறிது தடுமாறி, இப்போது தான் மூவருமே இயல்பு நிலைக்கு வந்திருந்தனர்.

சவுமியா, பிபிஏ படித்து விட்டு ஹோட்டல் மேனேஜ்மெண்டும் முடித்திருந்தாள்.

இங்கு ஒரு பெரிய ஹோட்டலில் வேலைக்கான விளம்பரம் வர, விண்ணப்பித்ததில் இன்று இண்டர்வியூவிற்கான கடிதம் வந்திருந்தது.

மகளைப் பற்றியே எண்ணமிட்டபடி, வேகமாக நடந்து கொண்டிருந்தார் சியாமளா.

படிப்பு முடிந்தவுடன் திருமணத்திற்குப் பார்க்கலாமா என்று அவர் சவுமியிடம் வரன் கேட்டபோது, இரண்டு வருடங்களாவது வேலை



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

பார்த்தப்பிறகு தான் திருமணம் செய்து கொள்வேன் என்று அவள் உறுதியாகக் கூறி விட்டாள்.

அந்தக் காலத்தில் பெண்களுக்கு இல்லாத சுதந்திரமும், மனத் தெளிவும், தன்னம்பிக்கையும், இப்போதிருக்கும் பெண்களுக்கு அதிகமாக இருப்பது புரிந்தது.

தங்களுக்கு இதுதான் வேண்டும் என்று, எதிர்காலத்தைப் பற்றிய ஒரு தீர்மானமான முடிவெடுப்பதில், தெளிவும் தீர்க்கமும் இருப்பதைக் கண்டபோது, ஒரு ஆரோக்கியமான சமுதாயம் உருவாகியிருப்பதை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

★★★

ஆட்டோவில் சென்று கொண்டிருந்த சவுமியா, வெளிப்புறக் காட்சிகளில் பார்வையைப் பதித்து ரசிக்க ஆரம்பித்திருந்தாள்.

விருதுநகரில் சிறுவயதில் இருந்தே பழகியவளுக்கு, இந்தக் கேரளத்து மண்ணும், அதன் செழிப்பும், குளுமையும் மிகவும் பிடித்திருந்தன.

ஆலப்புழாவிற்கு வருவதற்கு முன்பு, புதுஇடம் எப்படி இருக்குமோ என்ற மிரட்சியும் பயமும் கைகோர்த்திருக்க, அவை எல்லாம் இங்கு வந்து இறங்கிய மறுநாளே தொலைந்து போயின.

எதிர்வீட்டில் ஒரு தமிழர் குடும்பம் குடியிருந்ததால், இரு வீட்டினரும் பழகிய உடனே நட்புடன் கை கோர்த்தனர்.

அந்தக் கருணாகரன் மூலமாகத்தான், இந்த ஹோட்டலில் வேகன்சி இருப்பதும், அதற்காக விளம்பரப்படுத்தியிருப்பதும் தெரிய வந்தது.

கருணாகரன், அந்த ஹோட்டலில் தான் மேனேஜராகப் பணி புரிகிறார்.

அவருக்கு உதவியாளராக இருந்த ஒரு பெண் வேலையை விட்டு சென்றுவிட, அந்த வேகன்சி இருப்பதை சவுமியாவிடம் அவர்தான் கூறினார்.

தான் முதன் முதலாகச் செல்லப்போகும் நேர்முகத் தேர்வு, எப்படி இருக்குமோவென்று .சிறு பயமும் தவிப்பும், மெல்ல அவளை ஆக்கிரமிக்க ஆரம்பித்தன.

அவள் தன்னை அமைதிப்படுத்தி நிமிர்ந்தபோது, செல்ல வேண்டிய இடம் வந்திருந்தது.

★★★

ஆட்டோவிலிருந்து இறங்கினால், வெகு அழகிய முகப்புடன் பெரிய தோட்டத்திற்கு நடுவே அந்த ஹோட்டல் தெரிந்தது.

கேரள ஓடுகள் வேய்ந்தாற் போன்ற அமைப்புடன், மூன்றடுக்குக் கட்டிடமாய் சுற்றிலும் சிறிய காட்டேஜ்கள் சூழ, அந்த இடமே ரம்யமாய்க் காட்சியளித்தது.

வலது புறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீலமாய் விரிந்து தெரிந்த அந்த நீர்ப்பரப்பு, மெல்லிய அசைவுகளுடன் அலைகளில்லாக் கட்லாய், ஒரு நீல நிற வைரம் ஒளிர்வது மேல், சூரிய ஒளிபட்டு அழகாய் மின்னியது.

வேம்பநாடு ஏரியின் கிளைகள் விரிந்த கழிமுகப் பகுதியை ஒட்டி அமைந்திருந்தது, அந்த ஹோட்டல்!

நீரின் குளிர்ச்சியும், பலவித மலர்களின் நறுமணமும், மனதிற்குள் சட்டென்று ஒரு வித சிலிர்ப்பைப் பரவச் செய்தன.

ஆட்டோ டிரைவரிடம், ''இங்கேயே வெயிட் பண்ணுங்க.. நான் போயிட்டு வரதுக்கு எப்படியும் ஒரு மணி நேரமாவது ஆகும்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

கருங் கற்கள் பதிக்கப்பட்ட பாதையின் இருபுறமும் அழகிய தோட்டத்துடன், அந்த சூழலே மிகவும் அழகுடனிருக்க, உள்ளே சென்று ரிசப்ஷனில் விசாரித்தாள்.

அங்கிருந்த பெண்ணும் இளைஞனும், அவளிடம் நட்பாகப் புன்னகைத்து இண்டர்வியூ நடக்கும் இடத்திற்கு வழி கூறினர்.

சவுமியா அங்கு சென்றபோது, ஏற்கனவே இரண்டு இளைஞர்கள் அமர்ந்திருந்தனர். இருவருமே சற்று அலைப்புறுதலுடன் இருந்தது, பார்க்கும் போதே தெரிந்தது.-அடிக்கடி வாட்சைப் பார்த்தபடி, எரிச்சலாக முணு முணுத்து, ரிசப்ஷனிஸ்டிடம் கேள்விகள் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரக் காத்திருப்பிற்குப் பிறகு, ஒவ்வொருவராக அழைக்கப்பட்டனர்.

அவள் பெயர் அழைக்கப்பட்டவுடன் உள்ளே சென்றால், அங்கு நடுநாயகனாக இருந்த நாற்காலியில் ஒரு இளைஞன் அமர்ந்திருக்க கருணாகரன் அருகில் நின்றிருந்தார்.

இருவரையும் வணங்கிவிட்டு அமர்ந்தவுடன், அந்த இளைஞன் அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தமான சில சம்பிரதாயக் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான்.

அவளுக்கே உரிய திறமையுடன், அமைதியாக அழுத்தமாக பதிலளித்தாள் சவுமியா.

அவன் கேட்டதற்கெல்லாம் உடனே பதிலளித்த அவளுடைய திறமையையும், எல்லாக் கேள்விகளையும் புன்னகையைத் தொலைக்காமல் தைரியமாக அவள் எதிர்கொண்ட விதமும், அவனை உடனே ஈர்த்தன.

நேர்முகத் தேர்வு முடிந்து அவள் எழுந்தவுடன், ''ஒரு நிமிஷம்...'' என்றபடி எழுந்தவனின் உயரம், அவளை பிரமிக்கச் செய்வதாய்!

பெண்களிலேயே அவள் நல்ல உயரம் என்ற பெருமை, அவளுக்கு எப்போதுமே உண்டு. ஐந்தரை அடிக்கும் மேல் இருப்பவள் அவள்!

ஆனால், அவளே நிமிர்ந்து பார்க்கும் அளவுக்கு உயரமாய் இருந்தான் அவன்.

வியப்புடன் ஏறிட்டவளை, இடுங்கிய கண்களால் ஆராய்ந்தான்.

பிறகு, ''கருணாகரன் அங்கிள் சொன்ன மாதிரி நீங்க புத்திசாலி தான்கிறதை நிரூபிச்சிட்டீங்க... இந்த வேலையில சேர்ந்தப்புறம், நீங்க ரெண்டு வருஷம் இங்கதான் கம்பல் சரியா வேலை பார்த்தாகணும்... அதுக்கு ஒத்துக்கிட்டு ஒரு 'பாண்ட்'லே கையெழுத்துப் போடணும்...

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அப்படி ஒரு ரூல் நம்ம ஹோட்டல்லே இருக்கு... வேலை கத்துக்கிட்டு உடனே வேற இடத்துக்கு தாவிடக் கூடாதுன்னு தான் இந்த ஏற்பாடு... அதுக்கு விருப்பமிருந்தா வேலையில் சேரலாம்... யு ஆர் அப்பாயிண்ட்டட்!''

''இந்த வாரம் உங்களுக்கு அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் வரும்... அடுத்த வாரமே நீங்க ஜாயின் பண்றமாதிரி இருக்கும்... சம்மதமா?'' ஆழ்ந்த குரலில் கேட்டான் அவன்.

''ம்... தேங்க் யூ சார்! நீங்க சொன்ன மாதிரியே நான் ஜாயின் பண்ணிடறேன்! உங்க நிறுவனத்துக்காக உண்மையா உழைக்க நான் தயாரா இருக்கேன்...'' மகிழ்ச்சியுடன் கூறினாள் சவுமியா.

அவனிடம் விடைபெற்று வெளியில் வந்தபோது, பின் தொடர்ந்து வந்தார் கருணாகரன்.

''கங்கிராஜுலேஷன்ஸ் சவுமியா! நான் எதிர்பார்த்தது தான்... இருந்தாலும் ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்று கை குலுக்கினார்.

''தேங்க் யூ அங்கிள்!'' என்று கூறும்போதே, அவர்களைக் கடந்து சென்றவனின் உயரமும், கம்பீர நடையும், அவளறியாமல் சவுமியின் மனதைக் கவர்ந்தன.

''உன்னோட அணுகுமுறையும், பதில்களும் அவருக்கு ரொம்ப பிடிச்சிருச்சின்னு நினைக்கிறேன். வெயிட்டிங் ஹாலில் இருந்தப்பவே நீ ஒருத்தி தான் இயல்பா இருந்ததா சொன்னாரு'' பெருமையுடன் கூறினார்.

அந்த நிமிடம் புரிந்தது... நேர்முகத் தேர்விற்கு வரும்போது, நம்மையறியாமலே எல்லாரும் கண்காணிக்கப்படுகிறோம் என் உண்மை!

அப்போது தான், நேற்று கருணாகரன் கூறியதும் நினைவு வந்தது.

இந்த ஹோட்டல் தொடங்கப்பட்டு, ஒரு வருடம் தான் ஆகிறது என்பது தெரியந்தது.

அதற்கு முன், அவர்கள் நடத்தி வந்த பல கிளைகளுடைய பெரிய டிபார்ட் மெண்ட் ஸ்டோரில் தான் பணி புரிந்ததாகவும், இந்த ஹோட்டலை நடத்துகின்ற இரு பார்ட்னர்களுமே தமிழர்கள் தானென்றும் சொல்லி இருந்தார் அவர்.

''அங்கிள்... இவர்...?''



என்னங்க இது உங்க பையனை நாய் மாதிரி கடிச்சிருக்கிறான்

நான்தான் சொன்னேனே அவன் அவங்க அம்மா மாதிரி'னு'!

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.



அவன் கேள்வியாய் நோக்க, ''இவர்தாம்மா மிஸ்டர் விதுரன்! எங்க சின்ன முதலாளி... ரொம்ப புத்திசாலி... பாரின் போய் படிச்சிட்டு வந்தவர்...'' என்றார் பெருமையுடன்.

''ஓ!'' என்றவள், ''என்னோட முதல் இண்டர்வியூவிலேயே செலக்ட் ஆனதுக்கு நீங்கதான் ஒரு முக்கிய காரணம் அங்கிள்... தேங்க் யூ சோ மச்! ஆட்டோ வெயிட் பண்ணுது... நான் கிளம்பறேன்!! ''புன்னகையுடன் கூறியபடிக் கிளம்பினாள்.

வீட்டிற்குச் செல்லும் போதும், ஏனோ மீண்டும் மீண்டும் அந்த விதுரனின் முகமே, அவள் மனதில் நீங்காமல் மையம் கொண்டது.

ஏனென்று யோசித்தபோது, கூர்மையான விழிகள் எதிராளியை அளவெடுக்க, களையான முகத்தில் கருத்தடர்ந்த மீசையுடன், அழுத்தமான பாவனையுடன் அமர்ந்திருந்தவனைப் பார்த்தபோது, அவனை முன்பே எங்கோ பார்த்தது போல் ஒரு மெல்லிய சலனம்!

அவன் முகம், வெகு நாட்களாக பார்த்துப் பழகிய உணர்வை ஏற்படுத்துவதை மட்டும், ஏனோ அவளால் தவிர்க்கவே முடியவில்லை.! அது ஏனென்றும் புரியவில்லை?

ஏனோ, முதல் சந்திப்பிலேயே மனதில் நிறைந்தான் அவன்.

## 2

வீட்டிற்குச் சென்று பாட்டியிடம் விஷயத்தைக் கூறியபோது, அவர் மிகவும் மகிழ்ந்தார்.

உடனே கேசரி செய்து அவளுக்கு ஊட்டி விட்டு, கோவிலுக்குக் கிளம்பி விட்டார்.

சியாமளா வேலைக்குச் செல்வதால், சிறு வயதிலிருந்தே அவளை வளர்த்த பாசம் அவருக்கு மிகவும் அதிகம்.

அன்று மாலையில் சியாமளா வந்தவுடன் எல்லா விபரங்களையும் கூறியவள், அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை எதிர்பார்த்துக் காத்திருக்கத் தொடங்கினாள்.

அந்த வாரத்திலேயே, ஒரு நாள் கடிதம் வந்து விட்டது.

மூவருமாகச் சேர்ந்து கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து வந்த பிறகு, கருணாகரனிடம் சென்று ஆசீர்வாதம் வாங்கி வந்தாள் அவள்.

அவர் மனைவி வசந்தா, மகளின் பிரசவத்திற்காக போன வாரம் தான் வெளிநாடு சென்றிருக்கிறார்.

அதனால், கருணாகரன் மூன்று வேளையும் ஹோட்டலிலேயே சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

வார விடுமுறை நாட்களில், சவுமியாவின் வீட்டிலிருந்து மதிய சாப்பாடு மட்டும் அனுப்பி விடுவார்கள்.

அன்று சவுமியா வேலைக்குச் சேரும் நாள்! காலையில் தன் ஹோண்டாவிலேயே கிளம்பியவள், சரியான நேரத்திற்கு ஹோட்டலுக்குப் போய் சேர்ந்து விட்டாள்.

முதல் நாளென்பதால், கருணாகரன் அவளை அழைத்துச் சென்று



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

ரிசப்ஷனிலிருந்த பிரமோத்தையும், பபிதாவையும், அறிமுகம் செய்த உடனே, சவுமிக்கு அவர்களை மிகவும் பிடித்துப் போனது.

பிறகு கேட்டரிங் செக்ஷனுக்கு அழைத்து சென்றவர், ''இவர் தாம்மா, சீப் செப் எட்வின்... இவர் தலைமை குக் மாதவன் நாயர்... இவங்க எல்லோரும் இவரோட அசிஸ்டெண்ட்ஸ்'' என்றபோது அனைவரும் நட்புடன் புன்னகைத்தனர்.

''மோளே! எனக்கு உன்னைப் போல் ஒரு பொன்னு மோள் ஊரில் உண்டு... தினமும் இவிடே வந்து இந்த மாதவன் நாயர் கையால் ஒரு கப் சாய் குடிச்சிட்டுப் போகணும்... மேட்டயா?''

வாஞ்சையுடன் மாதவன் நாயர் கேட்ட போது, மறுக்கத் தோன்றாமல் வருவதாக உறுதியளித்தாள் அவள்.

பிறகு ஹோட்டலின் பின்புறம் அழைத்துச் சென்றவர், அங்கிருந்த நீச்சல் குளத்தைச் சுற்றிக் காண்பித்து விட்டு, பக்கவாட்டிலிருக்கும் படகுத் துறைக்கு அவளை அழைத்துப் போனார்.

அங்கு அழகிய படகு வீடு ஒன்று நீரில் மிதந்தபடி, ஒரு கம்பீரமான இளவரசியைப் போல் காட்சியளித்தது.

''நம்ம டூரிஸ்ட் அட்ராக்ஷன்லேயே முக்கியமானது இதுதான் சவுமியா! சீசன் டைம்ல இந்தப் படகுகளுக்கு ரொம்ப டிமாண்ட் இருக்கும்... முன்னாடியே பதிவு பண்ணிடுவாங்க.. நம்மகிட்ட இதுமாதிரி நிறைய படகு வீடுங்க இருக்கு.... இதுல பயணம் செய்யற சுகமே அலாதி! உன்னை ஒரு நாள் அழைச்சிட்டு போறேன் பாரு!'' என்றார் உற்சாகத்துடன்.

சட்டென்று, அவளையும் அந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது.

''எனக்கும் படகு வீடுன்னா ரொம்பப் பிடிக்கும் அங்கிள்... போகணும்னு ஆசை தான்!...பார்ப்போம்'' கண்களில் சிறு மின்னலுடன் கூறினாள்.

பிறகு, ரூம் சர்வீஸ் செய்பவர்களை அறிமுகப்படுத்தினார் கருணாகரன்.

''இதுதான் கிருஷ்ணன் குட்டி... இவங்களுக்கு எல்லாம் சூபர்வைசர்... ரூம் சர்வீஸ் பத்திஏதாவது தெரியணும்னா நீ இவர்கிட்டக் கேட்டா போதும்...'' என்று கூறியபோது, அவரும் மரியாதையுடன் வணங்கினார்.

பேசியபடி இருவரும் திரும்பி வரும்போது, ''இன்னிக்கு தானே முதல் நாள்! எல்லாத்தையும் சுத்திப்பாரு... எல்லா இடத்துலயும் ஒரு கண்ணு வச்சுக்க... ரூம் சர்வீஸ், கிச்சன், படகுத்துறை, நீச்சல் குளம், ரிசப்ஷன் எல்லாத்தையும் வாட்ச் பண்ணிக்கிட்டே இருக்கணும்...''

''படகு வீடு புக் பண்றது. ட்ராவல்ஸ்லே கார் அரேஞ்ச் பண்ணி விடறதெல்லாம் நம்ம சூரியன் ஜோசப்போட வேலை. இன்னிக்கு அவர் லீவு!... அதையும் அப்பப்ப செக் பண்ணனும்...

''வேலை சுலபம் தான்! ஆனா ஒவ்வொரு இடமாப்போய் அங்கங்கே எல்லா வேலையும் ஒழுங்கா நடக்குதான்னு பாத்து என்கிட்ட ரிப்போர்ட் பண்ணனும்... சுத்திக்கிட்டே இருக்கணும்...! போகப் போக உனக்கு



பழகிடும்...'' சிறு முறுவலுடன் முடித்தார்.

''தாங்க்ஸ் அங்கிள்! நான் விரும்பின மாதிரி ஒரு வேலையை எனக்கு வாங்கித் தந்திருக்கீங்க... நிச்சயமா உங்களுக்கு நல்ல பேர்தான் வாங்கித் தருவேன்... நெகிழ்ச்சியுடன் கூறினாள்.

''ஆல் தி பெஸ்ட்... முதல்லே உன் வேலையை ரிசப்ஷன்லேருந்து ஆரம்பிக்கலாமே!'' என்றபடி ப்ரமோதிடமும், பபிதாவிடம் அவளை ஒப்படைத்துவிட்டு, அவர் உள்ளே சென்றார்.

★★★

அந்தநேரம் சுற்றுலாப் பயணிகள் சிலர் வர ஆரம்பித்திருக்க, அவர்களை புன்னகையுடன் வரவேற்று ரிசப்ஷனுக்கு அழைத்துச் சென்றாள் சவுமியா.

வருகைப் பதிவேட்டில் அறைகளையும் காட்டேஜ்களையும் பபிதா பதிவு செய்ய, அவர்களின் உடைமைகளை ஆட்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, கேடரிங் செக்ஷனுக்குச் சென்றாள்.

அங்கு கேரளா, தமிழ் உணவு வகைகளும், தந்தூரி வகைகளும் தயாராகிக் கொண்டிருந்தன.

இறால் மசாலா வாசனை, மூக்கைத் துளைக்க ஆரம்பித்தது.

''வா மோளே... சவுமியாக்குட்டி இறால் சாப்பிடுமோ?.... இங்கே மாதவன் நாயரோட இறால் மசாலா பேமசாக்கும்.!''

ஆர்வத்துடன் அவர் கேட்க, புன்னகையுடன் தலையசைத்து விட்டு எல்லாவற்றையும் பார்வையிட்டாள்.

உடனே ஒரு யோசனை தோன்ற, ''நான் உங்களுக்கு ஒரு ஹெல்ப் பண்ணலாமா? எனக்கு வெஜிடபிள் கார்விங் நல்ல தெரியும். அதுக்கான கோர்ஸ் படிச்சிருக்கேன்... ஒவ்வொரு டேபிளுக்கும் காய்கறிகள்லே செய்யற பூக்கள், மிருகங்கள்னு வெச்சா இன்னும் அழகா இருக்கும் இல்லை...? செய்யலாமா?''

தயக்கத்துடன் அவள் கேட்க, எட்வின் உற்சாகத்துடன் முன்னால் வந்தார்.

''தாராளமா மேடம்! இந்த மாதிரி புதுப்புது விஷயங்களுக்கு, இங்கே சுற்றுலாப் பயணிகள் கிட்ட எப்பவுமே வரவேற்பு அதிகம்... உங்க பிரீ டைம்ல செய்யுங்க'' என்று ஊக்கப்படுத்தினார்.

உடனே கேரட், பீட்ரூட், முள்ளங்கி, பாகற்காய், டர்னிப், பரங்கிக்காய் என்று எல்லாவற்றிலும் பூக்களாய் மிருகங்களாய் அழகிய உருவங்கள் செய்து தனித்தனி தட்டுகளில் அடுக்க ஆரம்பித்தாள் சவுமியா.

விடுமுறை நாட்களில் பயின்ற குக்கரி வகுப்புகளும், மலர் அலங்காரமும், வெஜிடபிள் கார்விங் கோர்ஸும், இங்கு மிகவும் பயன்படுமென்று தோன்றியது.

''என்ன... வந்த முதல் நாளே கிச்சனுக்குள்ளே வந்து புகுந்திட்டீங்க... எங்க சமையல், இங்கு ரொம்பப் பிரபலம்... முதல் நாளே ஏதாவது செஞ்சு, வந்து தங்கற டூரிஸ்டை பயமுறுத்திடாதீங்க!''

சிறு கேலியுடன் ஒலித்த அந்தக் குரல், அவள் புன்னகையை சிதறடித்தது.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

வேகமாக நிமிர்ந்தபோது, அங்கு கூர்மையான பார்வையுடன் விதுரன் நின்றிருந்தான்.

''குட் மார்னிங் சார்!'' என்று முதலில் அவனை வாழ்த்தியவள், ''நான் சமைக்கலை சார்! ரெஸ்டாரண்டுல, டேபிளுக்கு அழகு சேர்க்கறதுக்காக இந்த வேலைய செய்யறேன். இப்போ வேற ஏதும் வேலை இருக்கா சார்?'' மென்மையான குரலில் கேட்டாள்.

அவன் பார்வை அந்த டேபிளிலிருந்தவைகளின் மீது பதிந்து, சட்டென்று ஒரு வியப்பு அதில் படர்ந்தது.

வேகமாகத் திரும்பியவன், ''நத்திங்! ஆனா வேலை நேரத்துல மத்தவங்களை டிஸ்டர்ப் பண்றது அநாவசியமாப் பேசிட்டிருக்கிறது... சும்மா டைமை வேஸ்ட் பண்றது, இதெல்லாம் எனக்குப் பிடிக்காது'' என்றான் அடிக்குரலில்.

''எனக்கும் தான் சார்! கருணாகரன் அங்கிள்... சாரி... மேனேஜர் சொன்ன மாதிரி ஒவ்வொரு இடமா சூபர்வைஸ் பண்ணிட்டிருக்கேன்.'' அவளும் அதே குரலில் கூறினாள்.

ஏனோ சட்டென்று அவன் முகம் உணர்ச்சிகளைத் தொலைத்து இறுகிவிட, தோள்களைக் குலுக்கியபடி வேகமாக வெளியேறினான்.

அதுவரை, தான் மூச்செடுக்காமல் இறுகி நின்றிருந்ததை, அப்போது தான் உணர்ந்தாள் அவள்.

அப்போது அருகில் வந்த எட்வின், ''பெரியவர் ரொம்பக் கோபக்காரர்... ஆனா சின்னவர் அப்படி இல்லை! தொழிலாளர் நலன்லே ரொம்ப அக்கறை எடுத்துப்பாரு... ஆனா தப்பு செஞ்சா மட்டும் ரொம்பக் கோபம் வரும்! எல்லாம் சரியா நடக்கணும்... ஒருசின்ன குறை கண்டுபிடிச்சிட்டாலும் அவ்வளவு தான்!

''தினம் நமக்கு முன்னாடி வந்து எல்லாத்தையும் மேற்பார்வை பாத்துட்டிருப்பார்...'' பயம் கலந்த மரியாதையுடன் கூறினார்.

அந்த நிமிடம், அவன் மீது மிகுந்த மரியாதை வந்தது.

செய்யும் தொழிலில் மிகுந்த ஈடுபாடும், கண்காணிப்பும், அயராத உழைப்பும் இருந்தால் தான், அதில் சாதிக்க முடியுமென்று தோன்றியது.

அங்கிருந்து நேரே ரெஸ்டாரெண்டுக்குச் சென்றபோது, சிலர் அப்போது தான் எழுந்து வந்து சோம்பலுடன் இளநீர், ஜூஸ் போன்றவற்றை அருந்திக் கொண்டிருந்தனர்.

நிறைய வெளிநாட்டுப் பயணிகள் அங்கு தங்கி இருப்பது தெரிந்தது.

புன்னகையுடன் அவர்களிடம் சென்று சர்வீஸ் திருப்திகரமாக இருக்கிறதா என்று விசாரித்து விட்டு, வெளியே வந்தாள் அவள்.

படகுத்துறைக்குச் சென்றபோது, அங்கு நின்றிருந்த ஒரு படகும் புறப்பட்டுச் சென்றிருந்தது.

பிறகு, கருணாகரன் அறைக்குச் சென்று, அவருக்கு உதவ ஆரம்பித்தாள் அவள்.

அன்று முழுவதும் வேலை லகுவாகச் செல்ல, அங்கு இயல்பாய் பொருந்தியது மனது!

மதியம் சாப்பிடும் போது விதுரனைப் பார்த்ததோடு சரி... பிறகு பார்க்க முடியவில்லை...!



ஆனால் அவனுடைய ஊடுருவும் பார்வையும், உணர்ச்சிகளைத் துடைத்த முகமும், ஏனோ வீடு திரும்பும் வரை அவளை அலைக்கழித்தன.... இனம் புரியாத ஒரு புது உணர்வை அறிமுகப்படுத்தின!

★★★

அந்த வாரக்கடைசி வரை, வேலை நேரங்கள் எளிதாகவே செல்ல, ஆர்வத்துடன் அங்கு ஒன்றிப்போக ஆரம்பித்திருந்தாள் சவுமியா.

சனி, ஞாயிறுகளில் பொழுது போகாதிருந்த நேரங்களில், ஹோட்டலில் என்னென்ன புதுமைகள் செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்ததிலும், அதற்கான புத்தகங்களைப் படித்ததிலும் பொழுது வேகமாகச் செல்ல, நேரம் போனதே தெரியவில்லை.

அந்த ஞாயிறு மாலை, சியாமளா அவளிடம் செல்லமாய் கோபித்தார்.

''முன்ன மாதிரி நீ எங்களோட சேர்ந்து கார்ட்ஸ் விளையாடலை... செஸ் விளையாடலை... சினிமா பாக்கலை... என்னாச்சுடா சவுமி உனக்கு?''

அவர் கேட்டபோது தான், தான் அறைக்குள்ளேயே அமர்ந்து யோசனைகளில் புதைந்திருந்தது புரிந்தது.

''சாரிம்மா! இப்பதானே இந்த வேலையில் சேர்ந்திருக்கேன்... அந்த இடம் எவ்வளவு அழகு தெரியுமா? அதை இன்னும் அழகாக்கணும்... யூஸ்புல்லா ஏதாவது செய்யணும்னு நிறைய யோசிட்டிருந்தேன்... அதான்! வாங்க பிரிட்ஜ் விளையாடலாமா?'' குற்ற உணர்வுடன் கேட்டாள்.

பிறகு இருவரும் கார்ட்ஸ் விளையாட, பாட்டி சீரியல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''உன் முதலாளியப் பாத்தியா சவுமி? எப்படிப் பழகுறாரு... பந்தா எதுவும் இல்லையே?

''ம்... இல்லைன்னு சொல்ல முடியாது... கொஞ்சம் பந்தாதான்... பெரியவரை நான் இன்னும் பாக்கலை... மிஸ்டர் விதுரனைத்தான் பாத்திருக்கேன்...''



''என்னடி... பிச்சைக்காரன் கிட்ட போய் கடன் வாங்கியிருக்கே?''

''வட்டியில்லாம அவன் தானே கடன் தர்றான்?''

-வைகை. ஆறுமுகம், வழுதூர்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சட்டென்று நிமிர்ந்தவர், ''என்ன பேர் சொன்னே?'' என்றார் கூர்மையுடன்.

''விதுரன்... ஏம்மா?'' வியப்புடன் கேட்டாள் சவுமியா.

''இல்லை... பேர் ரொம்ப வித்தியாசமா இருக்கேன்னு கேட்டேன்...'' மறுபடி மவுனமாக ஆட்டத்தைத் தொடர்ந்தார் பாமனா.

3

அந்த வாரம் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்க, வரவேற்பு பகுதியில் கூடுதலாக ஆள் தேவைப்பட்டதால் சவுமியாவும் உதவ ஆரம்பித்திருந்தாள்.

அதுவே பிரமோத், பபிதாவின் இனிய நட்பை பெற்றுத்தர பெரும் காரணமாயிருந்தது.

இருவருமே அன்புடன் பழக, அந்த வாரக்கடைசியிலேயே தன் மனதை அவளிடம் உரிமையுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தாள் பபிதா.

அன்று மதியம் ரெஸ்டாரெண்டுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு இருவரும் திரும்பி வந்து கொண்டிருந்தனர். வரவேற்பறையில் இன்னும் அழகிய மாற்றங்கள் செய்யலாமென்று தனக்கு தோன்றியதை கூறிக்கொண்டே வந்த சவுமியாவிற்கு பபிதாவின் கவனம் அங்கில்லை என்பது அப்போது தான் புரிந்தது.

''பபி! என்னாச்சு... தீவிர யோசனையிலேயே முகமே ஒரு மாதிரி இருக்கு...''

''இல்லை... உங்க கிட்ட எப்படி சொல்றதுன்னு...'' தயக்கத்துடன் வந்தது அவள் குரல்.

''என்ன? ஏதாவது பேமிலி பிராப்ளமா? சொல்லுங்க பபி... நான் யார்கிட்டயும் சொல்லமாட்டேன்...! அம்மாகிட்ட பகிர்ந்துக்க முடியாததைக்கூட ஒரு தோழி கிட்ட சுலபமா ஷேர் பண்ணிக்கலாம்... என்னை ஒரு பிரெண்ட்னு நினைச்சா சொல்லுங்க'' சிறு முறுவலுடன் கூறினாள்.

''நான் பிரமோத்தை விரும்பறேன்... அவரும் என்னை காதலிக்கிறாரு... ஆனா வீட்டுக்குத் தெரிஞ்சா என்னாகுமோன்னு தான் ரொம்ப பயமா இருக்கு சவுமியா!''

''ஓ! இதை நான் எதிர்பார்க்கவேயில்லை. கங்கிராட்ஸ்! எதுக்கு பயம்? நீங்க ஸ்கூல் பசங்க இல்லையே! ரெண்டு பேருமே வேலை பார்க்கிறீங்க. வாழ்க்கைன்னா இதுதான்னு அப்படின்னு தெளிவா ஒரு முடிவெடுக்கற அளவுக்கு மெச்சூரிட்டியும் இருக்கு! அப்புறம் என்ன? வீட்டிலே சொல்லிட வேண்டியது தானே?'' உற்சாகத்துடன் கேட்டாள் சவுமியா.

''நானும் பிரமோத்தும் சின்ன வயசுல இருந்தே ஒண்ணாய் படிச்சவங்க. நல்ல பிரெண்ட்ஸ். எங்க வீட்டில எல்லாருக்கும் அவரை நல்லா தெரியும்... நைட் லேட்டா வந்தா பிரமோத் கூட வந்தா சரின்னு சொல்ற அளவுக்கு அவங்களுக்கு எங்க மேல நம்பிக்கை! அதனால தான் பயமாயிருக்கு'' கலக்கத்துடன் கூறினாள்.



''இதுக்குப் போய் பயப்படலாமா? தெரியாத ஆளா இருந்தாலும் பரவாயில்லை. உங்க குடும்பத்துல நல்லா பழகினவரு. அப்புறம் என்ன? இருங்க. பிரமோத்தை இன்னிக்கு நல்லா கிண்டல் பண்றேன்...''

சவுமி வேகமாக சென்று பபி தடுக்கும்போதே, பிரமோத்தின் கைகளை பிடித்து வாழ்த்தினாள். அவனை உரிமையுடன் கேலி செய்து சிரித்த போது, பின் பக்கம் திடீரென்று ஒரு குரல் கேட்டது.

''ஓஹோ... இப்ப தான் விஷயமே புரியுது கங்கிராட்ஸ்!'' விதுரனின் குரலில் கேலி கசிந்தது.

''தேங்க்யூ சார்'' என்றபடி, இருவரும் தர்ம சங்கடத்துடன் புன்னகைத்தனர்.

''நான் வரேன் பபி'' என்று சவுமியா கிளம்ப, அவன் விழிகள் சுவாரசியம் கலந்த குறும்புடன் அவளையே தொடர்ந்தன.

அந்த வாரமே, அவளுடைய யோசனைப்படி வரவேற்பறையில் பெரிய பூ ஜாடியும் அதில் நிஜ மலர்களும், செயற்கை நறுமணம் தெளிக்கப்பட்டு அலங்கரித்தன.

அதன் இருபுறமும், இரு பெரிய பாவை விளக்குகள் பிராஸோவின் பளபளப்புடன் மின்ன, அந்த இடமே அழகானது போல் ஒரு உணர்வு.

வரவேற்பறையில் புதிதாக மாட்டப்பட்டிருந்த ஓவியங்களும் ராஜஸ்தான் எம்ப்ராய்டரியும் வாசலின் இரு புறமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டெரகோட்டா யானையும், குதிரையும் அழகிற்கு அழகு சேர்த்தன.

அன்று, ஹோட்டலுக்கு பெரிய முதலாளி வித்யாதரன் வரப்போவதாக கருணாகரன் கூறி இருந்தார்.

மதியம் வருகை தந்த வித்யாதரன், பணக்காரச் செழிப்புடன் அமர்த்தலாகத் தெரிந்தார். விதுரனைப் போலவே அவரும் அழுத்தமானவரென்று தோன்றியது. ஆனால், வரவேற்பறையில் தெரிந்த மாற்றத்தைக் கண்டு விசாரித்தவர், அவளிடம் தனியாகப் பாராட்டினார்.

''உன் இன்டீரியர் டெகரேஷன் நல்லாருந்ததும்மா! இது மாதிரி ஏதாவது நல்லா ஐடியா இருந்தா கருணா கிட்ட சொல்லு... விதுரனுக்குப் பிடிச்சிருந்தா அதை செய்யலாம்... நீ தமிழ் தானே? எந்த ஊரில இருந்தீங்க?''

''விருதுநகரிலே சார்... ரெண்டு மாசம் முன்னாடி தான் இங்கே வந்தோம்...'' பணிவுடன் கூறினாள்.

''ஓ! சரி, நான் கிளம்பறேன் கருணா! வேலு எனக்காக வெயிட் பண்ணிட்டிருப்பான்'' என்றபடி கிளம்பினார் அவர்.

மதியம் ஹோட்டலுக்கு வந்த விதுரனின் முகத்தில், வரவேற்பறையில் நிகழ்ந்திருந்த மாற்றத்தைக் கண்டதும் சிறு மின்னல்!

எல்லா இடங்களையும் மேற்பார்வையிட்டபடி வந்தவனுக்கு நீச்சல் குளத்தருகே சவுமியாவைக் கண்டபோது, அவனறியாமல் மனதிற்குள் பெரும் சலனம் ஆட்படுத்த ஆரம்பித்தது.

அவளுடைய அழகா... பொறுப்புணர்ச்சியா... வேலையில் அவள் காட்டுகின்ற திறமையா... ஏதென்று இனம் பிரிக்க முடியாமல், அவனுக்குள் ஒரு மாற்றத்தை விதைக்க ஆரம்பித்திருந்தாள் அவள்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''நீச்சல் டிரஸ்ல ஏன் நடிக்க மறுத்துட்டீங்க?''
''அதில் தொப்புள் தெரிய மாட்டேங்குதே.. அதான்
-வைகை. ஆறுமுகம், வழுதூர்.



நதியில் விழும் பிம்பம் போல், மனதில் கலங்கலாய் அவள் உருவம்!

சட்டென்று தலையைக் குலுக்கி, தன்னை மீட்டு வந்தான் அவன்.

அது சீசன் நேரம் என்பதால், நீச்சல் குளம் பரபரப்பாக இருந்தது.

வெளிநாட்டுப் பயணிகள் பலர் உடல் முழுவதும் லோஷனைத் தடவிக்கொண்டு சுகமான இளம் வெயிலில் 'சன் பாத்' எடுத்துக் கொண்டிருந்தனர்.

ஓய்வெடுக்கும் நேரத்தில் அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப இளநீர், ஜூஸ் என்று ஓட்டல் பணியாளர்கள் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அனைவருக்கும் 'ஹாய்' சொல்லிவிட்டு இதழ்களில் முறுவலுடன் வந்து கொண்டிருந்தாள் சவுமியா.

நிர்வாகத்தினரின் நேரடி கவனிப்பும் கண்காணிப்பும் எப்போதும் வந்து தங்குகின்ற சுற்றுலா பயணிகளிடையே ஒருவித நட்புணர்வையும் அன்பையும் பெற்றுத்தரும் என்பது அவளின் நம்பிக்கை.

அப்படி வரும்போது தான் அவள் விதுரனை சந்திக்க நேர்ந்தது. அவன் மென் தீண்டலையும் அனுபவிக்கும் வாய்ப்பு கிடைத்தது!

எதிர்பாராமல் திடீரென்று ஒரு இடத்தில் கால் வழுக்கிவிட அவள் தடுமாறிய போது தான் இரு வலிய கரங்கள் சட்டென்று அவளை தாங்கிப்பிடித்து, இரும்பின் உறுதியுடன் நிறுத்தின.

''ஓ... தேங்க் யூ! இ்ழே லோஷன் சிந்தியிருந்திருக்கு... நான் தான் அதை கவனிக்கலை... சாரி...''

பதற்றத்துடன் நிமிர்ந்தவள், சத்தியமாக அங்கு விதுரனை எதிர்பார்க்கவில்லை என்பதை அவளின் வியந்த விழிகள் கூறின.

''ஈஸி... ஈஸி சவுமியா... ஏன் இவ்வளவு அவசரம்? ஒண்ணும் பதட்டப்பட வேண்டாம்... வேலைகளை மெதுவாகவே கவனிக்கலாம். நீ நல்ல அட்மினிஸ்ட்ரேட்டர்னு எங்க எல்லாருக்கும் தெரியும். டேக் கேர்...'' என்றான் மென்மையான குரலில்!

முதன் முதலாக நேர்ந்த அவனது தொடுகையும், மயிலிறகாய் வருடிய வார்த்தைகளும் அவளை பலமிழக்கச் செய்திருந்தன.

சட்டென்று அவனுக்கு பதில் கூற வாய் வராமல், வார்த்தைகள் தொண்டியடித்தன...

அவனே பேசினான்...''அப்புறம் வந்த வேலையை மறந்திட்டேன்... ரிசப்ஷன் அலங்காரம் பத்தி கருணா அங்கிள் சொன்னாரு! உடனே



பண்ட்ஸ் அலாட் பண்ண சொன்னேன்... நல்லா வந்திருக்கு! குட்... அதை பாராட்டத்தான் வந்தேன்...''

உல்லாச குரலில் அவன் கூறிய போது, சட்டென்று மனம் லேசானது போல் ஒரு உணர்வு! எவ்வளவு நீரையும் உறிஞ்சக் காத்திருக்கும் ஆற்றுப்படுகையின் உலர்வு சட்டென்று பொங்கிய நீர்ப்பெருக்கில் நனைந்தது போல்...!

''தேங்க்யூ சார்...'' கூச்சத்துடன் அவள் கூறிய போது, இரு கன்னங்களிலும் திடீரென்று ரோஜாக்கள் மலர்ந்தன.

முதன் முதலாக, வெட்கப்பட்டால் கன்னம் சிவக்கின்ற ஒரு பெண்ணைப் பார்த்தவனுக்குள் இனம் புரியாத பரவசம்!

ஒரு கணம் இருவருக்கிடையேயும், சிறு மவுனம் நீடித்தது.

''சார்... உங்களை பாக்க பெரிய முதலாளி வேலு வந்திருக்காங்க...'' என்றபடி வந்தார் கிருஷ்ணன் குட்டி.

இருவருக்கிடையேயும் கண்ணுக்கு புலப்படாமல் நெய்யப்பட்டிருந்த ஒரு பனித்திரை சட்டென்று விலக, ஒரு விதிர்ப்புடன் கேடரிங் செக்ஷனுக்கு சென்றாள் அவள்.

அங்கு போனபோது எப்போதும் பிரியத்துடன் வரவேற்கும் மாதவன் நாயர், ஒரு ஓரமாக சுருண்டு படுத்திருந்தார்.

''என்னாச்சு மாதவேட்டா?... உடம்பு சரியில்லையா? சிக் ரூமுக்கு போக வேண்டியது தானே? ஏன் இங்கே படுத்திருக்கீங்க?'' அக்கறையுடன் வினவினாள்.

''இல்லை மோளே! கொஞ்சம் காய்ச்சல்! ஆனா இன்னும் கொஞ்ச நேரத்திலே ஈவினிங் டிபனுக்கு ஆட்கள் வரும்... வெள்ளைக்காரங்க எல்லாருக்கும் தோசை தான் வளர இஷ்டம்... அதான்! இப்போ ஆரம்பிக்கணும்'' மெலிதாகப் புன்னகைத்தபடி கூறினார்.

''நீங்க போய் முதல்லே மாத்திரை போட்டுட்டு ரெஸ்ட் எடுங்க... இத்தனை பேர் இருக்காங்க... நாங்க இங்கே பார்த்துக்கறோம்...''

அவரை கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தவள், தோசை வார்க்கும் வேலையில் இறங்கினாள்.

பிரைட் ரைஸிற்காக நீளவாக்கில் மெலிதாக நறுக்கி வைத்திருந்த காய்கறிகளை எடுத்து லேசாக வதக்கித் தரும்படி கூறியவள் வரிசையாக தோசை வார்க்கத் தொடங்கினாள்.

இதய வடிவிலும், ஆப்பிள் வடிவிலும் தோசைகளை ஊற்றியவள், மேலே வதக்கிய காய்கறிகளைத் தூவி சிறிது நெய்யும் மிளகுத்தூளும் போட்டு திருப்பிப்போட்டு எடுத்து தட்டுகளில் அடுக்கிய போது, அந்த சமையலறையே மணத்தது.

அன்று, வெஜிடபிள் தோசை வேகமாகத் தீர்ந்து போனது.

செய்முறைகளை காட்டிக் கொடுத்து அதே போல் செய்யும்படி பணித்துவிட்டு வெளியில் வந்தபோது வியர்த்துப் போயிருந்தாள் அவள்.

நேரே ரெஸ்ட் ரூமுக்குச் சென்று முகம் கழுவி தன்னை சீர்படுத்திக் கொண்டவளுக்கு பொழுது வேகமாக பறந்தது.

பிறகு வரவேற்பு பகுதிக்கு வந்தபோது தான், எதிரில் வந்து கொண்டிருந்த விதுரனையும் ஒரு வயதான மனிதரையும் சந்தித்தாள்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவள்.

அவளைக் கண்டதும் புன்னகையுடன் அவ்வரை அறிமுகப்படுத்தினான் விதுரன்.

''மிஸ் சவுமியா... இவர் தான் ராஜவேலு அங்கிள்... அப்பாவோட பார்ட்னர்... உங்க பாஸ்!'' என்றவன் அவரிடம் திரும்பினான்.

''அங்கிள்! நான் சொல்லலை... அது இவங்க தான்! மிஸ் சவுமியா... ரொம்ப டேலண்டட்! நம்ம ஹோட்டல்லே புதுமையா நிறைய மாற்றங்கள் செஞ்சு அதுக்கான பெரிய வரவேற்பையும் பெத்துட்டிருக்கவங்க...'' உற்சாகத்துடன் கூறினான்.

''வணக்கம் சார்...'' அவள் கை குவித்து நிமிர்ந்தபோது அவருடைய முகமே சுருங்கி கண்கள் ஏனோ வெறுப்பை உமிழ்வது போல்!

முதலில், ''ம்...ம்...'' என்று அவளுடைய வணக்கத்தை அலட்சியமாக ஏற்றுக் கொண்டார் அவர்.

பிறகு ''வெயிட் மை பாய்! என் பொண்ணு சீமா இதுக்காக தான் படிக்கப்போயிருக்கா... பாரின்லேருந்து அவ வரட்டும்! அப்புறம் பாரு... அவ திறமையை!'' ஒருவித கர்வத்துடன் கூறினார்.

''பாப்போம் அங்கிள்! அவ இதை கத்துட்டு வராளா... இல்லை பேஷன் கத்துக்கிட்டு மாடலா வராளான்னு பாப்போம்...'' குறும்புடன் அவன் கூற, அவர் முகம் சட்டென்று கருத்தது.

அன்று மாலையில் அவளும் சியாமளாவும் அருகிலிருக்கும் கோவிலுக்குச் சென்றிருந்தனர். சுவாமி கும்பிட்டுவிட்டு பிரகாரத்தில் அமர்ந்தபோது அங்கிருந்த தூய்மையும் அமைதியும் சவுமியாவை வியப்பில் ஆழ்த்தின.

நம் ஊர் கோவில்களில் இரைச்சலும், குப்பைகளும் ஏனோ அதிகமாக இருப்பது போல் ஒரு பிரமை! நம் மக்களுக்கு வீட்டு விஷயங்களை அலசும் ஒரு அரட்டை அரங்கமாகவே கோவில் மாறி விட்டிருப்பதும் ஞாபகம் வருவதாய்!

கோவில் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று தோன்றியது.

மன நிம்மதியை நாடி இங்கு வருபவர்களுக்கு, நிம்மதியும் ஈடுபாடும் உடனே கிடைத்துவிடுவதும் புரிந்தது.

அப்போதுதான், பிரகாரம் சுற்றியபடி வந்த பபியையும் வயதான ஒரு பெண்மணியையும் அவள் கவனித்தாள்.

''சவுமி...'' உற்சாக குரல் கொடுத்தபடி அருகில் வந்தவளை ''உஷ்'' என்று அடக்கினாள்.

''மத்தவங்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாமே! நான் வெளியே வெயிட் பண்றேன்... நீயும் அம்மாவும் அங்கே வாங்க பேசலாம்'' என்றபடி வாசலுக்குச் சென்றாள்.

சிறிது நேரத்தில் இருவரும் வந்துவிட, பரஸ்பரம் அறிமுகம் முடிந்து அவரவர் மொழிகளில் மெல்ல விசாரித்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

இப்போது மலையாளம் நன்றாய் புரிய ஆரம்பித்திருப்பதால், சவுமியாவை பற்றி பபியின் அம்மாவும் பாராட்டி பேசுவது சியாமளாவிற்கு புரிந்தது.



பிறகு தங்கள் வீட்டிற்கு அவசியம் வர வேண்டும் என்ற கோரிக்கையுடன் இருவரும் விடைபெற்றனர்.

வீட்டிற்கு வந்தபோது, மனதிற்குள் இனம் புரியாத ஒரு அமைதியும் சாந்தமும் படர்ந்திருப்பது போல் தோன்றியது.

ஹோட்டல் மேனேஜ்மெண்ட் சம்மந்தமாக ஒரு புத்தகத்தை எடுத்துபடிக்க ஆரம்பித்தாள் அவள்.

ஆனால் அந்த சீமா எப்படி இருப்பாள் என்று யோசிக்க ஆரம்பித்தது நெஞ்சம்!

## 4

மறுநாள் காலையில் ஹோட்டலுக்குச் சென்றதுமே, மாதவன் நாயர் அவளைத் தேடி வந்து விட்டார்.

''என்டே பொன்னு மோளே! நேத்து நீ செஞ்சு தந்த வெஜிடபிள் தோசை வளர நன்னாயிட்டு இருந்நதா, எல்லாரும் பறஞ்சது... உன்னோட டேபிள் ]லங்காரமும் ஏ ஒன்! வளர நன்னி மோளே!'' நன்றியுடன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு கூறினார்.

''மாதவேட்டா! இதென்ன பெரிய விஷயமா? இதுவும் என்னோட டியூட்டி தானே? உங்களுக்கு உடம்பு சரியில்லை... அதான் கொஞ்சம் ஹெல்ப் பண்ணினேன்!'' சிறுமுறுவலுடன் கூறினாள் அவள்.

''ஒரு விண்ணப்பம்! இனி என்னை மாதவேட்டான்னு விளிக்கண்டாம்... அச்சான்னு விளிச்சாமதி! அதே எனக்கும் இஷ்டமாக்கும்... கேட்டயோ?''

கண்களில் கனிவுடன் அவர் கேட்டபோது, மனம் ஒரு கணம் ஆடிப்போனது.

சிறு வயதிலேயே தந்தை இறந்து போய், ''அப்பா''வென்று யாரையும் அழைக்க முடியாமல், சக தோழிகள் தங்கள் தந்தையை அறிமுகம் செய்கின்ற போது, தந்தை எனும் உறவிற்கு தான் ஏங்கியது, நினைவு வந்தது.

அதை வெளிக்காட்டவும் முடியாமல், ஏக்கத்துடன் வலித்து ரணமாகிய மனதிற்கு யாரோ மாயக்கரம் கொண்டு மயிலிறகால் வருடியது போல் ஒரு உணர்வு!

சட்டென்று விழியோரங்கள் கசிந்து விட நிமிர்ந்தவள், ''அதுதான் உங்களுக்கு சந்தோஷம்னா, இனிமே அப்படியே கூப்பிடறேன்!'' நெகிழ்ச்சியுடன் கூறினாள்.

அவர் விடைபெற்றுச் செல்ல, அப்பா என்ற ஒரு உறவுக்காக அனுசரணையான அன்பிற்காக ஏங்கிய மனது, அவரை உடனே தந்தையாக ஏற்றுக் கொண்டது.

ஆனால், அந்த வருத்தமே தன்னை நெருங்க விடாமல், தாய்க்கு தாயாய், தந்தையாய் வளர்த்த தாயின் நினைவில் கண்கள் பனித்தன.

பிறர் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் அதற்காக எதுவும் செய்யலாம் என்று கூறி பாசத்தையும், தெளிவையும், கனிவையும் ஊட்டி வளர்த்தவரை நினைத்தால் பிரமிப்பாய்...!

அந்த நிமிடம் பூஜையறையில் இருக்கும் தந்தையின் படம் உடனே



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

நினைவிற்கு வந்தது. ஆனால் சியாமளா விதவைத் தோற்றத்துடன் ஒரு நாளும் இருந்ததில்லை.

சிறிய பொட்டும், மங்களகரமான முகமும், அவரை நித்ய சுமங்கலியாகவே வாழ வைத்திருந்தன. வாழ்க்கையில் ஏற்படும் துயரங்களையும், வேதனைகளையும், வலிகளையும், சிறிது தள்ளி நின்று வேடிக்கை பார்க்கும் முதிர்ச்சியும், பக்குவமும் உடையவராக இருந்தார் அவர். தன் வேதனைகளை அவர் ஒரு நாளும் வெளிப்படுத்தியதுமில்லை.

எப்போதுமே அமைதியும், கனிவான புன்னகையும், ஒருவித நிமிர்வுமாய் தன்னைச் சுற்றி ஒரு கம்பீர வளையத்தை அமைத்துக் கொண்டிருப்பவர் அவர்.

தாயின் நினைவுகள் மனதை கனக்கச் செய்துவிட ஒரு பெருமூச்சுடன் திரும்பினாள் அவள்.

''என்ன... அவ்வளவு நீளமாப் பெருமூச்சு விடறீங்க? எதிர்லே வரவங்களைக் கூட கவனிக்காம அப்படி என்ன யோசனை?'' குறும்புடன் கேட்டான், எதிரில் நின்றிருந்த விதுரன்.

''ஓ... சாரி! ஏதோ ஞாபகம்... என்ன விஷயம் சார்?''

''ஏதோ ஞாபகம்னா பயமா இருக்கே! நீங்க... யாரையாவது விரும்பறீங்களா? ஏன் கேக்கிறேன்னா, ஒரு ஆணழகன் என்னை மாதிரி... எதிர்லே வரும்போது கண்டுக்காம வேற ஏதோ ஒரு யோசனையில இருக்கீங்கன்னா, அதுக்கு இந்த மாதிரிதானே ஏதாவது அர்த்தம் இருக்கணும்...'' சீண்டியபடி அவன் விழியோரங்கள் இடுங்கின.

''சாரி சார்... அந்த மாதிரி விஷயங்கள்லே எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை... காதல்... ரொம்ப சுகமானதுன்னாலும், சுய நலமானதுங்கறது என்னோட அபிப்ராயம்... இருபது வருஷம் நம்மளை உயிரா வளர்த்தவங்களை ஒரே நொடியில மறக்க வச்சு, நம்ம அறிவை பலவீனப்படுத்தற, பலமான ஒரு மாய வித்தை அப்படின்னு நான் நினைக்கிறேன்... ஆனா அதுக்காக மத்தவங்க காதலிச்சா எதிர்க்க மாட்டேன்...''

''ஓ... உங்களுக்கு இந்த அளவு பேசத் தெரியுமா? ஏங்க உங்களுக்கு காதலர் மேல, இப்படி ஒரு திடீர் கசப்பு?''

''அப்படி எல்லாம் இல்லை! சிலர் பெற்றோரை மதிக்காம ஓடிப்போய் பின்னாடி அவஸ்தைப்படறாங்களே, அதுக்கு காரணம் இந்த காதலர் தானே... அதனால சொன்னேன்...''

''ஓ.கே... அத விட்டுடலாமே! மாதவன் சார் சொன்னாரு... உங்க வெஜிடபிள் தோசை, ரொம்ப பேமஸ் ஆயிடுச்சாமே... தேங்க்ஸ்! அப்புறம் இந்த மாதிரி கிரியேட்டிவா ஏதாவது ஐடியாஸ் இருந்தா என்கிட்ட ஷேர் பண்ணிக்கலாம்...''

''நானே உங்ககிட்டே அதப்பத்தி பேசணும்னு இருந்தேன் சார்...''

''ஒரு நிமிஷம்... இந்த 'சார்' எல்லாம் வேணாமே! விதுரன்னு கூப்பிடலாமே? அதான் எனக்கு பிடிச்சிருக்கு...''

''சாரி சார்! என்னால அப்படியெல்லாம் மரியாதை இல்லாம கூப்பிட முடியாது''



''ஏங்க...? நான் என்ன உங்களை 'டேய் விதுரன்'னா கூப்பிட சொன்னேன். இதிலே மரியாதையின்மை எங்கே வந்தது?''

ஒரு நிமிடம் மவுனம் காத்தவள்'' சார்! நம்ம கார்டன்லே அங்கங்கே சின்ன சின்னதா கூண்டு மாதிரி செஞ்சி லவ் பேர்ட்ஸ், புறா, கிளி எல்லாம் வளர்க்கலாமே! என்னோட ஐடியா அதிகப்பிரசங்கித்தனமா இருந்தா மன்னிச்சிடுங்க...'' என்றாள்.

''வெரிகுட் ஐடியா! அப்பாகிட்டே சொல்லிட்டு அதுக்கு ஏற்பாடு பண்றேன். அப்புறம்?'' ஆர்வத்துடன் கேட்டான்.

''நம்ம் ஹோட்டல்லே தங்க வரவங்க கிட்டே, அவங்க பர்த்டே என்னிக்குன்னு கேட்டு தனியா பைல் பண்ணி வச்சோம்னா அந்தந்த மாசத்துக்கு நோட் பண்ணி கார்ட்ஸ் அனுப்பிடலாம்.

சின்ன விஷயம்னாலும், இந்த மாதிரி செய்யும் போது நம்ம பர்த்டேய மறக்காம கிரீட்டிங்ஸ் அனுப்பி இருக்காங்களேன்னு இந்த ஹோட்டலை சுலபத்துல மறக்க மாட்டாங்க... செலவுதான்! ஆனா லாபம் வர வைக்கிற செலவுன்னு நான் நினைக்கிறேன்...''

யோசனையுடன் நின்றிருந்தவனின் முகம் சட்டென்று மலர்ந்தது.

''நல்ல யோசனை தான்! செயல்படுத்தலாம்!'' என்றவன் ''தேங்க்ஸ் சவுமியா! இந்த மாதிரி என் முன்னேற்றத்துலே அக்கறையா, எனக்கு யோசனைகள் சொல்றதுக்காகவாவது, நீங்க என் கூடவே... சாரி ரொம்ப நாள் இங்கே வேலை பாக்கணும்னு நான் விரும்பறேன்...'' புரியாத ஒரு பாவனையுடன் விழிகள் மின்ன கூறினான்.

''எனக்கு வேலை மாத்திப் போற ஐடியா எதுவும் இல்லை சார்... இங்கே எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. நல்ல மனுஷங்க. பாதுகாப்பான ஒரு கூடு மாதிரி உணர்வு. இதை விட்டுட்டு யாருமே போக மாட்டாங்க...''

எனும்போதே கூடிய சீக்கிரமே இந்த இடத்தை விட்டு வெகு தூரம் செல்வதற்கு தான் விரும்பப் போகிறோம் என்பதை அவள் உணரவில்லை.

உடனே அவனிடம் புன்னகையுடன் தலையசைத்து விடை பெற ''என்ன இவ்வளவு அவசரம்...?'' ஒரு மாதிரி குரலில் கேட்டான் அவன்.

''எங்க பாலசுக்கு அனாவசியமா அரட்டை அடிக்கறது வேலை நேரத்தை வேஸ்ட் பண்றது. இதெல்லாம் பிடிக்காது சார்!'' இதழ்கள் குறும்புடன் வளைய குறுகுறுக்கும் விழிகளுடன் கூறினாள் அவள்.

அவள் கிண்டலை உணர்ந்து ''ம்... சரி... போங்க மேடம் '' விழிகள் மின்ன விடை கொடுத்தான் விதுரன்.

வானில் மெதுவாக நடந்தபோது, ரகசியமாக புன்னகைத்தது விதுரனின் மனது. இது போல தன் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பவள் சமயோசிதமாக செயல்படுபவள் தன் காரியம் யாவிலும் கை கொடுப்பவள்... தனக்கு மனைவியாக வந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணும் போதே நெஞ்சம் சிலிர்த்துப்போனது.

தன் மனம் புரிய ஆரம்பித்ததும், அவனுக்குள் சுகமாய் ஒரு தவிப்பு!

அன்று முழுவதும் சவுமியாவின் மனமும் ஏனோ மகிழ்ச்சியில் சிறகடித்துக் கொண்டே இருந்தது.

நாட்கள் வேகமாக விரைந்து செல்ல அவனுக்கும் அந்த



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

ஹோட்டலுக்கும் இடையே கண்ணுக்குத் தெரியாத ஒரு பந்தமும் அக்கறையும் இழையோட ஆரம்பித்தன.

அவளுடைய வெஜிடபிள் கார்விங்கும், நேர்த்தியான மலர் அலங்காரமும் அனைவரின் பாராட்டையும் பெற்றதில் நெகிழ்ந்து போயிருந்தான் அவன்.

அவள் கூறியபடி நிறைய கூண்டுகள் செய்து கொண்டு வரப்பட்டன.

தோட்டத்தில் லவ் பேர்ட்ஸ், கிளிகள், புறாக்கள், ஆஸ்திரேலியன் பேர்ட்ஸ் என்று பல வண்ணப்பறவைகள் விதவிதமான மொழிகளுடன் சிறகு விரித்து வந்து தங்குபவர்களை கவர ஆரம்பித்திருந்தன.

ஒரு நாள் பிரமோத்தும் பபியும், எப்போதும் போலில்லாமல் வருத்தமாக இருப்பது போல் தோன்றியது சவுமியாற்கு.

உணவு இடைவேளையில் ''என்னாச்சு பபி? ரெண்டு பேரும் இன்னிக்கு மவுன விரதமா?'' கேலியுடன் கேட்டாள் சவுமியா.

''இல்லை சவுமியா! எங்க வீட்டில நாங்க விரும்பறது தெரிஞ்சு இன்னிக்கு காலையில இருந்து ஒரே பிரச்சனை. என்னை வேலைக்குப் போக வேண்டாம்கிறாங்க. ஒரு மாத நோட்டீஸ் கொடுத்துட சொல்லி, அப்பா தீர்மானமா சொல்லிட்டாங்க. பயமா இருக்கு! எங்க சொந்தத்துல ஒருத்தர் இருக்காரு. பாங்க்லே வேலை பாக்கறாரு. அவரை எனக்கு முடிக்க பாக்கறாங்க!'' கண்ணீருடன் கூறினாள்.

ஆதரவுடன் அவளுடைய கையைப்பிடித்து மெதுவாக அழுத்தினாள் சவுமியா.

''கவலைப்படாதே பபிதா! அப்பா, அம்மா விருப்பத்துக்கும் நாம மதிப்பு குடுத்து தான் ஆகணும். ஆனா நீ காதலிச்சிட்டியே. என்ன செய்யறது? அவங்களும் அதை யோசிக்கணும். கருணாகரன் அங்கிளை விட்டு உங்க வீட்டில பேச சொல்லலாமா?''

''அதான் புரியலை. பிரமோத்கிட்டே முதல்லே இதுபத்தி பேசறேன். அப்புறமா முடிவு பண்ணலாம்.'' கம்மிய குரலில் கூறினாள் அவள்.

அந்த வாரம் முழுவதுமே சீசன் என்பதால் நிற்க நேரமின்றி பொழுது காற்றாய் பறந்து சென்றது.

அடுத்த மாதம் ஓணம் பண்டிகை வருவதால், ஊரே கலகலப்பாக இருந்தது.

அதற்கான ஏற்பாடுகளை எப்படி செய்வது என்று எல்லோரும் கூடிப்பேசி கொண்டிருந்தனர். ஹோட்டலிலும் அலங்காரங்கள் செய்ய முடிவெடுத்தனர்.

பபி வேலையை விட்டு விலகுவதாக நோட்டீஸ் கொடுத்திருந்தாள்.

அந்த வேலைக்கு வேறு ஒருவரை நியமிக்க விளம்பரப்படுத்தி இருந்தனர்.

அன்று பிரமோத் மிகவும் சோர்ந்து தெரிந்தான். தங்களின் காதல் இவ்வளவு பிரச்சனைகளை ஏற்படுத்தும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

அவனுடைய வீட்டிலும் அவர்களுடைய காதலை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இருவருக்கும் வாழ்க்கையே சோகமாக தெரிய அவர்களிடம் பேசி சிரிக்க வைத்து விட்டு கேடரிங் செக்‌ஷனுக்கு சென்றாள் அவள்.



அவள் உள்ளே நுழைந்தபோது மாதவன் நாயரின் ''அம்மே'' என்ற இரைச்சல் பெரிதாக கேட்டது.

வேகமாக ஓடிச்சென்று பார்த்தால் அவருடைய விரல் வெட்டுப்பட்டிருக்க வலியில் துடித்துக் கொண்டிருந்தார் அவர்.

பெரிய மீனை வெட்டும்போது அடிபட்டு விட்டதாக மற்றவர்கள் பதட்டத்துடன் கூறினர். முதலுதவிகள் பற்றி படித்திருந்ததால் அந்த விரலை அப்படியே எடுத்து ஒரு சுத்தமான பைக்குள் போட்டு ஐஸ் கட்டிகள் நிறைந்த ஒரு பாத்திரத்தில் அதை வைத்து மூடி எடுத்துக் கொண்டு தாமதம் செய்யாமல் உடனே கிளம்பினாள் சவுமியா.

பிரமோத்தையும் துணைக்கு அழைத்துக்கொண்டு மாதவனுடன் மருத்துவமனைக்கு சென்றாள்.

ரத்த சேதம் அதிகமிருந்தாலும் உடனே விரலை பொருத்தி சர்ஜரி செய்ய ஏற்பாடுகள் நடக்க அவருக்கு ரத்தம் தேவைப்படுவது தெரிந்தது.

அவருடைய ரத்த வகையும் தன் தாயின் ரத்தமும் ஒன்று என்பதால் உடனே போன் செய்து சியாமளாவை வரவழைத்தாள் சவுமியா.

பிரமோத்தும் அவளுமாக கையில் இருந்த பணத்தை அட்வான்சாக கட்டினர்.

ஹோட்டல் ஊழியர் ஒருவரும், சியாமளாவும் ரத்தம் கொடுக்க உடனே அறுவை சிகிச்சை நடந்தது.

சியாமளாவை அனுப்பிவிட்டு அவள் திரும்பி வரும்போது தான் விதுரன் பதட்டத்துடன் வேகமாக உள்ளே வந்து கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும் அருகில் வந்தவன் ''சவுமியா'' கருணா அங்கிள் எல்லாம் சொன்னாரு. உடனே சமயோசிதமா செயல்பட்டு மாதவ வேட்டாவை இங்கே அழைச்சிட்டு வந்து அட்மிட் பண்ணினதுக்கு தேங்க்ஸ்! இப்ப அவர் எப்படி இருக்காரு?'' தவிப்புடன் கேட்டான்.

''தெரியலை! சர்ஜரி நடந்துட்டிருக்கு. உடனே பிளட் தேவைப்பட்டது. எங்க அம்மாவும் அதே குரூப்புங்கறதால உடனே வரவழைச்சேன். அப்புறம் திலகனும் அதே குரூப்புன்னாரு. ரெண்டு பேருமே ப்ளட் கொடுத்தாங்க. ப்ராப்ளம் ஒண்ணும் இருக்காதுன்னுதான் நினைக்கிறேன்'' ஓய்ந்து போய் கூறினாள்.

உடனே கவுண்டருக்கு சென்று பணத்தை கட்டிய விதுரன், அவர்கள்



என்ன! உன் மாமியார்-ஒரு நடமாடும் மிருககாட்சி சாலையா?

ஆமாம்! அவங்க உட்கார்ந்திருந்தா குரங்கு... எழுந்தா எருமை... நடந்தா ஆமை!''

-ரு.அருணாசலம், தென்காசி.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

கட்டிய பணத்தை கருணாகரனிடம் வாங்கிக்கொள்ள சொன்னான்.

மாதவன் நாயரின் குடும்பத்தினர் எல்லாரும் வெளியூரில் இருப்பதால் உடனே தகவல் கொடுத்துவிட்டு, அவருடன் ஹோட்டலில் வேலை செய்யும் திலகனையும் துணைக்கு ஏற்பாடு செய்தனர்.

எல்லாரும் முடிந்து மாதவன் நாயரை அறைக்கு அழைத்து வரும் வரை பரிதவித்து நின்ற சவுமியாவை பார்த்தபோது அவனுக்குள் பெரும் ஆச்சரியமும் வியப்பும் கை கோர்த்தன.

அவள் வேலைக்கு சேர்ந்து இரண்டு மாதங்கள் ஆகியிருக்கும்.

அதற்குள் மற்றவர்களிடம் அவள் காட்டிய அன்பும் அனுசரணையும் பரிவும் மனிதநேயமும் அவனுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

ஆனால் காதலைப்பற்றிய அவளின் கணிப்பு, அவனுள் யோசனையை படர செய்த அதே நேரம் அவனுடைய இதயத்தில் கூடு கட்டி உடனே குடி புகுந்தாள் அவள்.

அன்று அவள் விழிகள் பேசும் சிறு மவுன அசைவு கூட புது மொழியை அவன் இதயத்திற்குள் அறிமுகப்படுத்தியது.

தனக்குள் விளைந்த மாற்றத்தை விநோதமான ஒரு சிலிர்ப்புடன் ஏற்றுக் கொண்டவன் சில காலமாகவே அவளிடம் தன்னை இழக்க ஆரம்பித்திருந்ததை அன்று தான் பரிபூரணமாக உணர்ந்து கொண்டான்.

## 5

மாதவன் நாயரை, மருத்துவமனைக்குச் சென்று தினமும் பார்த்து வந்தாள் சவுமியா.

அவளைக் கண்டதும், நெகிழ்ந்து போய் கைகளைப் பிடித்துக் கொண்டவருக்குப் பேச்சே வரவில்லை.

அவருக்குத் துணையாக, அவர் மனைவியும் மகளும் வந்திருந்தனர்.

அவர்களிடம் பெருமையுடன் அவளை அறிமுகப்படுத்தியவர், அவளுடைய அம்மாவிற்கு தன் நன்றியைக் கூறச் சொன்னார்.

அவருடைய மனைவி கண்ணீருடன் சவுமியாவைப் பிடித்துஅணைத்து நன்றி கூறினார்.

அப்போது அவர் வேகமாகப் பேசிய மொழி சரியாகப் புரியாவிட்டாலும், அதில் தொனித்த அன்பும், நன்றியுணர்ச்சியும், மௌன மொழியாய் அவளுக்கு நன்றாகப் புரிந்தன.

அவர்களுக்கு ஆறுதல் கூறியவள், ''அச்சா! நீங்க இவங்களோட ஊருக்குப்போய் ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறமா வாங்க... இங்கே நாங்க பார்த்துக்கறோம்'' என்றாள் மென்மையாக.

''மோளே! நான் ஹோட்டலுக்கு வரும்... என்னால் ஒரு நாள் கூட ஜோலி இல்லாது இருகக முடியாது.... சும்மாயிட்டு எல்லாரையும் மேற்பார்வை செய்யும்... சின்ன முதலாளி கிட்டே எல்லாம் பேசியாச்சு...''

விரக்தியான முறுவலுடன் கூறினார் அவர்.

தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருப்பவர்களை, ஓய்வெடுக்க வைப்பது மிகவும் கடினம் என்று சவும்யாவிற்கு



தோன்றியது.

புன்னகையுடன் தான் வாங்கி வந்த பழங்களை அவர் மனைவியிடம் கொடுத்து விட்டு விடைபெற்றாள்.

ஒரு வார விடுப்பிற்குப் பிறகு மாதவன் நாயர் வேலைக்கு வந்தாலும், கையைப் பயன்படுத்தி வேலை செய்யாமல் அவரை மேற்பார்வையிட மட்டுமே அனுமதித்திருந்தான் விதுரன்.

ஒரு நாள், கருணாகரன் விடுமுறை என்பதால், அவளே எல்லா வேலைகளையும் செய்யும்படியானது.

படகு வீடுகள் அனைத்தும் முன்பதிவு செய்யப்பட்டு, பயணிகளுடன் வெளியில் சென்றிருந்தன.

முதல் நாள் அறை எடுத்த வெளிநாட்டுப் பயணி ஒருவர், அன்று படகு வீட்டில் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க, என்ன செய்வதென்று யோசித்தவள், உடனே அவரை சமாதானப்படுத்தினாள்.

இன்று ஒரு நாள், நகரிலுள்ள இடங்களை சுற்றிப் பார்க்கும்படியும், அதற்காக கார் ஒன்றும் ஒரு கைடும் ஏற்பாடு செய்வதாகவும், நாளையே அவருக்கு படகு வீடு ஏற்பாடு செய்வதாகவும் கூற, அவரும் அரை மனதுடன் சம்மதித்தார்.

உடனே காரையும் கைடையும் ஏற்பாடு செய்தவள், சாலை வழிகள் பற்றிய மேப்பையும் அவரிடம் அளித்து, மதியத்திற்கு அவர்கள் விரும்பியது போல் உணவையும் தயாரித்து பேக் செய்து, அனுப்பி வைத்தாள்.

சவுமியாவிற்கு, அவர்கள் சென்ற பிறகு தான், மூச்செடுக்க முடிந்தது.

கருணாகரன் இது போல் எத்தனை முறை சமாளித்திருப்பார் என்று எண்ணும்போதே, ஆயாசமாக இருந்தது.

''எதையும் முடிக்க முடியும் என்று நம்பிக்கை வைப்பவர்களால், அதை எப்படியும் நன்றாக முடிக்க முடியும்!''

அறிஞர் வெர்ஜிலின் வரிகள் தான் அந்த நிமிடம் நினைவிற்கு வந்தன... பெரும் ஊக்கம் தந்தன! உடனே ரெஸ்டாரண்டுக்குச் சென்றவள், ஒரு காபி ஆர்டர் செய்துவிட்டு அமர்ந்தாள்.

''நானும் உன் கூட ஜாயின் பண்ணிக்கலாமா?''

உரிமையுடன் கேட்டபடி வந்து, அவளருகில் இயல்பாக அமர்ந்து கொண்டான் விதுரன்.

அவனும் ஒரு காபி ஆர்டர் செய்ய, சவும்யா மௌனமாக அமர்ந்திருந்தாள்.

திடீரென்று, ''நீ இன்னிக்கு அந்த பாரீனரை ஹேண்டில் பண்ணின விதம் ரொம்பக் கரெக்ட்! இப்பதான் மாதவேட்டாவைப் பாத்துட்டு வரேன்... அவங்களுக்கு மதியம் லஞ்ச் கூடக் கட்டிக் கொடுத்தியாமே... வெல்டன்! அந்தந்த நேரத்துக்கு எப்படி ரியாக்ட் பண்றதுன்னு ஒரு பிரசென்ஸ் ஆப் மைண்ட் எல்லாருக்கும் வரணும்... அப்படி வந்துட்டா, அவங்க நிச்சயமா எந்தத் துறையில வேணும்னாலும் பிரகாசிப்பாங்க!'' பெருமையுடன் கூறினான்.

''கருணா அங்கிள் இருந்திருந்தா, இதவிட இன்னும் பெட்டரா ஹேண்டில் பண்ணியிருப்பாங்கன்னு நான் நினைக்கிறேன்...'' கூறிவிட்டு



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

மெதுவாக காப்பியை கருகினாள் சவுமியா. முகஸ்துதியை விரும்பாத பெண்ணை இப்பதான் முதல் முதலா பார்க்கிறேன்... யோசனையுடன் நோக்கினான் அவன்.

ஏனோ, மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.

''அன்னிக்கு ஹாஸ்பிடல்லே நான் மிஸ் பண்ணிட்டேன்... கொஞ்சம் முன்னாடி வந்திருந்தா உங்கம்மாவைப் பார்த்திருக்கலாம்.... ம்... எப்படியும் கூடிய சீக்கிரம் அவங்களைப் பார்க்கத்தானே போறேன்!'' அவன் குரலில் பொருள் விளங்காத ஒரு செய்தி!

புரியாமல் அவள் திரும்பியபோது ''ஹேவ் எ நைஸ் டே சவுமியா... நான் ஒரு வேலை விஷயமா அவசரமா வெளியே போகணும்... வரேன்...'' வேகமாக எழுந்து கம்பீர நடையுடன் வெளியேறினான விதுரன்.

பெண்களிடம் வழிசலாகப் பழகும் பல ஆண்களிடையே தன் கம்பீரம் தொலைக்காமல் எதிராளியின் கண்களைப் பார்த்து பேசுகின்ற அவன் நேர்ப்பார்வைகள், வெகு நேரம் அவள் நினைவுகளில் நிறைந்திருந்தன.

★★★

மறுநாள், சில வெளிநாட்டுப் பயணிகள் புதிதாய் வந்து விடுமுறையை உல்லாசமாகக் கழிப்பதற்காகத் தங்கி இருந்தனர்.

அன்று மாலை, அவர்களுடைய இசைக்குழுவினர் ஆடலும், பாடலுமாய், மிகுந்த கொண்டாட்டத்துடன் கூடியிருந்தனர்.

அப்போது, வேலை நேரம் முடிந்து வீட்டிற்குக் கிளம்பினாள் சவுமியா.

அவளுடைய அழகும், அமைதியும் அங்கிருந்த ஒரு இளைஞனைக் கவர்ந்துவிட வேகமாக பின் தொடர்ந்து வந்து வழி மறித்தான் அவன்.

''ஹாய் பியூட்டி!'' என்று வழிந்தவன், ''ஐயம் ஜான் மெக்கன்சி... இன்னிக்கு எனக்கு நீ கம்பெனி குடுக்க முடியுமா? இல்லே... உனக்கு வேற யாரோடயாவது டேட் இருக்கா?'' குழறலான குரலில் ஆங்கிலத்தில் கேட்டான்.

மனம் உடனே விதிர்த்துப் போனாலும், இதை சமயோசிதமாகத்தான் கையாள வேண்டும் என்று சவுமிக்கு தோன்றியது.

''சார் சார்! நான் அந்த மாதிரிப் பொண்ணு இல்லை! அதோட கல்ச்சர் வேற... எங்களது வேற... அங்கே உங்க கேர்ள்... பிரெண்ட் வெயிட் பண்றாங்க பாருங்க... போங்க'' ஆங்கிலத்தில் மெதுவாகக் கூறினாள்.

''பிளீஸ்... ஹனி!'' அவன் அவள் கையைப் பிடிக்க வர, அவள் பதட்டத்துடன் திரும்பும்போது தான், அது நிகழ்ந்தது.

வேகமாக அங்கு வந்த விதுரன், கராத்தே தெரிந்த லாவகத்துடன் அந்த இளைஞனின் கையை பலமிழக்கச் செய்திருந்தான்.

''ஆ'' என்ற அலறலுடன் நிமிர்ந்தவனது சப்தம், கூச்சலும் கும்மாளமுமாக இருந்த அவனுடைய குழுவினரின் காதுகளுக்கு எட்டவில்லை.

''ஏய்...'' என்றபடி அவனைப் பிடித்து விதுரன் இழுத்துச் செல்ல, பயந்து போனாள் சவுமியா.



''விதுரன்... பிளீஸ்! அவரை விட்டுடுங்க... அவங்க கல்ச்சர் அப்படி! நம்ம பொண்ணுங்களப் பத்தி சரியாத் தெரியாது... சொன்னாப்புரிஞ்சுப்பாங்க... அவங்க நம்ம ஹோட்டலுக்கு தங்க வந்திருக்கிற கெஸ்ட்... அதை மறந்துடாதீங்க...'' கெஞ்சினாள் அவள்.

தீக்கங்குகளாய் மின்னிய விழிகளுடன், அவள் புறம் திரும்பினான் அவன்.

''ஏன் இவ்வளவு சப்போர்ட் பண்றே? அப்ப... இவனுக்கு கம்பெனி குடுக்கலாம்னு... நீ முடிவு பண்ணிட்டியா?'' கோபத்துடன் உறுமினான்.

சுள்ளென்று மனதில் மூண்ட கோபத்துடன், ''மிஸ்டர் விதுரன்... திஸ் இஸ் தி லிமிட்... சே!'' சீறிவிட்டு வேகமாக வெளியேறினாள் அவள்.

★★★

வீட்டிற்குச் சென்றபிறகும், மனதில் நீங்காத கோபம் புயலாய் மையம் கொண்டிருந்தது.

அவள் முகத்தைக் கண்டு என்னென்று விசாரித்த பாட்டியிடம், தலைவலி என்று முணுமுணுத்துவிட்டுத் தன் அறைக்குச் சென்று படுத்து விட்டாள்.

அவன் கோபத்தையும், வார்த்தைகளையுமே, மீண்டும் மீண்டும் அசை போட்டது உள்ளம்!

அவளுக்கு ஒரு ஆபத்து என்றதுமே, துடித்து செயல்பட்ட அந்த அக்கறை உணர்வு, மனதில் பூஞ்சிறகாய் வருடியது.

ஆனால், தன் மேல் நம்பிக்கையின்றி அவன் கொட்டிய வார்த்தைகள் செந்தணலாய் பரவ, அதுவும் தனக்காகத்தானே என்று பரிந்து வந்தது இதயம்!

சிறிது நேரம் கழித்து, அவளுக்கு போன் வந்திருப்பதாக பாட்டி வந்து கூறினார்.

ஹாலுக்கு சென்று எடுத்த போது, ஒரு கணம் எந்த சப்தமும் இல்லை.

''ஹலோ! ஹலோ!'' என்றவள் பதிலேதும் வராமல் போகவே,'' யாரு பாட்டியம்மா...

ஒருத்தரும் பேசவே இல்லை'' என்றபடி போனை வைத்தாள்.

மறுநிமிடமே மணி ஒலிக்க எடுத்தால், விதுரன் தான் பேசினான்.

''சாரி சௌம்பா...! அவன் உன் கையைப் பிடிச்சவுடனே என்னால தாங்க முடியலை... உயிரே போயிட்ட மாதிரி உணர்வு! உடனே அவனைக் கொன்னுடணும் போல ஒரு ஆத்திரம் வந்தது... அந்தக் கோபத்துல தான் உன்னை... லட்சம்... கோடி சாரி...'' குரல் தடைபட்டது.

''ம்... பரவாயில்லை சார்! எனக்கு உங்க கோபம் புரியுது...'' இறுக்கத்துடன் கூறினாள் அவள்.

''அவனை நல்லா வார்ன் பண்ணி விட்டுருக்கேன். ட்ரிங்ஸ் எடுத்திருந்தாலே புத்தி தடுமாறிப்போய் அப்படி நடந்துட்டதா வருத்தப்பட்டான். உன்னே நேரில் பாத்து மன்னிப்பு கேக்கணும்னு துடிக்கிறான்... நாளைக்கு ஹோட்டலுக்கு வருவே இல்லை...?''



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தவிப்புடன் கேட்டான்.

''ம்... வருவேன்...''

''என் மேல கோபமில்லையே? என்னு தெரியலை... முதன் முதலாக ஒரு பொண்ணோட கோபம்... என்னை ரொம்பப்பாதிச்சிருக்கு...''

''என் மேல இருக்கற அக்கறையினால தானே அப்படி ரியாக்ட் பண்ணினீங்க... ஓகே சார்... நான் வைக்கிறேன்! குட் நைட்...'' போனை வைத்த பிறகும். மூழ்கிய அவனது நினைவலைகளிலிருந்து கரையேற முடியாமல் தவித்துத் திணறியது மனது.

இரவு, வெகு நேரம் தூக்கம் வராமல் தவித்துத் திணறி உறங்கிய பிறகும், கனவுகளில் அவன் வரவு!

சுற்றிலும் பனி சூழ்ந்த மலையுச்சியில், குறும்புடன் சிரித்தபடி அவளை இருகரம் நீட்டி அவன் வாவென்று அழைக்க, சிரிப்புடன் அவன் மார்பில் தஞ்சம் புகுந்தால், திடீரென்று கனவு கலைந்து போனது!

விதிர்த்துப் போய் எழுந்து அமர்ந்த போது, ஆன்மாவின் அந்தரங்க விருப்பங்கள் தான் கனவுகளாய் மலர்கின்றனவோ வென்ற சந்தேகமும், பயமும் எழுந்தன!

சட்டென்று மனதில் ஒரு விதிர்ப்பு வர, காதலைப் பற்றிய தன் கணிப்பு இப்போது மாறிப்போனதும், தானே காதல் ஆற்றில் விழுந்து அந்தச் சூழலில் சிக்கி விட்டிருப்பதும் புரிந்தது.

விதுரனின் நினைவில் அடிவயிற்றில் படபடக்கும் பட்டாம்பூச்சிகளையும், தன் முகமே பிறருக்கு காதலைத் தெரிவித்து விடுமோவென்ற பயத்தையும், முதன் முதலாக இதயம் படபடக்க ஆரம்பித்து, வெட்கம் அழையா விருந்தாளியாய் வந்து ஒட்டிக் கொள்வதையும், ஏனோ தவிர்க்கவே முடியவில்லை.

இந்த மாற்றத்தை, அவள் எதிர்பார்த்திருக்கவுமில்லை.

இதழ்களில் வெட்கப் புன்னகையுடன் சுருண்டு படுத்தவளை, உறக்கம் உடனே வந்து தழுவிக் கொண்டது.

★ ★ ★

மறுநாள் வேலைக்குச் சென்றவுடனே, பபி அவளிடம் நேற்று நடந்த விஷயத்தைப் பற்றி பதட்டத்துடன் விசாரித்தாள்.

அவளுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே, மாதவன் வந்து விட்டார்.

''மோளே! முதலாளி எல்லாம் பறைஞ்சது... நான் மட்டும் அங்க இருந்திருந்தால் அந்த ஆளை கொன்னு களைஞ்சிருக்கும்'' கோபத்தில் மீசை துடிக்கக் கூறினார்.

''அச்சா! அந்த ஆளு குடிச்சிருந்தாரு... போதையில என்ன செய்யறோம்னு புரியாமப் பண்ணிட்டாரு... தப்பு தான்! ஆனா என்கிட்ட மன்னிப்பு கேக்கணும்னு ரொம்பத் துடிச்சாராம்...

மறக்கறதும், மன்னிக்கறதும் தானே மனுஷ குணம்...'' இதமான



முறுவலுடன் கூறினாள் சவுமியா...

திடீரென்று, பின்புறம் விதுரனின் குரல் கேட்டது.

''உன் அளவுக்கு மன்னிக்கிற குணம். எனக்கில்லை... ஒரே அறைதான்... உடனே போதை தெளிஞ்சு தன் தப்பை உணர்ந்து அவன் ரொம்ப வருத்தப்பட்டான்...''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, அந்த இளைஞன் வந்து விட்டான்.

''சாரி... சாரி...'' என்று குற்ற உணர்வுடன் அவன் மன்னிப்பு கேட்க, அவனைப் புரிந்து கொண்டதாகக் கூறி, இனி ஒரு பெண்ணிடம் இங்கு இந்தியாவில் இது போல் நடக்க முயற்சிக்கக் கூடாது என்று எச்சரித்து அனுப்பினாள் சவுமியா...

## 6

ஓணம் பண்டிகை வந்து விட்டது!

ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

அன்று காலையில் சவுமியா தான் புதிதாக வாங்கியிருந்த வெளிர் சந்தன நிற கேரளப் புடவையும், தங்க நிற ரவிக்கையும், அதற்குப் பொருத்தமாக சிவப்பு நிற நாகப்பட செட்டையும் அணிந்து தயாரானாள்.

தேவதை போலிருந்தவளை பாட்டியம்மா ஆசையுடன் திருஷ்டி கழிக்க, ஆட்டோவில் கிளம்பி ஹோட்டலுக்குச் சென்ற போது, விதுரன் தன்னைப் பார்த்தவுடன் என்ன சொல்வானோ என்ற தவிப்பு உடலெங்கும் பரவியது.

வாசலிலேயே காத்திருந்த விதுரன், அவளைக் கண்டதும் ஒரு கணம் விழியிமைக்க மறந்து போனான்.

எரிகின்ற உன் விழிச் சுடரில் கரைந்து போய் நான் உருகி நிற்பதை, என்றாவது நீ புரிந்து கொள்வாயா என்ற தவிப்பு, அவன் விழிகளில்!

ஹோட்டலிலும், அன்று ஓணம் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பூவில் வரையப்பட்ட அத்தப்பூ கோலத்திலும், தென்னம் பாளைகளின் விரிந்த அழகிலும், கேரள விளக்குகளின் ஒளிர்தலிலும், வாசலே ரம்யமான அழகுடனிருந்தது.

ஆட்டோவிலிருந்து இறங்கி மெதுவாக நடந்து வந்தவள், அங்கு நின்றிருந்த விதுரனையும், அவன் பார்வையையும் கண்டு, ஒரு கணம் தடுமாறிப் போனாள்.

இப்போது இரு மனங்களின் இடையே உள்ள தூரம், கண்களின் காதல் பரிபாஷையில் மெல்ல மெல்லக் குறைந்து, நீண்டும் தூரத்தில் நெருங்கியிருந்தன.

அவனைப் பற்றிய எண்ணச் சிறகுகள் அவள் மனதிற்குள் கதகதப்பாய் ஒளிந்திருந்தன.

அதை அவன் கண்டுபிடித்துவிடுவானோ என்ற விதிர்ப்புடன், இமைகளைத் திரையாக மறைத்து குனிந்து கொண்டாள் சவுமி.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''சவுமியா...!!'' ஆவலுடன் அவளை அழைத்தவன்'' இன்னிக்கு மதியம் நீ என்னோடவும் அப்பாவோடவும் தான் லன்ச் சாப்பிடப் போறே! உனக்கு ஓ கே தானே!'' மென்மையாகக் கேட்டான்.

''சார்... நான்..''

அதற்குள் அவன் குரல் இடைமறித்தது.

''நோ எக்ஸ்கியூஸஸ்! நீ வரே... இன்னிக்கு நான் ரொம்ப மகிழ்ச்சியா இருக்கேன்... அந்த சந்தோஷம் இன்னிக்கு முழுக்க இருக்கணும்னா, என் விருப்பத்துக்கு நீ எதிர்ப்பு சொல்லக் கூடாது... பிளீஸ்!'' அவன் குரல் அன்னச்சிறகாய் வருடியது.

''ம்... சரி சார்!'' மெல்லிய குரலில் கூறினாள் அவள்.

''தேங்க்யூ! இதுக்காக நீ நிச்சயமா ரொம்ப சந்தோஷப்படுவே பாரு! அப்புறம் ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... ஒரு தடவை விதுரன்னு சொல்லிக் கூப்பிட்டாச்சு... இன்னும் என் தயக்கம்? அப்படியே கூப்பிட வேண்டியது தானே?... கூடிய சீக்கிரத்துல அப்படித்தானே கூப்பிட்டாகணும்...'' குறும்பு கசிந்தது அவன் குரலில்!

சட்டென்று அவளுக்குள், கோடி முறை உயிர்த்தெழுந்ததைப் போல் ஒரு உணர்வு!

விழிகள் மின்ன கெஞ்சலுடன் அவள் நிமிர்ந்தபோது, ''உனக்கு என் மேல எதுவும் வெறுப்பு இல்லையே!'' என்றான் விதுரன் பெரும் தவிப்புடன்.

''ஊஹூம்... இல்லையே!''

உடனே வெளிப்பட்ட அவளுடைய வார்த்தைகளில், அவனுக்குள் உறங்கிக் கிடந்த நேச நினைவுகள் மெல்ல மெல்ல விழித்தெழுந்து, இதயப் பரப்பில் சில்லென்று குளிர்ச்சியைப் பரவச் செய்தன.

★★★

அன்று மதியம், விதுரன் பின்புறமிருந்த தன் காட்டேஜுக்கு சவுமியாவை அழைத்துச் சென்றான்.

அங்கு, வித்யாதரன் அவர்களுக்காகக் காத்திருந்தார்.

அங்கிருந்த டேபிளில் அழகாக உணவு வகைகள் அடுக்கப்பட்டிருந்தன.

அவரை மரியாதையுடன் வணங்கியவள், அவர்கள் இருவருக்கும் பரிமாற ஆரம்பித்தாள்.

''ம்... உனக்கும் சேர்த்து சர்வ் பண்ணும்மா! மூணு பேருமே சாப்பிடலாம்...'' அழுத்தமான குரலில் கூறினார் வித்யாதரன்...

''இருக்கட்டும் சார்... அது மரியாதை இல்லை... நீங்க ரெண்டு பேரும் முதல்லே சாப்பிடுங்க...'' என்றாள் சவுமியா பணிவுடன்

''மரியாதை மனசுல இருக்கணும்... வெளி வேஷம் தேவையில்லை... இதுவே என் நண்பர் மக சீமாவா இருந்திருந்தா, நான் சொன்னதை உடனே செஞ்சிருப்பா!''

உடனே அவள் விதுரனை நோக்கியபோது, அவன் கண்ணசைவிலேயே அவளை அமரச் சொன்னான்.

ஏனோ, முகம் அறியாத அந்த சீமாவின் நினைவுகள், அவளைத்





Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

துளைத்தன. அவள் மெதுவாக அமர்ந்த போது, இயல்பாகப் பேச்சைத் தொடங்கினார் வித்யாதரன்.

''உங்க அப்பா எங்கேம்மா வேலை பாக்குறாரு?'' மெலிதான ஆர்வத்துடன் கேட்டார்.

''அப்பா இறந்துட்டாங்க... அம்மா மட்டும்தான்... தூரத்து உறவுல ஒரு பாட்டிம்மாவும் இருக்காங்க... அம்மா இங்கே ஒரு பேக்டரியிலே ஒர்க் பண்றாங்க...''

''ஓஹோ! சரி நீ சாப்பிடு'' என்றபடி அவர் மவுனமாக சாப்பிட ஆரம்பிக்க, அதற்குப்பிறகு அங்கு மெல்லிய அமைதி மட்டுமே நிலவியது.

அன்று மாலை அவள் வீட்டிற்குக் கிளம்பியபோது, அவளை விதுரன் அழைப்பதாக கருணாகரன் கூறினார்.

காட்டேஜுக்கு சென்ற போது ''சவுமியா! நீ ஹோட்டல்லேயே வெயிட் பண்ணு! எனக்கு முக்கியமான ஒரு வேலை இருக்கு... அதை முடிச்சிட்டு வந்து உனக்கு ஒரு பிளசண்ட் சர்ப்ரைஸ் தரப்போறேன்... அதுக்கு பதிலா நாளையிலேருந்து நீ என்னை 'விது'ன்னுதான் கூப்பிடணும்...'' உற்சாகக் குரலில் கூறினான் விதுரன்.

''ஊஹூம்...! நான் சீக்கிரம் வர்றதா அம்மாகிட்ட சொல்லிட்டேனே... இன்னிக்கு அவங்களுக்கு லீவு! நான் போகணும்...'' செல்லமாகச் சிணுங்கினாள். சவுமியா.

''பிளீஸ்! இன்னிக்கு ஒரு நாள்... எனக்காகக் காத்துட்டிருக்க கூடாதா? அதுக்கு பதிலா அழகா ஒரு பரிசு கிடைக்கப்போகுதே உனக்கு.?''

''அப்படியா... என்ன அது? ஆவலுடன் கேட்டவளிடம் குனிந்து காதில் கிசுகிசுத்தான் அவன்.

''ச்சீய்... அதெல்லாம் முடியாது!''

''என்ன முடியாது இந்த அழகுப் பெண்ணோட அகராதியில 'முத்தம்' கிற வார்த்தைக்கு மட்டும் இடமில்லையா... மனசு வலிக்குது!''

''ஊஹூம்! அதெல்லாம் அப்புறம் தான்! முதல்லே நீங்க கிளம்புங்க'' அவனை அனுப்பி விட்டு வந்த போது தான், பாசத்துடன் அழைத்துப்பேச இன்று மாதவனும் இல்லை என்பது நினைவு வந்தது.

அன்று ஓணம் என்பதால் மலையாளிகள் அனைவரும் விடுமுறையில் சென்றிருக்க, மற்றவர்கள் மட்டும் கூடுதல் பொறுப்பேற்றிருந்தனர்.

வரவேற்பில் அமர்ந்தபோது, தன் மனதை எண்ணி அவளுக்கே ஆச்சர்யமாய்!

காதல் என்பது சரியான சுயநல உணர்வு என்று எண்ணிய தனக்குள், எப்படி... எப்போது காதல் வந்தது என்ற உண்மை புரியாமல் தவித்தது மனது.

தான் ஏன் இப்படி மாறிப்போனோம் என்று நினைக்கும் போதே, விதுரனின் குறும்பு வழிகளும், நேசப் புன்னகையும், கண் முன் நிழலாடின.

''காதல் என்பது கணநேர உணர்ச்சியல்ல... காலமெல்லாம் தொடர வேண்டிய அன்புப் பயணம்!'' எப்போதோ படித்த வரிகள் நினைவில்



படர்ந்து ஒரு வித சிலிர்ப்பை ஏற்படுத்தின.

எந்த ஒரு விஷயமும், தன்னால் பரிபூரணமாக உணரப்படும் போது தான் அதன் உயர்வையும், உன்னதத்தையும் புரிந்து கொள்ள முடியுமென்ற உண்மை விளங்குவதாய்! விதுரன் தரப்போகும் இனிய அதிர்ச்சி என்னவாக இருக்கும் என்ற சுகமான கற்பனையில் மனம் மூழ்கியது.

கண் விழித்துக் கொண்டிருக்கும் போதே கனவுகள் வருகின்ற மாயத்தை, காதல் செய்ய ஆரம்பித்தது.

★ ★ ★

அதே நேரம் விதுரன், மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தான்.

தன் விருப்பத்தைக் கூறியவுடனே அப்பா என்ன சொல்வாரோ என்ற சிறு தயக்கத்துடன் இருந்தான், அவர் உடனே ஒத்துக் கொள்வாரென்று நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை.

ஆனால், அவர் கூறிய ஒரு விஷயம் மட்டும் மனதில் முள்ளாய் நெருடியது.

''விதுரா! நான் உனக்கு வேலுவோட பொண்ணு நீமாவைத்தான் லைப் பார்ட்னரா முடிவு பண்ணியிருந்தேன்... ஆனா கடவுள் வேற மாதிரி நினைச்சிருக்காரு போலிருக்கு... ஓ கே! எனக்கு உன் விருப்பம் தான் முக்கியம் தான்...! இன்னிக்கு சாயந்தரமே அந்தப் பொண்ணோட வீட்டிலப் போய்ப் பேசலாம்... இப்ப உனக்கு சந்தோஷம் தானே மை சன்?''

சற்று கம்மிய குரலில் அவர் கேட்டபோது ''தேங்க்யூப்பா! சவுமியா இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால நினைச்சி கூடப் பார்க்க முடியலை... நான் அவளை என் உயிரா விரும்பறேன்...'' உணர்ச்சிப் பெருக்குடன் கூறியபடி, அவர் கையைப் பிடித்து மெதுவாக அழுத்தினான் விதுரன்.

இருவருமாகக் கிளம்பி சவுமியாவின் முகவரியைக் கண்டுபிடித்து, அழைப்பு மணியை அழுத்தினர்.

''யாரு...?'' என்றபடி கதவைத் திறந்த சம்பூர்ணம் அவர்களைக் கண்டதும் குழப்பத்துடன் ''வாங்க... யாரைப் பார்க்கணும்?'' என்றார் மெதுவாக.

''நாங்க சவுமியாவோட அம்மாவைப் பாக்கணும்... நான் தான் அவங்க வேலை பாக்கற ஹோட்டலோட ஓனர்... இவன் என் பையன்!'' யோசனையுடன் அவரையே பார்த்தபடிக் கூறினார் வித்யாதரன்.

''உள்ளே வாங்க!'' என்று அவர்களை வரவேற்று ஹாலில் அமரச் செய்தவர், உள்ளே சென்று உடனே சியாமளாவை அழைத்து வந்தார்.

''வணக்கம்! சவுமியா இன்னும் வரலியே...!''

மெதுவாகக் கூறியபடி, விதுரனிடமிருந்து பார்வையை வித்யாதரனிடம் திருப்பிய சியாமளா வெகுவாக அதிர்ந்து போனார்.

முகம் ரத்தமின்றி வெளுத்துவிட, உடலே ஒரு கணம் ஆடிப்போனது.

பழைய நினைவுகள் அனுமதியின்றி மனதிற்குள் நுழைந்து, ஆழத்திற்குச் சென்று உயிர்வரை வலிக்கச் செய்தன.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

வித்யாதரனும் அதே நிலையிலிருந்தார்.

சியாமளாவைக் கண்டதும் பதறிப் போய் எழுந்தவர், ''நீயா...?'' என்றபோது, அவர் முகம் இறுகிப்போய் சிவந்திருந்தது.

மனம் முழுவதும் ரணமாய் பரவியிருந்த துரோக நினைவுகள் உடலைப் பதறச் செய்ய, வேகமாக எழுந்தவரின் விழிகள், ரத்தமெனச் சிவந்திருந்தன.

''சவுமியா உன் மகளா? சே...'' என்றவர், விதுரனிடம் திரும்பினார்.

''விதுரா! இந்தக் கல்யாணம் நடக்காது... வா போகலாம்'' சீற்றத்துடன் உறுமினார்.

ஒன்றும் புரியாமல் விழித்த விதுரனையே பார்த்திருந்த சியாமளாவின் விழிகள், கண்ணீர் அருவியைப் பொழிய ஆரம்பித்தன.

வியப்புடன் திரும்பியவனுக்கு கார் ஹார்ன் ஒலி சப்தமாகக் கேட்க, வேகமாகச் சென்று காரில் ஏறினான் அவன்.

செல்லும் வழி முழுவதும் வித்யாதரன் எதுவுமே பேசவில்லை.

வீட்டிற்குச் சென்றதும் வேகமாகத் தன் அறைக்குள் சென்றவரைப் பின் தொடர்ந்த விதுரன், ''எனக்கு இப்போ காரணம் தெரியணும்ப்பா... சவுமியாவோட அம்மாவைப் பார்த்தவுடனே ஏன் இப்படிக் கோபமா திரும்பி வந்தீங்க... அவங்க யாரு...?'' அழுத்தமான குரலில் கேட்டான்.

விழிகள் தீப்பந்தங்களாய் எரியத் திரும்பியவர், ''அவ சவுமியாவோட அம்மா மட்டுமில்லை... உன்னோட அம்மாவும் தான்...'' என்றார் சீற்றத்துடன்.

ஒரே நிமிடத்தில், அவனுக்கு உலகம் இருண்டு போனது.

## 7

விதுரனை சுனாமியால் சுழற்றிப் போட்டன அவருடைய வார்த்தைகள்! ''அப்பா!... என்னோட அம்மாவா!''

தாங்க முடியாத அதிர்ச்சியில் கண்கள் சிவந்து முகம் இறுகக் கேட்டவனிடம், ''ஆமா... அவ தான் உன்னைப் பெத்தவ! ஒரு நடத்தை கெட்ட நாய்...'' குரூரமாகக் கூறினார் வித்யாதரன்.

வேரறுந்த மரம் போல் மனம் சடசடவெனத் தன் உணர்வுகளை முறிக்க, பரிதவிப்புடன் விதுரன் நிமிர்ந்த போது, காலுக்குக் கீழே அக்னிப் பிழம்பொன்னு தணலாய் பரவியது.

''இத்தனை நாளா நீ அம்மாவா நினைச்சு பூஜையறையில போட்டோவில பூப்போட்டு கும்பிட்டுட்டு இருக்கியே, அவ உன்னோட சித்தி... என் ரெண்டாவது மனைவி... போதுமா?'' அவனை இடியெனத் தாக்கின, அவருடைய வார்த்தைகள்!

தொய்ந்து போய், அப்படியே அருகிலிருந்த நாற்காலியில் சரிந்து அமர்ந்தான் அவன்.

காதலை மூச்சுக்காற்றாய் சுவாசித்த மனதிற்குள், இன்று பெரும் துரோகத்தின் சாரல்கள்!

அங்கு சவும்யாவின் வீட்டில், சியாமளாவின் நிலையோ அதை விட



மோசமாய்!

இத்தனை வருடங்களாக பார்க்காத மகனைப் பார்த்த மகிழ்ச்சியை, வித்யாதரனின் வருகையும், அவரின் அருவெறுக்கும் பார்வையும் கோபமும் அழித்திருந்தன.

பெரும் விம்மலுடன் ஓடிச்சென்று தன் அறைக்கதவை சாத்தி விட்டு சரிந்து அமர்ந்தவருக்குள், காட்டாற்று வெள்ளமாய் பழைய நினைவுகள்!

★ ★ ★

அப்போது, சியாமளா டிப்ளமா படித்து விட்டு தன் தந்தையுடைய நண்பர் செல்வராஜின் உதவியால் மதுரையில் அந்தத் தனியார் தொழிற்சாலையில் வேலைக்கு சேர்ந்திருந்த புதிது!

அவளுக்கு வேலையும் வாங்கிக் கொடுத்து, அவளுடைய பிரிவில் பயிற்சியும் அளித்து, நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெறக் காரணமாக இருந்தவர் அவர்.

அந்த நிலையில் தான், ஒரு நாள் அவள் வித்யாதரனைச் சந்தித்தாள்.

வேலை முடிந்து செல்லும் போது, அன்று பேருந்துகள் வேலை நிறுத்தம் செய்து விட, பஸ் ஸ்டாப்பில் தனியே நின்றிருந்தவளின் அருகே வந்து நின்றது, ஒரு பைக்.

''மிஸ் சியாமளா! இன்னிக்கு பஸ் ஸ்டிரைக்! நீங்க வெயிட் பண்றது வேஸ்ட்! எனக்கு எப்படி உங்க பேர் தெரியும்னு பார்க்கறீங்களா? நான் வித்யாதரன்... நானும் அதே ஃபேக்டரியில் வேலை பார்க்கிறேன். ஆனா வேற செக்ஷன்! உங்களை ரெண்டு மாசமா கவனிச்சிட்டே தான் வரேன். எனக்கு உங்களை நல்லாத் தெரியும்... ஆனா உங்களுக்குத் தான் என்னைத் தெரியாது... வாங்க... உங்களை எங்கே ட்ராப் பண்ணணும்னு சொல்லுங்க... நானே அழைச்சிட்டுப் போறேன்...''

மடை திறந்தது போல் பேசியவனை, வியப்புடன் பார்த்தாள் சியாமளா.

''சார்! நான் தெரியாதவங்க கூட பைக்ல போறதில்லை... நான் ஆட்டோல போயிடுவேன்... தேங்க்ஸ்'' என்று முறுவலித்தாள்.

''அப்ப நீங்க என்னை நம்பலை இல்லை...! சரி, ஆனா உங்களை இங்கே தனியா விட்டுட்டுப் போக என்னால முடியாது...'' என்றபடி பைக்கை நிறுத்தி விட்டு, வந்து அவளருகே நின்று கொண்டான் அவன்.

சிறிது நேரத்தில் ஒரு ஆட்டோ வர, உடனே அதை நிறுத்தி ஏற்றி விட்டு சென்றவனின் அக்கறையும் நல்ல குணமும், சியாமளாவை முதன் முதலாகக் கவர்ந்தன.

பிறகு தற்செயலான சந்திப்புகள், தொழில் முறை உரையாடல்கள் என இருவரும் நெருங்கிப் பழக ஆரம்பித்தனர்.

பருவ வயதில் வருகிற எதிர்பாலின ஈர்ப்பும், உணர்வுப் போராட்டங்களும், மன மாற்றங்களும் தான், ஒருவரின் எதிர்கால வாழ்க்கையையே நிர்ணயம் செய்யப் போகிறதென்பதை உணரும் முன்பே, காதல் வந்து இருவரிடையேயும் மாயம் செய்ய ஆரம்பித்திருந்தது.

தந்தையும், தாயும் இறந்து, அண்ணன் அண்ணி பாதுகாப்பில்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இருந்தவளுக்கு, வித்யாதரனின் அன்பு, பெரிய வரமாய்!

திடீரென்று அவளுடைய வாழ்க்கையின் மீது யாரோ கோடிப்பூக்களை சொரிந்தது போல் ஒரு உணர்வு!

காலம் விரைந்து செல்ல, அவர்களின் காதல், அண்ணன் வெங்கடேசனுக்குத் தெரிய வர, வீட்டில் பெரும் பூகம்பமே வெடித்தது.

சியாமளாவைத் தன் மச்சானுக்கு மண முடிக்கலாம் என அவன் திட்டமிட்டிருக்க, இந்தக் காதல் அவர்களை எரிதழலாக்கியது.

வித்யாதரன் வீட்டிலும், ஜாதி பிரச்னையால் பெரும் எதிர்ப்பு வந்தது.

ஒரு நாள் இருவரும் கோவிலில் எளிமையாகத் திருமணத்தை முடித்துக் கொண்டு சியாமளாவின் வீட்டிற்குச் சென்ற போது, வெங்கடேசன் அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

வித்யாதரனின் வீட்டிலும் அவர்களைப் புறக்கணிக்க, இருவரும் தனி வீடு பார்த்து குடி வருவதற்கு, அவனுடைய நண்பன் ராஜவேலு தான் பெரிதும் உதவினான்.

ஆனாலும் ஆரம்பத்திலிருந்தே அவனுடைய துகிலுரியும் பார்வையும், இரட்டை அர்த்தப் பேச்சுக்களும், சியாமளாவிற்குப் பிடிக்கவில்லை.

ஆனால், வித்யாதரனிடம் சொல்லவும் பயந்து அமைதியாக இருந்தாள் அவள்.

அவளுடைய திருமணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதுமே, தன் குடும்பத்துடன் வந்து வாழ்த்தி விட்டு, ஒரு தங்கச் சங்கிலியையும் பரிசாக அளித்துச் சென்றவர் குடும்ப நண்பர் செல்வராஜ் மட்டுமே தான்!

திருமணம் முடிந்த மறு மாதமே, வேலையை விட்டு விட்டான் வித்யாதரன்.

தன் நண்பன் ராஜவேலுவுடன் சேர்ந்து பிசினஸ் செய்யப் போவதாக அவன் கூறியதுமே, அவளுக்குள் சிறு பயம் கிளர்ந்ததென்னவோ நிஜம்!

பிறகு, தொழில் நல்ல வளர்ச்சியடைந்து கொண்டிருக்க, அவளுடைய வயிற்றிலும் கருவின் வளர்ச்சி தெரிய ஆரம்பித்தது.

இருவரும் மகிழ்ந்திருந்த அந்த வேளையில் தான், அவளுடைய குடும்ப நண்பர் செல்வராஜ் திடீரென்று ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனார்.

தான் தந்தையைப் போல் உணர்ந்தவரின் பிரிவு, சியாமளாவைப் பெரிதும் உடைத்திருக்க, அவருடைய மனைவி சம்பூர்ணத்தையும், மகன் மனோகரனையும் தேற்றும் பொறுப்பிலிருந்தாள் அவள்.

மறு மாதமே அவளுடைய தொழிற்சாலையிலேயே மனோகரனுக்கு வேலையும் கிடைத்து விட, அவளே அவனுக்கு புது வேலையின் நெளிவு சுளிவுகளை எல்லாம் கற்றுத் தந்தாள்.

தன் அண்ணன் வெங்கடேசனின் பிரிவுக்குப் பிறகு, ஒரு சகோதரன் கிடைத்தது போன்ற வாஞ்சை உணர்வு அவளுக்குள்!

வாரம் ஒரு முறையாவது, தன் அம்மாவுடன் அவளைப் பார்க்க வீட்டிற்கு வந்து விடுவான் மனோகரன்.

அவள் கர்ப்பவதி என்பதால், வாய்க்கு ருசியாக ஏதாவது சமைத்து எடுத்துக் கொண்டு தான் வருவார் சம்பூர்ணம்.



முதலில் அவர்களுடைய நட்பை எளிதாக எடுத்துக் கொண்ட வித்யாதரனுக்குள், நாட்களாக ஆக சந்தேகச் சாத்தான் புகுந்து கொண்டது.

இருவரும் வெகுளியாகப் பேசிச் சிரிப்பது, மனோகரனுடன் சகோதர உணர்வில் அவள் பைக்கில் வந்து இறங்குவது, அன்னையின் அன்பைத் தேடி ஓடும் கன்றாய் அவன் வீட்டிற்கு அவள் அடிக்கடி செல்வது... இப்படி எல்லாமே, அவன் மனதிற்குள் கறுப்பு வர்ணம் பூசிக் கொண்டு குரூரமாய்ப் பதுங்கியிருந்தன.

குறுகியிருக்கும் மனோ பாவமும், சந்தேகம் எனும் கொடும் நோயும், செல்லரித்துப் போன வாழ்க்கையின் வக்கரிப்புகளாய், அவனுக்குள் வெளித் தெரியாமல் நிறைந்திருந்தன.

பிறகு விதுரன் பிறந்த போது, சம்பூர்ணம் தான் அவளுடன் மருத்துவமனையில் தங்கியிருந்து, ஒரு தாயாய் கவனித்துக் கொண்டார்.

மனோகரனும் ஓடி ஓடி உதவிகள் செய்ய, எல்லாமே வித்யாதரனுக்குள் எரிகிற தீயில் விட்ட எண்ணெயானது.

அவனுக்குள் எரிகின்ற நெருப்பைத் தூண்டுகின்ற திரியாய் இருந்தான், ராஜவேலு.

தன் மனைவி யமுனாவை எப்போதுமே சியாமளாவுடன் ஒப்பிடுபவனுக்குள், வித்யாதரனுக்கு இப்படி ஒரு அழகிய மனைவியா என்ற பொறாமை கொழுந்து விட்டு எரிந்து கொண்டே இருக்கும்.

அதனாலேயே, இருவரையும் பற்றி விஷம் போல் ஒரு சந்தேக உணர்வை, நண்பனுக்குள் செலுத்திக் கொண்டே இருந்தான்.

அந்த சாத்தான் ஓதிய வேதத்தை நம்ப ஆரம்பித்தது வித்யாதரனின் மனது! சியாமளா, இது எதையுமே அறியாமல் வெகுளியாக இருந்தாள்.

விதுரன் பிறந்து, ஒன்பது மாதங்கள் ஆகியிருந்தன.

அன்று, வயிற்று வலி என்று விடுமுறை எடுத்திருந்தவளுக்குள், ஊருக்குச் சென்றிருந்த வித்யாதரனின் நினைவு!

நண்பர்கள் இருவரும் வெளியூரில் புதிதாக பிசினஸ் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தால், அது விஷயமாக அவன் கோயம்புத்தூர் சென்றிருந்தான்.

அவன், இப்போதெல்லாம் முன்பு போல் தன்னிடம் சிரித்துப் பேசாமல், ஒதுங்கியே இருக்கிறானோ என்பது போல் உணர்வு!

குழந்தை பிறந்தவுடன், இருவருக்கும் இடையே ஏதோ ஒரு திரை விழுந்தாற் போன்ற பிரமை எழ, அவன் வந்தவுடன் இது பற்றிப் பேச வேண்டும் என்று முடிவெடுத்தபடி படுத்திருந்தாள் சியாமளா.

★★★

வாசலில் அழைப்பு மணி ஒலிக்க, வித்யாதரன் தான் வந்து விட்டாரென்று ஆவலுடன் கதவைத் திறந்தவள், அங்கு ராஜவேலுவை நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை.

தயக்கத்துடன் ''வாங்க... அவர் ஊரிலே இல்லையே... நாளைக்கு தான் வருவாரு...'' என்றபடி நின்றவளை, தலை முதல் கால் வரை அளவெடுத்தன அவனுடைய விழிகள்!

''ஏன்... வித்யா இல்லைன்னா நான் வரக் கூடாதா? நான் விதுரனைப்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

பாக்க வந்தேன்.'' என்றபடி அவன் உள்ளே வர, அவன் மேல் ஏதோ ஒரு வித வாசனை!

உடனே, அவன் குடித்திருந்ததைப் புரிந்து கொண்டாள் அவள்.

''ப்ளீஸ்! அவர் வந்தப்புறம் வாங்க... நீங்க நல்ல நிலைமையில இல்லை...'' மெதுவாக கூறியபடி கையெடுத்துக் கும்பிட்டாள்.

''ம்... நீங்க நல்ல நிலைமையில இப்ப இருக்கறதுக்கு நான் தான் காரணம்கிறதை மறந்துடாதே! எல்லாமே உனக்காகத் தான் செஞ்சேன்... என்ன அழகுடி நீ... அதை நானும் அனுபவிக்கணும்... நீ கொஞ்சம் அனுசரிச்சா எல்லாருக்கும் நல்லது... உன்னைப் பாத்த முதல் நாளே நான் முடிவு பண்ணிட்டேன்...'' என வக்கிரமாகச் சிரித்தான் அவன்.

உடலெங்கும் தீப்பொறி பட்டாற் போல் தகிக்க, ரௌத்ரமாய் நிமிர்ந்தாள் அவள்.

''நண்பனோட மனைவி ஒரு சகோதரிக்கு சமம்... அதை புரிஞ்க்காம இப்படிப் பேச உனக்கு வெக்கமா இல்லை... வெளியே போடா நாயே...'' பத்ரகாளியாகச் சீறினாள்.

பாரதியின் அக்னிக் குஞ்சைப் போல், மனதிற்குள் சிறு தழலாய் உள்ளே எரிய ஆரம்பித்த நெருப்பு, பெரும் சுடராய் அவள் விழிகளில் தெரிந்தன.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வக்ரமாய் உறங்கிக் கொண்டிருக்கும் மிருகம், அவனுக்குள் வெகு நாளாய் விழித்திருப்பதையும், இன்று அது வெளியே வந்து அவளை சூறையாடத் துடிப்பதையும் இன்று தான் உணர்ந்தாள் அவள்.

## 8

ஒரு கணம் அசந்து நின்றவன், பிறகு வாசல்புறம் திரும்பிச் சென்றான்.

நிம்மதி பெருமூச்சுடன் நின்றவள், அவன் வெளியில் செல்லாமல், அவன் வாசல் கதவை மூடுவானென்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் விதிர்த்துப் போனவள், சுதாரிப்பதற்குள் அருகில் வந்து அவளை சூறையாட ஆரம்பித்தான் அவன்.

அவனிமிருந்து தப்பி அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தவள், உதவி கோரிக் கத்திக் கதறினாள்.

அவள் பேக்டரிக்கு வரவில்லையே என்று விசாரிப்பதற்காக, அப்போது அங்கு வந்த மனோகரனுக்கு, அந்த சப்தம் தெளிவாகக் கேட்டது.

பதறிப்போய் வாசல் கதவைத் தட்டியவன், அவள் திறக்காமல் போனதும், ஜன்னல் வழியே எட்டிப் பார்த்ததும், உறைந்து போனான்.

உடனே சுதாரித்து, ''சியாமளா... பின் கதவைத் திறந்து விட்டு வெளியே வாங்க'' என்ற போது, குழந்தை விதுரன் சப்தம் கேட்டு அழ ஆரம்பித்திருந்தான்.

வேகமாக ஓடிச் சென்று அவள் பின் கதவைத் திறந்து விட, புயலென நுழைந்தவன், ராஜவேலுவைத் துவைத்து எடுத்து விட்டான்.



பெண்ணிடம் தன் வீரத்தைக் காட்டிய அந்தக் காமுகன், ஒரு ஆணிடம் தோற்று ஒடுங்கிப் போனான்.

மனோகரன் அவனைத் தரதரவென்று இழுத்து வந்து, சியாமளாவின் கால்களில் விழச் செய்தான்.

''ஏய்! இன்னொரு தடவை இவங்க பக்கம் வந்தே... அப்புறம் பாரு! பெண்களைத் தொடகையிருக்காது.... மன்னிப்பு கேளுடா!... அவங்களுக்கு ஒண்ணுன்னா கேக்க ஆளில்லேன்னு நினைச்சியா? அவங்க தம்பி... நான் இருக்கேண்டா... ''கோபத்துடன் உறுமினான்.

குழந்தையை சமாதானப்படுத்தியபடி மிரண்டு போய் நின்றிருந்தவளை வணங்கிய ராஜவேலு, ''என்னை மன்னிச்சுடு சியாமளா! நண்பனோட மனைவியத் தப்பா நினைச்சது எவ்வளவு பெரிய தப்புன்னு புரிஞ்சிடுச்சி! தயவு செஞ்சு இத வித்யா கிட்ட சொல்லிடாதேம்மா! இனிமே நான் உன் பக்கமே வரமாட்டேன்... அடுத்த வாரம் நான் குடும்பத்தோட கோயம்புத்தூருக்குப் போறேன்... ஏதோ புத்தி பிசகிடுச்சி... எனக்காக, வித்யாவுக்காக நீ இதை மறந்திடணும் ''கண்ணீருடன் கும்பிட்டான்.

கெட்ட குணங்களை விசுவ ரூபமெடுக்க விடாமல், காலடியில் போட்டு மிதித்து விடும் சக்தி எல்லோருக்கும் சாத்யமாவதில்லை என்பது புரிய, வெறுப்புடன் அவள் திரும்பிக் கொண்டாள்.

''நீ என்னை மன்னிச்சிட்டேன்னு சொன்னா தான் நான் போவேன்...'' நடுங்கும் குரலில் கெஞ்சினான் அவன்.

''சரி...போ! சியாமளா ரொம்ப நல்லவங்க... மறக்கற, மன்னிக்கிற குணம் அவங்ககிட்ட அதிகம்...! அதனால நீ தப்பிச்சே!'' என்றபடி ராஜவேலுவை கழுத்தைப் பிடித்து தள்ளி அனுப்பினான் மனோகரன்.

திரும்பிச் செல்லும் வழியில், அடிபட்ட புலியாய் தன் காயங்களை வருட ஆரம்பித்த ராஜவேலுவின் மனதிற்குள், பெரும் வன்மம் சூழ்ந்ததை அவர்கள் இருவருமே அறியவில்லை.

தன் வீட்டிற்குச் சென்ற ராஜவேலு, உடனே போனில் வித்யாதரனுக்கு தொடர்பு கொண்டான்.

★★★

அன்றிரவு, சியாமளாவை அந்த வீட்டில் தனியே விட்டுச் செல்ல மனமில்லாத மனோகரன், தன் வீட்டிற்கே அவளையும் குழந்தையையும் அழைத்து வந்து விட்டான்.

ராஜவேலுவைப்பற்றி உடனே வித்யாதரனிடம் கூறி அவனை மிருகமாக்க வேண்டாம் என்று, சியாமளாவிடம் சமாதானப்படுத்தினார் சம்பூர்ணம்.

தான் இங்கிருக்கும் விஷயத்தை சொல்வதற்காக அவள் போன் செய்த போது அவன் கிளம்பி விட்டதாகக் கூறினர்.

ஆனால், அதிகாலையில் கன்றிச் சிவந்த முகத்தில் கடும் சீற்றத்துடன், மனோகரனின் வீட்டிற்கு வந்தான் வித்யாதரன்.

வந்தவுடனே, ''ஏய்! ஏன் இங்கே வந்து தங்கியிருக்கே?'' கோபத்துடன் கத்தினான்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''நீங்க முதல்லே உள்ளே வாங்க... அங்க தனியா இருக்க வேண்டாம்னு தான்...'' மெல்லக் கூறினாள்.

''நேத்து வேலு நம்ம வீட்டுக்கு வந்திருந்தானா?''

அவன் கூர்மையான பார்வையுடன் கேட்க, ''இல்லை...'' என்று மனோகரனும் ''ஆமாம்...'' என்று சியாமளாவும் ஒரே நேரத்தில் பதிலளித்தனர்.

''என்ன... உங்க கள்ளக்காதல் எனக்குத் தெரிஞ்சிடுச்சேன்னு பயமா? ஆளாளுக்கு மாத்தி மாத்தி உளறுறீங்க?''

சட்டென்று, அவளுடைய மனமும் உடலும் சுக்கு நூறாய் உடைந்து சிதறின.

அந்த வார்த்தைகளைக் கேட்டிருந்தால், விஷம் கூடச் செத்திருக்குமென்று தோன்றியது.

''என்னங்க... ஏன் இப்படி அபாண்டமாப் பேசறீங்க?'' தவிப்புடன் கேட்டாள் சியாமளா.

''ஏய்... போதும் நடிக்காதே!... எல்லாம் எனக்குத் தெரியும்... நானும் கொஞ்ச நாளா மனசுக்குள்ளே போட்டு புழுங்கிட்டிருந்த விஷயம் தானே இது! எல்லாத்தையும் வேலு சொல்லிட்டான்... நீயும் இவனும், பாக்கக் கூடாத ஒரு கோலத்துல இருந்ததைப் பாத்தவுடனே, தன் நெஞ்சே வெடிச்சுப் போயிடுச்சின்னான்!

உங்களைக் கையும், களவுமாப் புடிச்சி, ''என் நண்பனுக்கு துரோகம் செய்யறீங்களேன்னு'' கேட்டதுக்கு, அவனைப் போட்டு இந்த துரை அடிச்சானாமே?

சே... உங்க ரெண்டு பேருக்கும் வெக்கமா இல்லை? அதுக்கு இந்தம்மா கூட்டா?'' உறுமினான் வித்யாதரன்.

''சார்... அவரு தப்பா சொல்லியிருக்காரு! எல்லா உண்மையையும் நான் சொல்றேன். நேத்து சியாமளா லீவு போட்டிருந்தாங்க... ஏன்னு பாக்கலாம்னு நான் வீட்டுக்குப் போனப்ப தான் உங்க நண்பர் வேலு இவங்ககிட்ட தப்பா நடந்துக்க முயற்சி செஞ்சிட்டிருந்தாரு! நான் தான் அவரை அடிச்சிட்டு இவங்களைப் பாதுகாப்பா இங்கே கொண்டு வந்து



என்னங்க! வானம் கறுக்குதே... கண்டிப்பா மழை வருமா?

மழை வரணும்னு அக்கரை படுறியே, ஏன்?

பக்கத்து வீட்டு பாமா, அவ மொட்டை மாடி நிறைய வடாகம் போட்டு காய வைத்திருக்கா!

-கு. அருணாசலம்,
தென்காசி.



தங்க வெச்சேன்... இது தான் நடந்தது...'' கலங்கிப்போய் கூறினான் மனோகரன்.

''சே... எவ்வளவு பச்சைப்பொய்...! நானும் உங்களை கவனிச்சிட்டு தானே இருக்கேன்... நான் உங்க ரெண்டு பேரையும் நம்ப மாட்டேன்... இரு... உங்க மானத்தை சந்தி சிரிக்க வைக்கிறேன்..'' என்றவன், வாசலுக்கே சென்று கத்தத் தொடங்கினான்.

அவன் அசிங்கமாகக் கத்தக் கத்த அந்தத் தெருவே கூடி வேடிக்கை பார்க்க, மூன்று பேரும் அவமானத்தில் கூசிக் குறுகிப் போயினர்.

பிறகு தன் மனைவியை அடித்து இழுத்துச் சென்றவன், வீட்டிற்குப் போன பிறகு வார்த்தைகளால் அவளை சித்ரவதை செய்து தீக்குளிக்கச் செய்தான்.

அவள் எவ்வளவோ கெஞ்சியும் அழுதும், அவனை மாற்றவே முடியவில்லை.

மடியில் குழந்தையுடன், ராஜவேலுவின் வஞ்சகத்திற்குப் பலியாகிப் போன தன் வாழ்க்கையை எண்ணி, விடிய விடிய உறங்காமல் அழுதபடியே விழித்திருந்தாள் அவள்.

அன்றிரவு முழுவதும், அடையாளம் தெரியாத ஒரு சோகப் பந்து அவள் இதயத்தை அடைத்துக் கொண்டிருந்தது. தான், உண்மையை உடைத்து சொல்லாததால், மவுனமாக இருந்ததால் அந்த வேலு பொய்யை உரக்க சொல்லி உண்மையாக்கி விட்டது புரிவதாய்!

★★★

விடியல் தன் கிரகணங்களை பூமியில் பதித்த போது, டெலிபோன் மணி ஒலிக்க ஆரம்பித்தது.

மெதுவாக எழுந்து சென்று எடுத்தவளை, இடியெனத் தாக்கியது சம்பூர்ணம் கூறிய செய்தி!

வித்யாதரன் ஊரைக் கூட்டி ஏற்படுத்திய அவமானத்தைத் தாங்க முடியாத மனோகரன், நள்ளிரவிலேயே தூக்குப் போட்டுக் கொண்டு தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருந்தான்.

அதைக் கேட்டதும் துடித்துப் போனவள், ஓடிச் சென்று வித்யாதரனை எழுப்பினாள்.

''அடப்பாவி! உன்னோட தவறான சந்தேகத்தாலே இப்ப ஒரு உயிர் போயிடுச்சே.... அந்த வயசான தாய்க்கு ஒரு மகனை உன்னால் திருப்பித் தர முடியுமா? சீ! நீயெல்லாம் ஒரு மனுஷனா? ஒரு சகோதரன் மாதிரி என்கிட்ட அன்பாப் பழகிட்டிருந்த ஒரு நல்ல மனுஷனை கொன்னுட்டியே... நீயெல்லாம் ஒரு மனுஷன்னு உன்னை நம்பி வந்தேன் பாரு... என்னைச் சொல்லணும்.!''

அவனுடைய சட்டையை பிடித்து அவள் உலுக்க, உறைந்து நின்றிருந்தான் அவன்.

ஆனால் மறு கணமே, நல்ல பண்புகளை உதறி நிமிர்ந்தான்.

''செத்துட்டானா? உங்க கள்ளக்காதல் வெளியே தெரிஞ்சிடுச்சேன்னு அவமானம் தாங்க முடியாம செத்துட்டான் போலிருக்கு! இனிமே தான் எனக்கு நிம்மதி!'' கலகலவெனச் சிரிக்க



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

ஆரம்பித்தான்.

''சீ... நீங்கல்லாம் திருந்தவே மாட்டீங்க! நான் போறேன்... அந்த நல்ல மனுஷனோட இறுதிக் காரியத்தை நானே நடத்துறேன்...! அனாதையா நிக்கற அந்தம்மாவுக்கு இனிமே நான் தான் பொண்ணுக்குப் பொண்ணா, பையனா இருக்கப் போறேன்... ஒரு வேளை திருந்திட்டீங்கன்னா அங்க வந்து என்னைப் பாருங்க... நீங்க செஞ்ச தப்புக்கு ஒரு உயிர் விலையாத் தரப்பட்டிருக்கு...! அதுக்கு நான் தானே பிராய்ச்சித்தம் செஞ்சாகணும்...''

சீறி விட்டுத் தன் துணிகளையும், குழந்தையையும் எடுத்துக் கொண்டு, உடனே கிளம்பினாள் சியாமளா.

பிறகு, எல்லாக் காரியங்களும் நடந்து முடிந்து ஓய்வாக அமர்ந்திருந்த போது தான் விதுரனைப் பார்த்து வெகு நேரமானது, அவளுக்கு உறைத்தது.

காலையிலேயே, தங்கள் குடும்ப நண்பரின் மகன் என்ற முறையில் மனோகரன் இறந்த விஷயம் கேள்விப்பட்டு, துக்கம் விசாரிக்க வந்திருந்தார் அவளுடைய அண்ணன் வெங்கடேசன்.

அங்கு குழந்தையுடன் அவளைக் கண்டதும், பழைய விஷயங்களை மறந்து பாசத்துடன் அணைத்துக் கண்ணீர் விட்டார் அவர்.

அவர்களுக்கும் குழந்தை இல்லாததால், அவர் விதுரனை ஆவலுடன் தூக்கிக் கொள்ள, பிறகு அண்ணியிடம் அவனைக் கொடுத்து விட்டு, தொழிற்சாலையிலிருந்து வந்தவர்களிடம் பேசி இறுதி சடங்கிகற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள் சியாமளா.

அண்ணி குழந்தை விதுரனை அன்புடன் பார்த்துக் கொள்ள, வெங்கடேசன் வெளி வேலைகளுக்கு அலைந்து கொண்டிருந்தார்.

வெகு நேரம் கழித்து உள்ளே வந்தவள், அவர் கையிலும் விதுரன் இல்லாது போகவே பதறிப் போனாள்.

அவரிடம் கேட்ட போது, ''உன் புருஷன்தாம்மா ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி வந்து தூக்கிட்டுப் போனாரு... இங்கே தானே இருக்கேன்னு சொன்னாரு...''விபரம் புரியாமல் கூறினார் அவர்.

மனதிற்குள் சட்டென்று ஒரு அதிர்ச்சி ஓட, பதட்டத்துடன் விதுரனைத் தேடிய போது, சியாமளாவின் பக்கத்து வீட்டுப்பையன் அவளைத் தேடி வருவது தெரிந்தது.

''ஆன்ட்டி! இந்த லெட்டரையும், வீட்டு சாவியையும் உங்ககிட்டே அங்கிள் கொடுக்கச் சொன்னாங்க!''

''நடத்தை சரியில்லாத ஒருத்தியுடன் வாழ்வதற்கு தனக்கு விருப்பமில்லை... தன் மகனும் அந்தக்கேடு கெட்டவளின் நிழலில் வளர்வதற்கு தன்னால் அனுமதிக்க முடியாது... இனி தன்னைத் தேட வேண்டாம்'' என்றும், தன் குழந்தையுடன் வெகு தூரம் செல்லப் போவதாகவும் அவளை சாகும் வரை தன்னால் மன்னிக்க முடியாதென்றும், அதில் எழுதி இருந்தான் வித்யாதரன்.

''கடவுளே...!'' அலறியபடி தரையில் சரிந்த சியாமளாவை, வெங்கடேசனும் சம்பூர்ணமும் தாங்கிக் கொண்டனர்.



''அண்ணா! எனக்குன்னு இருந்த எல்லாமே போச்சே? உங்களை மீறிப் போனதுக்கு எனக்குக் கிடைச்ச தண்டனையா, இது? என் குழந்தை எனக்கு வேணும்... அவன் இல்லாம நான் எப்படி?'' கண்ணீருடன் மூர்ச்சையானாள் சியாமளா.

உடனே போலீஸில் புகார் கொடுத்தும், வித்யாதரனையும், குழந்தை விதுரனையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அங்கிருந்து தொழிலை மாற்றிக் கொண்டு, வேலுவும் அவனும் வேறு எங்கோ சென்று விட்டிருப்பது புரிந்தது.

வெங்கடேசனும், அவர் மனைவி சியாமளாவும், அவளைப் பூவாய் தாங்கினர்.

இழப்பின் கொடுமை தாங்காது ஓய்ந்து போயிருந்தவளைத் தேற்றுவதற்கு, வெகு நாட்களாயின.

மகனையும், கணவரையும் தொலைத்து விட்டு அவள் நிர்க்கதியாய் நிற்க, இருந்த ஒரு உறவையும் இழந்து சம்பூர்ணமும் தனியாக இருந்ததால், நான்கு பேரும் ஒரு குடும்பமாக இணைந்தனர்.

மதுரையிலிருந்து, வெங்கடேசன் இருந்த விருதுநகருக்கே இருவரும் குடி பெயர்ந்தனர்.

ஒரு மாதம் கழித்து சியாமளா அங்கு ஒரு வேலைக்கு செல்ல ஆரம்பிக்க, சம்பூர்ணமும் தெளிந்து விட்டு வேலைகளில் பங்கெடுத்துக் கொள்ள ஆரம்பித்தார்.

நாட்கள் நதியின் வேகத்துடன் செல்ல, விதுரனை மட்டும் அவளால் மறக்கவே முடியவில்லை.

மழலைக்காக ஏங்கி, மனதால் ஊமையாகிப் போனது மனது!

கணவனில்லாதவள் என்பதால், சமூகத்திலிருந்து முகவரியில்லாத பல கற்கள் மேலே விழுந்தன. வாழ்க்கையில், 'வாழா வெட்டி' என்ற பட்டத்துடன் சுலபமாகப் பயணிக்க முடியவில்லை.

ஆனால், எல்லாவற்றையும் சமாளிக்கும் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் மெல்ல மெல்ல வளர்த்துக் கொண்டாள் அவள்.

## 9

**கா**லம்... எப்போதுமே மனிதனின் மனப்புண்ணை ஆற்றும் சக்தி வாய்ந்த ஒரு ஆயுதம்!

அது, சியாமளாவின் துயரங்களையும் ஆற்றியது.

வெங்கடேசன் தான் அவளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தார்.

எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்று தோன்றும்போதே, ஒன்றை மட்டும் மறவாதீர்கள்... அது, எதிர்காலம் என்ற ஒன்று, இன்னமும் இருப்பது என்பது தான்''

அறிஞர் கிளப்டனின் வார்த்தைகளை, அவளுக்குப் பாடமாகப் போதித்தார்.

நாட்கள் செல்லச்செல்ல, அவளுக்குள் ஒரு உறுதி வந்தது. மனம்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தனக்குள்ளேயே சபதம் எடுத்தது!

''இதற்காக தன் வாழ்நாளில் என்றாவது ஒரு நாள் வித்யாதரன் வருத்தப்படுவார். நண்பனை நம்பி கட்டிய மனைவியின் மேல் பழி சுமத்திய அந்த மனிதருக்கு காலம் அனைத்தையும் உணர்த்தும். உண்மை தெரிந்த பிறகு, ரணமாய் தாக்கிப்புழுவாய் கருளச் செய்யும். அந்தக் காலம் வர வேண்டும்'' என்று விரும்பியது.

அன்று தான் வித்யாதரனுக்கு மரண அடி விழும். அந்த நிமிடமே அவருடைய சந்தேகம், கோபம், கர்வம் அனைத்தும், சிதறி மானுடம் மட்டுமே எஞ்சி நிற்கும்.

மனம், அந்தக் காலத்திற்காக மவுனமாய் தவமிருக்க ஆரம்பித்தது. உறுதியாய் சபதம் பூண்டது!

ஆனாலும், மகனுடைய பிரிவு அவளை மிகவும் வாட்டிக் கொண்டு தானிருந்தது. ஆனால், அந்தக் காயத்தையும் காலம் மயிலிறகால் வருடியது. சியாமளாவின் வாழ்க்கையில், அந்த மயிலிறகாய் வந்தவள் தான் சவுமியா!

அப்போது வெங்கடேசனுக்குத் திருமணமாகி ஏழு வருடங்கள் ஆகி இருந்தன. ஆனால் குழந்தை பாக்கியம் மட்டும் இல்லாதிருந்தது.

விதுரன் பிரிந்து சென்று நான்கு வருடங்கள் முடிந்த நிலையில், வெங்கடேசனின் மனைவி சியாமளா கருத்தரித்தாள்.

காலம் கொடுத்த நற்செயலாய், அவளுக்கும், அண்ணிக்கும் ஒரே பெயர்கள்!

சம்பூர்ணமும் சியாமளாவும், அவளை அருமையாய் தாங்க, அழகிய சொர்ண விக்ரகம் போல் சவுமியாவைப் பெற்றெடுத்தாள் அவள்.

பிள்ளையை உயிருடன் பறி கொடுத்த சோகத்திலிருந்து மீள ஆரம்பித்திருந்த சியாமளாவும், அவளை உயிராய் வளர்க்க ஆரம்பித்தாள்.

சவுமியாவிற்கு ஆறுமாதங்கள் ஆகி இருந்த நிலையில் தான் ஒரு விமான விபத்தில் வெங்கடேசனும் அவர் மனைவி சியாமளாவும் இறந்து போயினர்.

தன்னிடம் அன்பு செய்பவர்களெல்லாம் தன்னை விட்டுப் பிரிந்து விடுவதை எண்ணி, தன் துர்பாக்ய நிலைக்கு வருந்திய சியாமளாவிற்கு, சவுமியா தான் இனிய மருந்தானாள்.

தானே ஒரு தாயாய் நின்று, அவளை வளர்க்க ஆரம்பித்தரர் சியாமளா.

எல்லாவற்றிற்கும் உறுதுணையாக, சம்பூர்ணம் அவர்களுடன் துணை நின்றார்.

இன்று வரை, தான் யாரென்ற உண்மை சவுமியாக்குத் தெரியாது.

சியாமளாவின் அண்ணன் மனைவி பெயரும் சியாமளா என்பதால் அவளுடைய அப்பா இறந்து விட்டாரென்ற உண்மையைக் கூறியவள், தான் அவளுடைய அன்னை இல்லை என்பதை மட்டும் கூறவில்லை.

அப்பா, அம்மாவின் பெயர் பள்ளி சான்றிதழ்களில் வெங்கடேசன், சியாமளா என்றிருப்பதால், அவளுக்கு சந்தேகமும் வந்ததில்லை.

அவளை தாய் தந்தை இல்லாத அனாதையாக வளர்ப்பதில், சியாமளாவிற்கு உடன்பாடு இல்லை.

இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக... சம்பூர்ணமும்



இணைந்து கொள்ள, மூவருமாக சேர்ந்து பாசக்கூட்டை உருவாக்கியிருந்தனர்.

இடையில், சியாமளாவுடன் பணிபுரியும் ஒருவர் அவரை விரும்பி ஏற்றுக் கொள்ள முன் வந்த போது, சம்பூர்ணம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கூட அவர் ஏற்கவில்லை.

சமூகத்தினால் வரையறுக்கப்பட்ட எல்லைகளையும், அதனால் வருகின்ற சில கட்டுப்பாடுகளையும், ஏனோ சில நேரங்களில் மனிதர்கள் மீறுவதில்லை! அதற்கு, சியாமளாவும் ஒரு உதாரணமாய் இருந்தார்.

★★★

நினைவுகள் மெல்ல எழுவதும் அமிழ்வதுமாய், மெலிதான வேகத்துடன் சியாமளாவிற்குள் தரை தட்ட ஆரம்பித்தன.

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்த போது, கன்னங்கள் கண்ணீரில் நனைந்திருப்பது புரிந்தது.

இன்று மீண்டும் வித்யாதரனைப் பார்த்ததும் பெரும் கோபம் வந்தாலும், விதுரனைக் கண்டதும் தான் உடைந்து விட்டதும், அவனுக்காக ஏக்கம் சுமந்திருந்த மனது, தாய்மை உணர்வில் தவிப்பதையும் உணர்ந்தாள் சியாமளா.

எவ்வளவு கம்பீரமான ஆண் மகனாக அவன் வளர்ந்திருக்கிறான் என்று எண்ணும் போதே, அவன் நிறத்திலும் உயரத்திலும் முக அமைப்பிலும் தன்னைப் போலவே இருப்பது உறைத்தது.

வித்யாதரனின் வார்த்தைகள், அவளைக் குழப்பின.

இந்தக் கல்யாணம் நடக்காதென்றால், ஒரு வேளை விதுரன் சவுமியாவை விரும்புகிறானாவென்ற கேள்வி, நெருடலாய் மனதில் வந்தது.

சமீப காலங்களாக அவளுடைய நடையில் தெரிந்த துள்ளதலும், ரகசியமாய் விரியும் இதழ்களும், மனதை மரங்கொத்திப் பறவையாய் குடைந்தன.

சவுமியாவை ஏன் இப்படி ஒரு இக்கட்டில் மாட்டி வைத்தாய் என்று, இறைவனிடம் இறைஞ்சியது இதயம்.

எப்படியும் வித்யாதரன் இதற்கு ஒத்துக் கொள்ள மாட்டாரென்று தோன்றும் போதே தான் மட்டும் ஒத்துக் கொள்வோமா என்ற சந்தேகமும் வந்தது.

தன் குழந்தையே ஆனாலும், இப்போது விதுரன் தன் தந்தையிடம் வளர்ந்திருப்பதால், அவருடைய சந்தேககுணமும், கோபமும், முரட்டுப் பிடிவாதமும் அவனிடமும் படிந்திருக்குமோ வென்ற நினைவில், உள்ளம் விதிர்த்துப் போனது.

ஆனால் விதுரனைப்பார்த்த அந்த நொடி, மனதிற்குள் மீண்டும் மீண்டும் வந்து, மன ஆழத்தில் தேக்கி வைத்திருந்த பாசமும் தவிப்பும், நீர்த்துளிகளாய் மாறி விழியோரங்களில் சிதறின.

''சியாமளா..'' மெதுவான குரலில் அழைத்த சம்பூர்ணம் அவளருகில் அமர்ந்து மெதுவாக தலையை வருடினார்.

''பாத்து ரொம்ப நாளாச்சா... கண்பார்வை வேற மங்கலானதால



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவரை அடையாளம் தெரியலை! இவ்வளவு வருஷம் கழிச்சி உன் நிம்மதியைக் குலைக்கறதுக்காக இவர் ஏன் வந்தார்னு கோபம் வந்தாலும், கடவுளோட எண்ணம் புரியுது..! இவ்வளவு நாள் மனசில பொக்கிஷமா பாதுகாத்துட்டு வந்தியே ஒரு தவம் மாதிரி. அந்த மகனைப் பாக்கற பாக்கியத்தை குடுத்துட்டார் பாத்தியா அந்த பகவான்? நான் தினமும் வேண்டிக்கறது வீண் போகலை!'' விழிகளில் கண்ணீர் துளிர்க்கக் கூறினார்.

''அம்மா..'' அவர் மடியில் சாய்ந்து, தன் உயிரும் உணர்வுகளும் கரையும் வரையில் அழுதவரை, சவுமியாவின் நினைவு உசுப்பியது.

சட்டென்று நிமிர்ந்தவர், ''எம்மா... சவுமியா இன்னும் வரலை?'' கேட்டபடி பதட்டத்துடன் எழுந்து அமர்ந்தார்.

அப்போது வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

★★★

வெகு நேரம் ஹோட்டலில் விதுரனின் வருகைக்காகக் காத்திருந்த சவுமியாவிற்குள் பல யோசனைகள்!

அவன் தரப்போகும் இன்ப அதிர்ச்சி என்னவென்று யோசிக்கும் போதே, மனதிற்குள் இனிப்பாய் ஒரு வித சுகம் ரகசியமாய் பரவியது.

நேசத் தூரிகை குழைத்த எண்ணக் கலவையில், வர்ணங்களின் வார்ப்பாய்... கலையாத ஓவியங்களாய்... அவனைப் பற்றிய நினைவுகள்..!

ஆனால் அவன் வரவே இல்லை!

மெல்லிய சோகத்துடன் எழுந்தவள், தன் வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினாள்.

இரு முறை அழைப்பு மணி அடித்தும் கதவு திறக்கவில்லை என்றதும், அவள் பதறிய போது வாசற்கதவைத் திறந்தார் சம்பூர்ணம்.

''என்ன பாட்டிம்மா! இவ்வளவு லேட்... அம்மாவுக்கு என் மேல கோபமா? அவங்க வீட்டில இருக்கற அன்னிக்கு என்னால இருக்க முடியலை...ப்ச்'' அலுத்தபடி உள்ளே வந்தாள்.

''அம்மா தூங்கறாடா! அவளுக்குத் தலைவலி அதிகமாயிடுச்சி அதான் மாத்திரை போட்டுட்டுத் தூங்கிட்டுருக்கா! எழுப்ப வேணாம்னு சொன்னா! நீ முகம் கழுவிட்டு வா சாப்பிடலாம்.''

''ஏன் பாட்டிம்மா அம்மாவுக்கு திடீர்னு என்னாச்சு! நீங்களும் ஏன் டல்லா இருக்கீங்க!'' தவிப்புடன் கேட்டாள்.

''ஒண்ணுமில்லை... புருஷனோட பிரிவு, உங்கப்பா நினைப்பு அப்படின்னு நினைக்கிறேன்'' அவளைத் தொந்தரவு பண்ண வேண்டாம்... வா'' என்றார்.

மெதுவாகக் கதவைத் திறந்து, மெல்லிய விளக்கொளியில் உறங்கிக் கொண்டிருந்த தாயின் அருகில் சென்றாள், சவுமியா.

முகம் சிவந்திருக்க சோர்ந்து உறங்குபவரையே பார்த்திருந்தவளுக்குள், தாயைப் பற்றிய பெருமை மனம் முழுவதும் நிறைந்தது.

தந்தை இறந்த பிறகும் இந்த சமூகத்தில் தன்னை வளர்க்க அவர்





Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்ற, மெதுவாக அவருடைய நெற்றியில் விரல்களைப் பதித்தாள். அவள்.

உறங்காமல் விழித்திருந்தாலும், கண்களை இறுக மூடிப்படுத்திருந்த சியாமளாவிற்குள், உணர்வுகளின் தளும்பல்கள்!

இந்த பெண்ணிற்கு உண்மை தெரிந்தால், பிறகு தன்னை அவள் எப்படி ஏற்றுக் கொள்வாளோ என்ற தவிப்பு, உடலெங்கும் பரவியது.

''அண்ணா! நம் பெண்ணிற்கு நல்ல வாழ்க்கையையும் நிம்மதியையும் கொடு..'' என்று மானசீக வேண்டுகோள் விடுத்தது இதயம்!

அறைக்கதவை மெதுவாக சாத்திவிட்டு வெளியில் வந்த சவுமிக்கோ, மனதில் பெரும் குழப்பங்கள்!

அழகாக விடிந்து மனதில் நம்பிக்கை விதைகளைத் தூவிய அந்த நாள், சோகமாக முடிந்தது எதனால் என்ற புதிருடன், சாப்பாடு வேண்டாமென்று கூறிவிட்டுப் படுத்துக் கொண்டாள் சவுமியா.

மறுநாள் காலையிலும் ஓய்ந்து போய்ப்படுத்திருந்த சியாமளா, தொழிற்சாலைக்குச் செல்லாமல் விடுப்பு எடுத்திருந்தார்.

''அம்மா... நானும் இன்னிக்கு லீவு போட்டுடவா? வீட்டிலே இருந்து உங்களைப் பாத்துக்கறேனே?'' கொஞ்சலாகக் கேட்டாள் சவுமி.

''வேண்டாம்டா நீ கிளம்பு... சம்பூர்ணம்மா பாத்துப்பாங்க... எதுக்கு வீணா லீவு? சொல்றதைக் கேளு.. எனக்கு ஒண்ணுமில்லை! கொஞ்சம் டயர்டா இருக்கு அவ்வளவு தான். சாயந்திரம் நீ வந்தவுடனே ரெண்டு பேரும் சேர்ந்து செஸ் விளையாடலாம் ஓகேயா?''

''சரி..'' என்றபடி அரை மனதுடன் கிளம்பிய சவுமிக்கோ, விதுரனிடம் கேட்க பல கேள்விகள் இருந்தன.

நேற்று, அவன் வராத செல்லக்கோபம் மனதிற்குள் முணுக் முணுக்கென்று சிறு விளக்காய் எரிய, இதழ்களில் விளைந்த நமட்டுச் சிரிப்புடன் கிளம்பிச் சென்றாள்.

கற்பனை சுரங்கமாய் இறைக்க இறைக்க சுரக்கு நீரூற்றாய் மனதில் காதல் நிறைந்திருந்தது.

ஏனோ, அன்று முழுவதும் விதுரன் ஹோட்டலுக்கு வரவில்லை.

மனம் முழுவதும் அவன் வருகையை எதிர்பார்த்திருக்க, கனவுகள்



உங்க கையெழுத்து ரொம்ப கிறுக்கலா இருக்கு... படிக்க முடியல...சார்!

எந்த முட்டாள்கிட்ட காட்டினாலும் படிச்சிடுவான்... சரி...சரி... நானே படிச்சு சொல்றேன்!

-ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி.



பல சுமந்து வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள் சவுமியா.

அங்கு, அவன் உலகமே ஆடிப்போய், ஆதாரசுதியே குலைந்து அவன் உருக்குலைந்து நிற்பதை, அவள் அறியவில்லை.

இதுவரையிலும், காதலி என்று எண்ணியே கற்பனையில் தன்னுடன் வாழ்ந்திருந்த ஒரு பெண்ணை, ஒரே நிமிடத்தில் சகோதரியாகப் பார்க்க வேண்டுமென்றால் அது சாத்தியமாகுமா..?

இந்த உறவை, நெஞ்சம் சுலபத்தில் ஏற்று தன் மனதை மாற்றிக் கொள்ளுமா? இதயம் எரிமலையாய் வெடித்துச் சிதற அவன் இருந்த நிலை அவளுக்குத் தெரியவுமில்லை.

## 10

அன்று மாலையில் ஹோட்டலுக்கு வந்த விதுரனோ, கடும் கோபத்திலிருந்தான்.

அவனைக் கண்டதும் ஆவலுடன் அருகில் சென்று ''விதூ! நேத்து ஏதோ ஒரு இன்ப அதிர்ச்சி கொடுக்கறேன்னு சொல்லிட்டு, நீங்க வரவே இல்லை. நான் எவ்வளவு ஏமாந்து போயிட்டேன், தெரியுமா?'' வெட்கத்துடன் கேட்டாள் சவுமியா.

சினத்தால் சிவந்திருந்த விழிகளை ஒரு கணம் இறுக மூடியவன், ''ஒரு நிமிஷம்! என்னை இனிமே 'விது'ன்னு கூப்பிட வேண்டாம்! உனக்கு எப்பவுமே நான் பாஸ்தான்! புரிஞ்சுதா? உனக்கு இன்பஅதிர்ச்சி தரப்போய், எனக்குதான் பெரிய துன்பம் வந்திருக்கு போதும்!'' அவளைப் பார்க்க விருப்பமின்றி எங்கோ பார்த்தபடி விரக்தியுடன் கூறினான்.

''ஏன்? என்னாச்சு!'' குழப்பத்துடன் கேட்டாள் சவுமியா.

''இனிமே நான் நிம்மதியா இருக்கணும்னு நீ நினைச்சா, என் முன்னாடி வராதே!'' சுள்ளென்று கூறிவிட்டு, வேகமாகத்தன் காட்டேஜுக்கு சென்றான் அவன்.

ஒன்றும் புரியாமல், மலங்க மலங்க விழித்தபடி உறைந்து நின்றிருந்தவளுக்குள், உணர்வுகள் மரத்துப் போயின.

ஏன் இப்படி திடீரென்று அவன் நெருப்பாய்க் காய்கிறான் என்ற கேள்விக்கு, விடைதான் அவளிடம் இல்லை.

எங்கோ பதுங்கியிருந்த கண்ணீர், வேகமாய் மேலெழும்பி வந்து கண்ணோரம் கசிந்தது.

ஆனால் தன் அறைக்குள் சென்ற விதுரனுக்கோ, தலை வெடித்து விடும் போல் தெறிக்க ஆரம்பித்தது.

நேற்று தந்தை கூறிய வார்த்தைகள், சம்மட்டியாய் மனதில் விழுந்து ரணமாகி இருந்தன.

''அவ உன் அம்மா... ஒரு நடத்தை கெட்டவ!''

வார்த்தைகள், சூறாவளியாய் சுழன்று தாக்கின.

''அப்ப.. சவுமியா?'' உடைந்து போய்க் கேட்டான்.

''தெரியலை எவனுக்குப் பொறந்தவளோ பாவம், அந்தப் பொண்ணு என்ன செய்வா? ஆனா அவ உனக்கு தங்கச்சிங்கிறதை மட்டும் மறந்துடாதே...'' இடியென முழங்கினார் வித்யாதரன்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இரவு முழுவதும் ஒரு நொடி கூட உறங்காமல் விழித்திருந்ததில், மனமும் உடலும் தளர்ச்சியுடனிருப்பதை உணர்ந்தான் விதுரன்.

ரெயில்பெட்டிகள் பயணிக்கும் தண்டவாளத் துண்டுகளாய் தாங்களிருவரும் ஒன்று சேரமுடியாமல் இருப்பது புரிந்த போது, உடைந்து போனது மனது.

தனக்கு வந்த முதல் காதல், மொட்டிலேயே கருகிய கொடுமையை எண்ணி கைகளிடையே தலையைத் தாங்கியபடி அமர்ந்திருந்தவனை, நிஜங்களின் கூர்மை ஈட்டியாய் தாக்கியது தாங்க முடியாமல் உடனே கிளம்பி விட்டான் விதுரன்.

அன்று முழுவதும், வழிமறந்த குழந்தையைப் போல் தவித்து நின்றாள் சவுமியா.

பபியும் விடுமுறை எடுத்திருந்ததால், எதையும் பகிர்ந்து கொள்ளவும் ஆளில்லாமல் போயிற்று.

★ ★ ★

அன்றிரவு, உறக்கம் வராமல் விழித்திருந்த வேளையில், வெண்மதி இரவின் சில்லென்ற கடல் அலைகள் பாறைப் பரப்பில் பரவித் தேங்குவதைப் போல் விதுரனின் நினைவுகள் சிலிர்ப்புடன் உள்ளே ஊடுருவின.

வெகுநேரம் நித்திரை தொலைத்து இமை மூடாதிருந்தவள், காலையில் எழுந்த போது மிகவும் சோர்வாக உணர்ந்தாள்.

அவளைக் கண்டதும் துணுக்குற்ற மனதை அடக்கிக் கொண்ட சியாமளா, அவளுக்கும் விதுரனுக்கும் நடுவில் ஏதோ நடந்திருப்பதை உணர்ந்துக் கொண்டார்.

இருவரையும் பிள்ளைகளாய் எண்ணிய தாயுள்ளம். இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவித்தது.

''சவுமியா! இன்னிக்கு நானும் லீவு போட்டுடறேன்.. நீ படகுல போகணும்னு ஆசைப்பட்டியே.... போகலாமா?'' மெதுவாகக் கேட்டார்.

''ஊஹூ ம்... வேண்டாம்மா! வீட்டிலேயே இருக்கலாம்'' என்றவளை வற்புறுத்தி வெளியே அழைத்துச் சென்றார் சியாமளா.

கருணாகரனிடம் விடுப்பிற்கான கடிதத்தைக் கொடுத்து விட்டு, சம்பூர்ணத்தையும் அழைத்துக் கொண்டு மூவரும் கிளம்பினர்.

மதியத்திற்கான உணவு வகைகளை வாங்கி எடுத்துக் கொண்டு படகு வீட்டில் ஏறிய போது, மனம் பெரும் ஆயாசமாக இருந்தது.

எதிலிருந்தோ தப்பி ஓடுவது போல் ஒரு உணர்வு!

ஆனால், வாழ்க்கையில் எல்லாவற்றையும் தைரியமாக எதிர் கொண்டு தான் ஆக வேண்டும் என்பதும் புரிந்தது.

வைரமணியாய் தெளித்த நீர்த்துளிகளைப் பார்த்தபடி, மனதில் விடை தெரியாக் கேள்விகளுடன் பயணித்தவளைக் கவனித்த சியாமளாவிற்கோ, பெரும் விரக்தியுடன் வேதனையும்!

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் அந்தப் படகின் கூரை பிரம்புகளால் அழகுற அமைக்கப்பட்டிருந்தது.

உள்ளேஅமருவதற்கு பிரம்பு நாற்காலிகள் பொருத்தப்பட்டிருக்க



இருபுறமும் தட்டிகள் தடுப்புகளாய் உபயோகப்படுத்தப் பட்டிருந்தன.

இயற்கை தன் அழகை எல்லாம் இங்கு மட்டும் சீதனமாகத் தந்து விட்டதோவென்று எண்ணுமளவுக்கு, பச்சை நிற வெல்வெட் தோட்டங்கள்!

கம்பீரமாக அணிவகுத்திருந்த தென்னைகளும், வானத்து நீலத்தை இரவல் வாங்கி ஒளிர்ந்து சலசலக்கும் ஏரியும், மனதை ஓரளவு அமைதிப்படுத்தின.

அவர்களுடைய ஹோட்டலில் இருக்கும் படகு வீடுகள், வேறு மாதிரியானவை.

முன்பு கெட்டு வள்ளம் என்று அழைக்கப்பட்டு வந்த அந்தப் படகுகள், இப்போது படகு வீடுகளாக மாறி விட்டிருந்தன.

அதில் சமையல் அறை, கழிவறை, தங்கும் அறை என்று எல்லா வசதிகளும் உண்டு.

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவள், எதிரில் தங்களுடைய ஹோட்டலின் பெயர் பொறித்த ஒரு படகு வீட்டைக் கண்டதும், ஆவலுடன் எழுந்து நின்றாள்.

மறு நிமிடமே, இன்மக்க மனமின்றி வேரோடிப் போனாள்.

அந்தப் படகில், அழகிய கருத்தடர்ந்த சிகை காற்றில் அலை பாய யோசனையுடன் நின்றிருந்த விதுரன், எங்கோ பார்வையைப் பதித்திருந்தான். அவனை ஒட்டியபடி அருகிலேயே உரிமையுடன் நின்றிருந்த அந்தப் பெண், அப்போது அவள் பார்வையில் பட்டாள்.

நல்ல உயரமாக அரேபியக் குதிரை போன்ற கருமையின் மினு மினுப்புடன், நவீன உடையிலிருந்த அந்தப் பெண்தான், ஒரு வேளை விதுரனின் மன மாற்றத்திற்குக் காரணமோவென்ற கேள்வி, மனதில் புகுந்து வண்டாகக் குடைந்தது.

சட்டென்று ஒரு வித சூனியம் மனதைத் தாக்கி விடத் திரும்பிய போது, விதுரனும் அவளை கவினத்து விட்டான்.

அவளைக் கண்டதும் தன்னையறியாமல் விரிந்த விழிகளில், அருகிலிருந்த சியாமளா பட்டதும், ரவுத்ரமாய் ஒரு சிவப்பு!

உடனே அந்தப் பெண்ணிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவன், வேகமாக உள்ளே சென்றான்.

இதை அறியாத சம்பூர்ணமும், சியாமளாவும் கேரளத்தின் எழிலை, வானிலிருந்து பூமிக்கு இறங்கி வந்த பச்சை தேவதையாய் தெரிந்த சுற்றுப்புறத்தை, ரசித்தபடியே பேசிக் கொண்டிருந்தனர்.

இதயத்தின் ஆழ்மன வெளியில் யாரோ ஆழமாகக் கத்தியை செருகியதைப் போன்ற ஒரு வழி எழ, சவுமியின் முகம் உடனே சுருங்கிப் போனது.

ஒரு வேளை அந்தப் பெண் தான் ராஜவேலுவின் பெண் சீமாவோ என்ற சந்தேகமும் கூடவே வந்தது.

அதுவரை கை கோர்த்திருந்த சுவாரஸ்யம் தொலைந்து போய் தனக்குள்ளேயே பொங்கிய யோசனையுடன் இதழ்களைக் கடித்தபடி அமர்ந்திருந்த போது, சியாமளா அவளருகில் வந்து அமர்ந்தார்.

அப்போது தான் தாய் நிலத்திலிருந்து பறித்து, வேறு இடத்தில்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

நடப்பட்டது போன்ற ஒரு செடியின் வாட்டம் தெரிந்தது, அவளிடம்!

''என்னடா யோசனை? நீ ரிலாக்ஸ் பண்ணிக்கணும்னு தானே வெளியில கிளம்பி வந்தோம். இங்கே வந்தும் அப்படி என்ன பிரச்சனை? டல்லா இருக்கே?'' மெதுவாகக் கேட்டார்.

''ஒண்ணுமில்லைம்மா..'' என்றாள், சிறு முறுவலுடன் அவருக்காக வெளியில் பார்வையை பதித்தாலும், விழிகளில் பதிந்த காட்சிகள் இதயம் தொட மறுத்தன.

வீட்டிற்கு வந்த பிறகும், விதுரனும் அந்தப் பெண்ணுமே மனதிற்குள் வலம் வந்து துன்பம் தர தோட்டத்திற்கு வந்து அமர்ந்த போது, பரந்த நீல வானப் பின்னணியில் அவன் முகம் நிழலாய் ஒளிர, மனம் அவன் பாராமுகத்தால் கனத்தது.

★★★

மறுநாள், ஹோட்டலுக்குச் சென்ற போது, மாதவன் நாயர் ஊரிலிருந்து திரும்பியிருந்தார்.

பிரமோத் மிகுந்த சந்தோஷத்திலிருந்தான்.

''சவுமியா! நானும் கருணா சாரும், போன வாரம் பபி வீட்டிலப் பேசினோம். அவங்க யோசிச்சி சொல்றேன்னாங்க... நேத்து தான் சம்மதம் சொன்னாங்க.! எங்க வீட்டிலயும் ஒரு வழியா சம்மதிச்சிட்டாங்க.. பபிக்கு ரொம்ப சந்தோஷம்! உடனே உன் கிட்டே சொல்லணும்னு போன் பண்ணினாளாம்.. உங்க வீட்டில ரிங் போயிட்டே இருந்ததுன்னு சொன்னா!'' உற்சாகத்துடன் கூறினான்.

''ஓ! கங்கிராட்ஸ். நான் உடனே பபிகிட்டப் பேசறேன். ரொம்ப சந்தோஷமா இருக்கு! நேத்து நாங்க எல்லாரும் படகுல சுத்திப் பாக்கப் போயிருந்தோம்... அதான்! எப்போ கல்யாணம் ப்ரமோத்?'' எனறபடிக் கை கொடுத்தாள்.

''அடுத்த மாசமே இருக்கும் எங்க ஊரில தான். நடத்துவோம், நீங்க எல்லாரும் கட்டாயம் வரணும்..''

அவன் புன்னகையுடன் கூறும் போதே, ''நிச்சயமா!'' என்றாள் சவுமியா. பிறகு, ''ம்...

அரசியல்வாதி வீட்டுல திருட போனது தப்பா போச்சுனு எப்படி சொல்ற?

அந்த அரசியல்வாதி நான் போட்டுட்டு போன லுங்கி, சட்டையையும் கூட பிடுங்கிட்டு விட்டுட்டாரே

- க.வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி





காதல் கைகூடும்னவுடனே முகமே தௌசண்ட் வாட்ஸ் பல்பு மாதிரி ஜொலிக்குது. ''அடிக்குரலில் கேலி, செய்த போது திடீரென்று பின்புறத்தில் இருந்து ஒரு குரல் வந்தது.

''என்ன பிரமோத்... ரொம்ப சந்தோஷமா இருக்கிற மாதிரி தெரியுது.. பபி லீவுன்னவுடனே, புதுசா கம்பெனி தேடறே போலிருக்கு'' நறுக்கென்று வந்தன வார்த்தைகள்!

அது விதுரனின் குரல் என்பதைப் புரிந்து உடனே திரும்பியவளுக்குள், மவுனப் புயலொன்று உடனே மையம் கொண்டது.

சட்டென்று ஒரு வித வெப்பம் காட்டுத் தீயாய் உள்ளே பரவியது.

## 11

விதுரனின் கையைப் பிடித்தபடி, அவனுடைய தோளில் சாயாத குறையாக ஒட்டிக்கொண்டு நின்றிருந்தாள், நேற்று படகில் பார்த்த அந்தப் பெண்!

''பிரமோத்... இவங்கதான் வேலு அங்கிளோட பொண்ணு சீமா...மைஃப்ரண்ட்! யுஎஸ்ஸிலே போய் படிச்சிட்டு வந்திருக்காங்க! இனிமே, இவங்களும் உங்களுக்கு ஒரு பாஸ்!'' அழுத்தமான குரலில் கூறினான்.

தர்மசங்கடத்துடன் அருகில் நின்றிருந்த சௌம்யாவிற்கோ, இதயம் படபடத்து விழிகள் அலைப்புறுதலுடன் தழைந்தன.

''விதுர் டியர்! இது யாருன்னு நீங்க இன்ட்ரடியூஸ் பண்ணவேயில்லையே?''கொஞ்சிய படி கேட்டாள் அந்தப்பெண்.

''ஓ... மறந்திட்டேன்..!இவங்க நம்ம ஸ்டாஃப் மிஸ் சௌம்யா! கருணா அங்கிளுக்கு அசிஸ்டெண்ட்!''அவளையே கூர்ந்தபடி கூறினான்.

சட்டென்று சீமாவின் மனது தீக்குழம்பாய்த் தகித்தது...

இவ்வளவு அழகியாய் ஒரு பெண், தனக்கு கீழே வேலை செய்வதும், விதுரனின் பார்வையில் வலம் வருவதையும் நெஞ்சம் விரும்பவில்லை,

''வணக்கம் மேடம்!''என்று கை குவித்தவளை, அலட்சியத்துடன் நோக்கிய சீமாவுக்குள் பெரும் பொறாமை உணர்வு!

''ஹலோ...''என்றபடித் திரும்பியவள், ''டியர்! நான் ஸ்விம் பண்ணப்போறேன்...நீங்களும் வரீங்களா?''சலுகையுடன் கேட்டாள்.

''சாரி சீமா! நான் இங்கே வேலை விஷயமா மட்டும்தான் வருவேன்..ரெக்ரியேஷனுக்கு டைம் ஒதுக்கிறதில்லை...யு கேரி ஆன்'' என்றபடி அவளை அனுப்பிவிட்டு, சௌம்யாவிடம் திரும்பினான்.

''என்ன...உடனே ஆளை மாத்தியாச்சு போலிருக்கு...ம்..நான் எதிர்பார்த்ததுதான்!''இகழ்ச்சியாகக் கூறினான்.

''சார்...ஆளை மாத்தறது...மறந்திட்டேன்கிறதெல்லாம் எனக்கு பழக்கமில்லே! அதெல்லாம் பணக்கார வர்க்கத் தோட குணம்! எனக்கு வேலையிருக்கு...நான் வரேன்!''

முகம் சிவக்க கோபத்துடன் கூறிவிட்டு உள்ளே சென்றவளுக்கு, அன்று முழுவதும் ஏனோ வேலையே ஓடவில்லை.

அன்று ஹோட்டலை சுற்றிப் பார்த்தபடி அதிகாரம் செய்த



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சீமாவிற்கு, செளம்யாவை ஏனோ பார்த்தவுடன் பிடிக்காமல் போனது.

அவளுடைய அழகும், அவளைக் கண்டதும் விதுரனின் விழிகளில் எரிந்த தீயும், சீமாவைக் கொதிக்கச் செய்தன.

சிறு வயதிலிருந்தே, அவன் தான் மாப்பிள்ளை என்று கூறியே ராஜவேலு அவளை வளர்த்திருந்ததால், அவனை யாரிடமும் விட்டுத்தர அவள் மனம் சம்மதிக்கவில்லை.

ஆனால் தன்னைப் பற்றிய ரிஷிமூலத்தையும், விதுரனின் வெறுப்பையும், ராஜவேலுவின் திட்டத்தையும் அறியாத செளம்யா தான், தவித்துப் போனாள்.

மனம் ஆறுதலடைய கேடரிங் செக்ஷனுக்கு சென்றபோது, மாதவன் அவளை பிரியத்துடன் வரவேற்றார்.

''மோளே...ஏன் டயர்டா இருக்கு? ''கனிவுடன் கேட்டவரிடம், ''ஒண்ணுமில்லை அச்சா! கொஞ்சம் தலைவலி! ''உண்மையை மறைத்துப் பொய் கூறினாள்.

''ஓ! ஒரு நிமிஷம்..நல்ல ஹாட்டா மிளகும் சுக்கு கலந்து சாய் போட்டுத் தாரேன்.. அதைக்குடிச்சால் தலைவலி பறந்து போகும் ''கூறியபடியே சுக்கு டீ தயாரிக்க ஆரம்பித்தார்.

ஓய்ச்சலாக அமர்ந்திருந்தவளை, சீமாவின் குரல் கலைத்தது.

''என்ன இங்க வந்து உட்காந்திருக்கே...உன் பேரென்ன சேமியாவா? வேலை நேரத்துல வெட்டிப் பேச்சு பேசிட்டிருக்கறதுக்காக நாங்க உனக்கு சம்பளம் கொடுக்கிறதில்லை...ஞாபகம் இருக்கட்டும்!'' சீறலாய் வந்தன வார்த்தைகள்!

செளம்யா பதில் கூறுவதற்குள், மாதவன் நாயர் முந்திக் கொண்டார்.

''முதலாளியம்மா புதுசில்லையோ...அதான் விபரம் புரியலை! செளம்யா மேடம் வேலையில் ரொம்பக் கரெக்டாக்கும்... தன் ஜோலி என்றில்லாமல் எல்லோர்க்கும் உதவி செய்யும்! ''தேனி மாதிரி சுறுசுறுன்னு சுத்தி வரும்...இன்னிக்கு பாவம்...தலைவலி என்று மோள் இங்கு வந்தது...அதான் சாய் போடுறேன்...உங்களுக்கு தரவா மேடம்? ''பணிவுடன் கேட்டார்.

''ஊஹூம்...வேண்டாம்! அவங்கவங்க கொடுத்த வேலையைப் பாருங்க..அங்கங்கே நின்னு கதை அடிக்கிறது, நேரத்தை வேஸ்ட் பண்றது இதெல்லாம் எனக்கு பிடிக்காது...இனிமே நானும் டெய்லி ஓட்டலுக்கு வருவேன்...பிஹேவ் யுவர் செல்ஃப்!''

சினத்துடன் கூறியபடி செல்லும் சீமாவையே பார்த்திருந்தவளுக்கு, இனிவரும் நாட்கள் எப்படி இருக்குமோவென்ற கவலை, மெதுவாக மனதை தீண்டியது.

வறண்ட புன்னகையுடன், மாதவனிடம் விடைபெற்றாள் அவள்.

''மோளே.. உனக்கு ஏதும் பிராப்ளம் உண்டெங்கில் அச்சன் ஞான் துணை வரும்!''என்று ஆறுதல் கூறி அவளை அனுப்பி வைத்தார் அவர்.

★★★

பிறகு வந்த நாட்கள், சீமாவின் சுடுசொற்களாலும், விதுரனின் பாராமுகத்தாலும், அவளுக்குப் பெரும் ஆயாசத்தையும் சோர்வையும்



தந்தன.

இடையில் ஒருமுறை, பபியைப் போய் நேரிலேயே பார்த்து வாழ்த்து சொல்லி விட்டு வந்தாள் செளம்யா.

பபிக்கு பதிலாக, புதிதாக ஆஷா என்ற பெண் தேர்வு செய்யப்பட்டு, வேலைக்கு வர ஆரம்பித்திருந்தாள்.

பிரமோத் விடுமுறை என்பதால், அன்று அவளுக்கு வேலைப் பழக்கிவிட்டுக்கொண்டிருந்தவளை, சீமாவின் குரல் அழைத்தது.

''செளம்யா! இவர் என் ஃப்ரெண்ட் சுதீர்...! யுஎஸ்ஸில இருந்து வந்திருக்கார்..நார்த் இண்டியன்! ஆனா அங்கேயே படிச்சவரு... நமக்கு முக்கியமான கெஸ்ட்...! இன்னிக்கு படகு வீட்டில நாங்க சுத்திப் பார்க்க போறதா இருந்தது.. எனக்கு உடம்பு திடீர்னு முடியலை! நீ இவர்கூட வருவேன்னு நான் பிராமிஸ் பண்ணிட்டேன்.. நீ உடனே கிளம்பு''! முதலாளி என்ற தோரணையில் ஆணையிட்டாள்.

'' சாரி மேடம்... எனக்கு இன்னிக்கு நிறைய வேலை இருக்கு.. பிரமோத் வேற லீவு போட்டிருக்கார்.. அதனால வேறு யாரையாவது அனுப்புங்க''

மெதுவாகக் கூறிவிட்டு, வருகை பதிவேட்டில் பெயர்களை வரிசையாக எழுத ஆரம்பித்தாள் செளம்யா.

''ஏய்! நீ இந்த ஹோட்டலுக்கு பாஸா? இல்லை நானா? ரொம்பத் திமிரா பேசறே.. நாங்க சொல்ற வேலைய செய்யறதுக்குதான் உனக்கு சம்பளம் குடுக்கிறோம்.. முதல்லே அத அப்படியே வச்சிட்டுக் கிளம்பு'' அடிக்குரலில் சீறினாள்.

யோசனையுடன் நிமிர்ந்தவள், ''சரி! நான் போறேன் மேடம்... விது..சாரி! சார் வந்தா சொல்லிடுங்க'' என்றவள் ஆஷாவிடம் திரும்பினாள்.

''இவருக்கு ரூம் இங்கே புக் பண்ணியிருக்கா ஆஷா?'' என்றாள் கேள்வியாக.

''ஆமா மேடம்! நைட்டே போட்டாச்சு...இங்கேதான் தங்கியிருக்கார்'' என்றதும் சுதீருடன் கிளம்பினாள்.

'விது!'என்ற அவள் அழைப்பும், ஆஷாவின் 'மேடம்' என்ற மரியாதையும், சீமாவிற்குள் நெருப்பாய் தகித்தன.

இன்றுடன் உன் கதை, விதுரனைப் பொறுத்த வரை முடிந்தது என்ற எண்ணத்தால் விளைந்த வக்ரப் புன்னகையுடன், தன் தந்தைக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த காட்டேஜிற்குச் சென்றாள் சீமா.

அவளுடைய புன்னகையைக் கண்ட செளம்யாவிற்குள், பல அதிர்வுகள்! யோசனையுடன், படகு வீட்டிற்குச் செல்வதற்கு முன் மாதவனிடம் சென்று விபரம் கூறினாள்.

''எனக்கு என்னவோ பயமா இருக்கு அச்சா! ஏதோ நடக்கப் போகுதுன்னு உள்ளுணர்வு சொல்லுது! உங்க ஹெல்ப்பர் வினுவை எனக்குத் துணையா அனுப்ப முடியுமா?'' தர்மசங்கடத்துடன் கேட்டாள்.

''நிச்சயம் மோளே! முதலாளி வந்தால், நான் எல்லாம் பறையும்!'' என்று வினுவைதுணைக்கு அனுப்பினார் அவர்.

படகு வீட்டில் சுற்றிப் பார்க்க ஆரம்பித்ததும், மற்ற கவலைகள்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

மறந்து போக, கேரளாவின் எழிலை ஆவலுடன் பருக ஆரம்பித்தது மனது.

உள் பகுதியிலிருந்த வினுவை அழைத்து தங்களுடனே நிறுத்திக் கொண்ட சௌம்யா, அவன் கொச்சையான மலையாளம் கலந்த தமிழில் கூறியதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சுதிருக்கு விவரித்துகொண்டே வந்தாள்.

ஆனால், அவன் விழிகளில் தெரிந்த ஆர்வத்தையும் மாற்றத்தையும் அவள் கவனிக்கவில்லை.

இருபுறமும் தெரிந்த பசுமையும், நீரின் சில்லென்ற குளிர்ச்சியும் அவளைப் பெரிதும் ஆக்ரமித்திருந்தன.

மதியம் சாப்பாடு நேரத்தில், ஹாட் பேக்கில் எடுத்த வந்திருந்த உணவு வகைகளை வினு பரிமாற, இருவரும் சாப்பிட ஆரம்பித்தனர்.

மீண்டும் மதியம் பயணத்தைத் தொடர்ந்த போது, பெரும் தென்னந்தோப்புக்குகளும், சோலைகளும், அழகிய கேரள வீடுகளும் மனதிற்குள் பெரும் இதயத்தையும் சிலிர்ப்பையும் வரவழைத்தன.

திடீரென்று, ''சௌம்யா! எனக்கு ஒரு டவுட்... சீமா சொன்னதை வச்சுப் பாத்தா... எனக்கு வேற மாதிரி உன்னைப் பத்தி அறிமுகம்! ஆனா உன் கூடப் பழகினப்புறம் நீ அப்படி இல்லையோன்னு தோணுது'' என்றான் சுதீர் யோசனையுடன்.

''ஏன் சார்? அவங்க என்ன சொன்னாங்க...? எனக்கு இந்த ஊரைப்பத்தி எதுவுமே தெரியாதுன்னா? அதுவும் கூட ஒரு வகையிலே உண்மைதான்.. நான் படகு வீட்டில வரது இதுதான் ரெண்டாவது தடவை! அதனாலதான் வினுவைத் துணைக்கு அழைச்சிட்டு வந்தேன்! அதோட உங்க மேல் நாட்டு கல்ச்சர் எனக்குப்பழக்கமும் கிடையாது. அதை சொல்லியிருப்பாங்க!'' முறுஅவலுடன் கூறினாள்.

''நோ... அதில்லை! அதை எப்படி...? ''தலையைக் குலுக்கியபடி சிறிது நேரம் மௌனித்தவன், ''ஓகே! உனக்கு பணமாக் கொடுக்கலாமா? இல்லை... கிஃப்ட் மாதிரி ஏதாவது...உனக்கு ஜுவெல்ஸ் பிடிக்குமா?'' ஆர்வத்துடன் கேட்டான்.

''அதெல்லாம் வேண்டாம் சார்! இது என் ட்யூட்டிதான்! அதுக்கு ஹோட்டல்லே எனக்குத் தர்ற சம்பளமே போதும்..! அழுத்தத்துடன் கூறினாள் அவள்.

''எனக்குப் புரியலை... சீமா சொன்னா.. நீ இது மாதிரி வர்றவங்களுக்கு வேறவிதமாக் கம்பெனி குடுக்கிறதுல ரொம்ப ஸ்மார்ட் அப்படின்னு..! அதுக்காக வர்ற கஸ்டமர்கிட்டே பணமாகவோ, நகையாகவோ வாங்கிப்பேன்னு... ஆனா நீ அப்படி இல்லையேன்னு, இப்ப எனக்கு தோணுது..'' யோசனையுடன் நிறுத்தினான்.

அந்தநொடி, உடல் முழுவதும் திராவகத்தை வீசியது போல் ஒரு தகிப்பு எழ, துடித்துப் போனவளின் விழிகளில், தீச்சுடராய் ஒரு பளபளப்பு!

மனமும் உடலும் பதறிவிட நிமிர்ந்தவளைப் பார்த்த மறுகணமே, அவள் அப்படிப்பட்ட பெண் இல்லை என்ற உறுதி, நூறு சதவீதமாய் அவன் முகத்தில் அறைந்தது.



தர்மசங்கடத்துடன் அவள் கையைப் பற்றியவன், ''சாரி சௌம்யா! ஐயாம் வெரி சாரி! சீமா தப்பா சொல்லியிருக்கான்னு புரியுது...அது என்னுதான் தெரியலை! ஆனா உன்னைப் பார்த்தவுடனே நான் சந்தேகப்பட்டேன்...நீ அப்படிப்பட்ட பொண்ணு இல்லைன்னு! சாரி..! மனமார்ந்த மன்னிப்பைக் கோரினான்.

விழியோரங்களில் கண்ணீர் துளிர்க்க, ஒரு பெண்ணுக்கு பெண் இப்படி அநியாயம் செய்ய முடியுமாவென்ற தவிப்பும் கோபமும், மனதில் மையம் கொண்டன.

மௌனமாகக் கைகளை விடுவித்துக் கொண்டு சென்றவளுக்குள், நீறுபூத்த நெருப்பாய் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது.

இதற்கு, சீமாவிற்கு விதுரனின் மீதுள்ள ஆளுமை உணர்வுதான் காரணமாக இருக்க வேண்டுமென்று தோன்ற, இனி அவனிருக்கின்ற திசைக்குகூட செல்லக்கூடாதென்ற முடிவுக்கு வந்தாள் அவள்.

குற்றவுணர்ச்சியுடன் அமைதியாக அமர்ந்திருந்த சுதீரும், பிறகு அவளருகில் வரவில்லை.

மாலையில், படகுத் துறைக்கு சென்று இறங்கியதுமே, விதுரன் அழைத்ததாக கருணாகரன் கூற, மீற முடியாமல் அவனுடைய காட்டேஜிற்கு சென்றாள்.

அழைப்புமணியை அழுத்திவிட்டு நிமிர்ந்த போது- உடனே வாசல் கதவு திறக்கப்பட, கண்களில் வெறுப்புடனும் சினத்துடனும் அங்கு மிருகமாய் நின்றிருந்தான் விதுரன்.

## 12

''வெல்கம் மிஸ் சவுமியா! ம்... நான் உன்னை எங்கேயோ கொண்டு போய் வைக்கணும்னு முதல்லே ஆசைப்பட்டேன்...ஆனா அது நிராசையாய் போயிடுச்சி... இப்ப நான் கேள்விப்பட்டதுதான் உன் குணத்தோட நிறத்துக்கு ரொம்ப பொருத்தமா இருக்கு!'' ஏளனத்துடன் கூறினான் விதுரன்.

சீமா, தன்னைப் பற்றி அவனிடம் தவறாக ஏதோ கூறியிருப்பதை உணர்ந்து கொண்டாள், சௌம்யா.

''நானும் எல்லோரட ட்ரு கலர்ஸையும் புரிஞ்சிக்கிட்டேன்...''அதே குரலில் கூறியவளின் மனதில் ஒரு எரிமலையின் சீற்றம்!

''ஓ! என்ன கிஃப்ட் குடுத்தான் அந்த சுதிர்...! நிறைய கலெக்ஷன் ஆகியிருக்குமே?'' ஊசிகளாய் வார்த்தைகள் தைத்தன.

''நீங்க...உங்க பிரண்ட் சீமா, ரெண்டு பேரையும் விட, அரை நாள் பழகினதிலேயே அந்த சுதீர் என்னைப் பத்தி நல்லாப் புரிஞ்சிக்கிட்டாரு...''

''ஆமாமாம்! தனிமையில எவ்வளவோ நடந்திருக்கும்.. நல்லாப் புரிஞ்சிட்டிருந்திருப்பான்... அவனை உடனே காலி பண்ணிட்டுக்கிளம்ப சொல்லி ஆர்டர், போட்டிருக்கேன்..''

''அது உங்க இஷ்டம் சார்! இது உங்க ஹோட்டல்...நீங்க என்ன



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

வேணாலும் செய்யலாம்! ஆனா என்னை விலைக்கு வாங்க முடியாதுன்றதை மட்டும், உங்க தோழிக் கிட்ட சொல்லுங்க..!ஒரு பெண்ணுக்குப் பெண்ணே இப்படி ஒரு அநியாயம் செய்வாங்கன்றதை, நான் இப்பத்தான் பார்க்றேன்...சே!'' கோபத்துடன் கூறினாள்.

''ஏய்...ரொம்ப நடிக்காதே! மாட்டிக்கிட்டவுடனே, பழியைத் திருப்பி சீமா மேலப் போடறியா?

அவ உன்னை மாதிரி இல்லை...ரொம்ப நல்லவ!.. மேல் நாட்டில படிச்சிட்டு வந்தவ...''

அவன் தொடரும் முன்பே குறுக்கிட்டவள், ''ஆனா புத்தி ரொம்பக் கீழ்த்தரமா இருக்கே! சுத்திக் காண்பிக்க அழைச்சிட்டுப் போறது ஒரு ஸ்டாஃப்போட வேலைன்னு சொல்லி அனுப்பி வச்சிட்டு, சுதிர்கிட்ட வேற மாதிரி சொல்ற குள்ளநரித்தனம் எனக்குத் தெரியாது சார்.. அந்த அளவுக்கு நான் புத்திசாலி இல்லைதான்..!''சுசப்புடன் கூறினாள்.

''போதும்! நான் உன்னை நம்பத் தயாராயில்லை.''

''பரவாயில்லை... நீங்க நம்பணும்னு நான் எதிர்பார்க்கலை.. உண்மையைச் சொன்னேன் அவ்வளவுதான்! நான் வாரேன் சார்..''

விருட்டென்று திரும்பி நடந்தவளை, சினத்துடன் தொடர்ந்தன விதுரனின் விழிகள்.

அவளை நினைவு படுத்துகின்ற எல்லாவற்றையுமே மறக்கத் துணிந்தாலும், இதயத்துக்குள் வீற்றிருக்கும் அவளை மற்றும் வெளியேற்ற, அவனால் ஏனோ முடியவில்லை.

நேரே கருணாகரனிடம் சென்ற சௌம்யா விபரம் கூறியபோது, அவர் மிகவும் கொதித்துப் போனார்.

தான் இதுபற்றி விதுரனிடம் பேசுவதாகக் கூறியபோது, அவள் தடுத்து விட்டாள்.

★★★

மறுநாள் மதியம், விதுரனுடன் தொற்றிக் கொண்டு வந்த சீமாவை தனியே சந்திக்க முயன்ற சௌம்யாவிற்கு, மாலையில்தான் அந்த சந்தர்பமே கிடைத்தது.

நீச்சல் குளத்தருகே வரும்போது எதிரே சீமாவைக் கண்டதும் அவசரமாக அருகில் சென்றவள், ''ஒரு நிமிஷம் மிஸ் சீமா! நீங்க பிள்ளையார் பிடிக்க நினைச்சீங்க.. ஆனா அது குரங்கா முடிஞ்சிடுச்சி இல்லை?.. பாவம்! எவ்வளவு நல்லவர் அந்த சுதீர்..உங்களுக்குப் போய் எப்படி ஃப்ரெண்ட்... நம்பவே முடியலை..! ஆனா நல்லவங்களுக்கு கடவுள் எப்பவுமே துணையிருப்பாரு..அதை மறந்திடாதீங்க! இந்த மாதிரி சீப்பான ஐடியாவெல்லாம் இனிமே வொர்க் அவுட் ஆகாது..பி கேர்ஃபுல்!'' அடிக்குரலில் சீறினாள்.

தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு இயல்பாய் பேசுவதைப் போன்ற ஒரு முகபாவனையுடன் சீறியவள், வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

முதல் நாள் தன்னுடைய திட்டம் பலிக்காமல் போனதிலிருந்தே பெரும் சீற்றத்துடனிருந்தவள், தன் தோல்வியை ஒத்துக் கொள்ள



முடியாமல் வேகமாக சௌம்யாவைப் பின் தொடர்ந்தாள்.

''ஒரு நிமிஷம்! இனிமே இப்படி நடக்காது! ஆனா, விதுர் எனக்குத்தான்..அவர் என் அத்தை பையன்!.. சின்ன வயசுல இருந்தே அவர்தான் எனக்குன்னு சொல்லியே வளர்க்கப்பட்டவ நான்! யாருக்காகவும் அவரை விட்டுக் கொடுக்க மாட்டேன்! புரிஞ்சுதா?''

''அப்படியா? அப்ப உங்க விருப்பத்தை அவர்கிட்ட சொல்லுங்க! ஏன், என்கிட்ட சொல்றீங்க? அவர் என்னை விரும்பினா, நான் என்ன செய்ய முடியும்? இந்த விஷயத்தில, உங்களுக்கு என்னால கேரண்டி கொடுக்க முடியாது...''

ஏளனக்குரலில் கூறிவிட்டு, உள்ளே செல்லும் அவளையே பார்த்துக் கொண்டிருந்த சீமாவின் விழிகளில், மனதின் வன்மம் கண்ணாடியாய் பிரதிபலித்தது.

நன்றாக திட்டம் தீட்டி அவளை மாட்ட வைத்து, விதுரனிடம் அவளைப் பற்றித் தவறாகக் கூறி, இந்த ஹோட்டலை விட்டே துரத்த வேண்டும் என்ற சூழ்ச்சி, தவிடு பொடியானதைத் தாங்க முடியவில்லை.

அத்துடன் சௌம்யாவின் பேச்சும், விதுரனின் போக்கும், சுதீரின் நட்பை இழந்ததும், இப்படி எல்லாமாகச் சேர்ந்து சீமாவை எரிமலையாகக் குமுற வைத்தன.

அன்றிரவே தன் தந்தையிடம் பேசியவள், வெட்கத்தை விட்டு எல்லாவற்றையும் கூறி அழுதாள்.

அவரோ, தீவிர யோசனையுடன் இதுபற்றி தானே வித்யாதரனிடம் பேசுவதாகக் கூறினார்.

ஆனாலும் சீமாவின் மனதிற்குள் பெரும் கலக்கம் சூழ்ந்துவிட, சௌம்யாவை எதிரியாகவே வரித்தது, நெஞ்சம்!

மறுநாள் காலையில் சௌம்யா அலுவலகத்திற்கு வந்தபோது, விதுரன் காட்டேஜில் இருப்பதாகவும், அவள் வந்தவுடன் அங்கு வந்து பார்த்துச் செல்லும்படி கூறியதாகவும், பிரமோத் கூறினான்.

இன்று என்ன குத்தல் பேச்சுகள் காத்திருக்கிறதோ என்ற கவலை, மெலிதாக அவள் மனதைத் தீண்டியது.

மெதுவாக அங்கு சென்று அழைப்புமணியை அழுத்தியபோது, ''யெஸ்..கமின்'' அவனுடைய கம்பீரமான ஆழ்ந்த குரல் கேட்டது.

அடிவயிற்றில் வண்ணத்துப்பூச்சிகள் சிறகடிக்க உள்ளே சென்றபோது, தன் டேபிளில் அமர்ந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தவன், மெல்ல நிமிர்ந்தான்.

''ப்ளீஸ்... ஸிட்டவுன்! இனிமே தினமும் ஈவினிங்ல அன்னன்னிக்கு ஒவ்வொரு செக்ஷன்லயும் என்னென்ன நடந்தது...சர்வீஸ்ல என்ன குறைகள் இருக்கு... அதை எப்படி சரி செய்யலாம்... நம்ப ஸ்டாஃப்களுக்கு என்ன பிரச்சனைகள், கஸ்டமர் கேர் அப்படின்னு எல்லாத்தையும் டெய்லி ரிப்போர்ட்டா ரெடி பண்ணி என் பார்வைக்கு தரணும். இன்னியிலேருந்து இது உனக்கு அடிஷனல் ட்யூட்டி...அதுக்காக இந்த ஹோட்டல் நிர்வாகம், உனக்கு தனியா அலவன்ஸ் குடுக்கும்... புரிஞ்சிதா?''

யோசனையுடன் ''ஓகே சார்'' என்று பதிலளித்துவிட்டு வெளியே

வந்தவனுக்குள், தான் நினைத்தபடி இங்கு சுதந்திரமாக இருக்கமுடியாதோ என்ற பெரும் ஆயாசம் வந்தது.

அன்று சீமா வராததால், பொழுது இயல்பாகவே சென்றது.

விதுரன் கூறியபடி ஒரு தினசரி ரிப்போர்ட்டை தயார் செய்தபோது, இதுவும் நல்ல திட்டம்தான் என்றும் எண்ணினாள்.

நிர்வாகத்திலோ, ஊழியர்களிடமோ, சாப்பாட்டிலோ, வரவேற்பிலோ குறை இருந்தாலும், அதை உடனுக்குடன் சரிசெய்து கொள்ள இது நிச்சயம் தேவை என்று தோன்றும்போதே, அவன் சாமர்த்தியத்தை மனம் மெச்ச ஆரம்பித்தது.

ஒரு சிறு செல்லத்தட்டு தட்டி, அதை உடனே அடக்கினாள்.

எல்லா விபரங்களையும் எழுதி ஒரு உறையிலிட்டு, அதை விதுரனிடம் சேர்ப்பிக்கும்படி வினுவிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, வீட்டிற்குக் கிளம்பினாள்.

மனம் ஏனோ மாற்றத்தை விரும்ப, வண்டியை பபியின் வீட்டிற்குச் செல்லும் வழியில் திருப்பினாள்.

பபியும், அவள் குடும்பமும் அவளை ஆவலுடன் வரவேற்றனர்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்த பபியிடம், தன் பிரச்சனைகளைக் கூற ஏனோ மனம் வரவில்லை.

பபி அவளிடம், ''சௌம்யா! அடுத்த மாசமே கல்யாண தேதி முடிவு பண்ணிட்டாங்க.. நீங்கதான் எனக்கு தோழிப்பெண்ணா வரணும்... எங்க கல்யாணம் பிரமோத்தோட ஊர்லதான் நடக்கப் போகுது... நம்ம ஹோட்டல்லேருந்து எல்லோரும் வரணும்..'' உற்சாகத்துடன் கூறிக்கொண்டே சென்றாள்.

''நிச்சயம் வருவேன் பபி! எனக்கும் உங்க ஊர் கல்யாணம், அந்த சடங்குகள் இதெல்லாம் பாக்க ரொம்ப ஆசையா இருக்கு.. ஆல் தி பெஸ்ட்..'' என்று வாழ்த்திவிட்டு வீட்டிற்கு வந்தபோது, சியாமளா தலைவலி என்று சுருண்டு படுத்திருந்தார்.

சமீபகாலங்களாகவே அவர் ஏதோவொரு கவலையில் இருப்பது போலவும், அடிக்கடி தலைவலி என்று படுத்துக் கொள்வதையும் பார்த்தால், கவலையாக இருந்தது.

அவரருகே சென்று அமர்ந்தாள்.

''என்னம்மா.. ஏன் இப்பல்லாம் அடிக்டி டல்லாயிடறீங்க? வாங்க பக்கத்துத்தெருவில ஒரு டாக்டர் இருக்காரு... போயிட்டு வந்திடலாம்..'' கரிசனத்துடன் எழுப்பினாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைடா... கம்பெனியில வொர்க்லோடு அதிகம்.. அதான்! அதோட இப்பல்லாம் அடிக்கடி தலைவலி வருது... கொஞ்ச நேரம் படுத்திருந்தா சரியாயிடும்.. நீ போய் டிபன் காபி சாப்பிடு போ!''

''சொன்னா கேளுங்கம்மா... வாங்க!''

எவ்வளவு வற்புறுத்தியும் அவர் மறுக்கவே, முகம் கழுவிவிட்டு வந்து அமர்ந்தபோது மனதிற்குள் சிறு கவலை வந்தது.

டிபன் காபியுடன் வந்த சம்பூரணம், ''சௌம்யா! உனக்கு



ஆபீஸிலேருந்து போன் வந்ததுடா! நீ வரலை... வந்தவுடனே பேசச் சொல்றேன்னு சொன்னேன்'' என்றார்.

''சரி பாட்டிம்மா! எனக்கு காபி மட்டும் போதும்... பபி வீட்டிலே டிபன் சாப்பிட்டேன்'' என்றபடி போனை எடுத்து, ஹோட்டலின் நம்பரை அழுத்தினாள்.

மறுமுனையில் எடுத்த பிரமோத் ''ஹலோ சௌம்யாவா? பாஸ் உன்கிட்ட பேசணும்னாருன்னு ட்ரை பண்ணேன்.. நீ கிடைக்கலை. காலையில வந்தவுடனே முதல்லே அவரை வந்து பாக்க சொன்னாரு'' என்றான்.

''ஓ...நான் பபி வீட்டுக்குப் போயிருந்தேன் பிரமோத்! அதான் லேட்..'

''அப்படியா? அவ எப்படி இருக்கா? போன வீக் எண்ட் பார்த்தது..போன்ல மட்டும்தான் இப்பல்லாம் பேச முடியுது..'' சோகத்துடன் கூறினான்.

''அப்படிங்களா? உங்க ஆளு பசலை படர்ந்து கை வளையல்லாம் கழன்று விழ அங்கு புலம்பிட்டிருக்கா.. அகநானூற்றிலே வர்ர சங்க காலத்தலைவி மாதிரி!

''உடலும் உயிரும் இணைந்திருப்பது போன்றது எங்கள் காதல்.. இதில் வாழ்தல் என்பது அவரோடு இணைந்திருக்கும் தருணமே.. சாதல் என்பது அவரைப் பிரிந்திருக்கும் துன்பத்தருணமேன்னு தன் அன்பைத் தோழிகிட்ட ஏக்கத்தோட சொன்ன ஒரு தலைவிமாதிரி இருக்கா?'' குறும்புடன் கூறினாள்.

''சரி! நான் உடனே அவகிட்ட பேசறேன்'' உணர்ச்சிப்பெருக்குடன் கூறி விட்டு அவன் வைத்தான்.

## 13

மறுநாள் காலையில் சீக்கிரமே விழிப்பு வந்துவிட, காலை சூரியனின் முதல் கிரணங்கள் சௌம்யாவை மென்மையாய் வருடி எழுப்பின.

உற்சாகத்துடன் எழுந்து தோட்டத்திற்குச் சென்றபோது, விடியலின் குளிர்ச்சியும், துயில் கலைக்கும் பட்சிகளின் கீச் கீச் என்ற குரலும், மனதிற்கு பெரும் இதம் தந்தன!

இயற்கையின் மாயக்கரம், இதய பரப்பை மயிலிறகாய் வருடியது. சிறிது காலமாகவே மனதிற்குள் வியாபித்திருந்த இருள் முழுவதுமாக விலகி, வெளிச்சக் கீற்றொன்று மெதுவாக எட்டிப் பார்த்தது.

அதே உற்சாகத் ததும்பலுடன் ஹோட்டலுக்குச் சென்றபோது, லாபியில் நின்றிருந்த விதுரனின் உணர்ச்சியில்லாத பார்வை அவளைக் கூர்மையாக ஊடுருவி, குளிர்கின்ற தீப்பொறியாய் உள்ளிறங்கியது.

''குட் மார்னிங் சார்!'' மெல்லிய குரலில் கூறினாள்.

''வெரி வெரி பேட் மார்னிங்... என் கூடக் கொஞ்சம் வாங்க'' என்றபடி அவன் அலுவலக அறைக்குள் செல்ல, சட்டென்று வறண்டு போய் அத்தனை சந்தோஷங்களையும் தொலைத்தது, மனது.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

கருணாகரனின் அறைக்குள் சென்றவுடன், சீற்றத்துடன் திரும்பினான் விதுரன்.

அந்த அறையின் மேஜை மேலிருந்த ஒரு உறையைக் காண்பித்து, "இதுக்கு என்ன அர்த்தம்...?" என்றான் ஆழமான குரலில்.

"இது.. நீங்க கேட்ட டெய்லி ரிப்போர்ட்!"

"அது தெரியுது... ஆனா, இதை நீ நேரில கொண்டு வந்து என்கிட்ட கொடுத்திருக்கணும்... நான் பாத்து முடிச்சதும், மறுநாள் என்னென்ன மாற்றங்கள் செய்யலாம்னு சொல்லுவேன்... இதுக்கு எதுக்கு ஒரு குரியர் சர்வீஸ்...ம்?"

அதிகாரத்துடன் கேட்டுவிட்டு, விழிகள் இடுங்க அவளுடைய பதிலுக்காகக் காத்திருந்தான் அவன்.

"சாரி! நான் வினுகிட்ட அனுப்பினாப் போதும்னு நினைச்சேன்."

மென் குரலில் அவள் கூறவும், அவன் முகம் வார்ப்பிரும்பின் கடினத்துடன் இறுகியது.

"ஓஹோ!... மேடம் என்னை நேரில பாக்கற சந்தர்ப்பை ரொம்ப அழகா தவிர்க்கிறீங்களோ?" ஏளனத்துடன் கேட்டான்.

"அப்படி இல்லை..."

உடனே அவளை இடைமறித்தவன், "லுக் சௌம்யா! இனிமே நீ தினமும் வந்தவுடனே என்னைப் பாத்தப்புறம்தான், உன் வேலையத் தொடங்கணும். அதே மாதிரி, ஈவினிங் என்கிட்ட நேரில வந்து ரிப்போர்ட் பண்ணிட்டுத்தான் போகணும்... புரிஞ்சுதா? ஒரே விஷயத்தைப் பல தடவை சொல்றது எனக்குப் பிடிக்காது... யூ மே கோ நௌ.." என்றவன் விருட்டென்று வெளியேறினான்.

தொப்பென்று அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தவளுக்குள், விடியலிலிருந்து முகிழ்த்திருந்த இனிமை எங்கோ தொலைந்து போனது.

ஆனால், நிம்மதி தரும் விதமாக அன்றிலிருந்து சீமா ஹோட்டலுக்கு வருவதும் நின்று போனது.

அன்றிலிருந்து ஒவ்வொரு செக்ஷனிலும் உள்ள நிறை குறைகளை அலசி ஆராய்ந்து பட்டியலிட்டு, எதை எதை எப்படி மாற்றினால் நன்றாக இருக்கும் என்ற தன் கணிப்பையும் அதன் கீழ் எழுதி ரிப்போர்ட் தயாரிப்பது, சுலபமாகவும் மனதிற்குப் பிடித்த வேலையாகவுமே இருந்தது.

ஆனால், அதற்காக தினமும் இருமுறை அவனைத் தனியே சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பங்கள் மட்டுமே, தவிப்பை விதைத்தன.

சில நாட்கள், அவளை யாரென்றே தெரியாதவனைப் போல் பார்வையில் உணர்ச்சிகளின்றி அவளை உதாசீனப் படுத்தினான் விதுரன்.

சில நாட்கள், வெறுப்பும் சினமுமாய் அவளிடம் குற்றம் காண்பது போலப் பேசி, அவளை வதைக்க ஆரம்பித்தான்.

ஒரு நாள், சௌம்யா அதுபோல் அவனிடம் ரிப்போர்ட்டை அளித்துவிட்டுக் கிளம்பினாள்.

"ஒரு நிமிஷம்..." ஆழ்ந்த குரலில் அவளை நிறுத்தினான்.

"குட்! உன் ரிப்போர்ட் படி நீ சுட்டிக் காட்டியிருந்த சில குறைகளை சரி செஞ்சிருந்ததினாலே நிர்வாகத்துல நல்ல முன்னேற்றம் இருக்கு...





Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அதோட, கருணா அங்கிளும் உன் திறமைய ரொம்பப் பாராட்டி அப்பாகிட்டப் பேசியிருக்காரு... கருணா அங்கிள் மூணு மாசத்துல வேலையவிட்டு விலகிடறேன்னு நோட்டீஸ் குடுத்திருக்காரு... விஆர்எஸ் குடுத்துட்டு சொந்த ஊருக்கே போகப் போறாராம்... அதனால உன்னை அந்த போஸ்டுக்கு ப்ரமோட் பண்ணலாம்னு அவரே ரெகமண்ட் பண்ணியிருக்காரு.. மத்த விஷயத்துல எப்படியோ, வேலை விஷயத்துல உன் திறமையையும் ஈடுபாட்டையும் அப்பாவே பாராட்டினாங்க.. கங்கிராட்ஸ்...!''

அவன் கூறியபோது, குரலில் பொருள் விளங்காத ஒரு செய்தியுடன், முகமும் உணர்ச்சிகளின்றி இறுகியே இருந்தது.

''தேங்க் யூ சார்...'' என்றபடி எழுந்தவள், எதையோ சொல்ல விரும்பித் திரும்பினாள். அந்த நிமிடம், அவளையே பார்த்தபடி கண்களால் மட்டுமே முறுவலித்துக் கொண்டிருந்தவன், அவள் பார்வையைக் கண்டதும் சட்டென்று திரும்பிக் கொண்டான்.

அவள் புன்னகையை ஒளித்துத் திரும்பினாலும், ரகசியமாய் விரிகின்ற இதழ்களையும், குறுகுறுப்பாய் சுருங்கும் விழிகளையும், பக்கவாட்டில் அவள் கவனித்து விட்டாள்.

அவனுக்கும், தன்னை ப்ரமோட் செய்ததில் மகிழ்ச்சிதான் என்பதை அறிந்தபோது, மனதில் சில்லென்று ஒரு குளிர்ச்சி பரவியது.

அன்று முழுதும் மனம் கனவுலகில் சஞ்சரிக்க, தன்னை நம்பிக் கொடுக்கப்பட்ட வேலையை திருப்தியுடன் செய்ய வேண்டும் என்ற உறுதி வந்தது.

கருணாகரன் அன்று விடுமுறை என்பதால், உடனே அவருடைய வீட்டிற்கு போன் செய்து அவரிடம் நன்றி தெரிவித்தான்.

★★★

வாழ்க்கை சலசலக்கும் சிற்றோடையாய் விரைந்து செல்ல, பமிக்கும் பிரமோத்துக்கும் திருமணம் நெருங்கி வந்தது.

இருவரும் வீட்டிற்கே வந்து பத்திரிக்கை வைத்துச் சென்றனர்.

ஹோட்டலில் வேலை செய்பவர்களில் சிலர், திருமணத்திற்குச் சென்று வர முடிவெடுத்தனர்.

கருணாகரன் வர இயலாதென்று கூறிவிட்டதால், சௌம்யா பொறுப்பை அவரிடம் ஒப்படைத்து விட்டுக் கிளம்பி விட்டாள்.

கண்ணூரில் திருமணமென்பதால், திருமணத்திற்கு முதல்நாள் காலையில் சென்று சேரும்படி ஹோட்டலிலிருந்து செல்பவர்களெல்லாம் சேர்ந்து, ரயிலில் முன்பதிவு செய்திருந்தனர்.

சியாமளாவிற்குத்தான், அவளைத் தனியே அனுப்பவே மனமில்லை.

மாதவன் நாயர், வீட்டிற்கே வந்து தான் சௌம்யாவைப் பார்த்துக் கொள்வதாக வாக்களித்ததால், அவளை அனுப்பி வைத்தார்.

ரயிலில் இரவு கொண்டாட்டமும் கும்மாளமுமாகப் பொழுது செல்ல, வெகு நேரம் கழித்த உறங்க ஆரம்பித்த செம்யா, விடியற்காலையிலேயே விழித்து விட்டாள்.

இளங்காலை நேரத்து இனிய எழுச்சியாய் நேச உணர்வுகள் சாரலாக,



மெல்லிய தூவானமாய் அதில் விதுரனின் நினைவுகள்!

சுற்றிலும் பரவித் தெரிந்த காபித் தோட்டங்களும், மிளகுத் தோட்டங்களும் பச்சைப் பட்டுடுத்திய வன தேவதையாய் ஒளிர, அந்த இயற்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது மனது.

அங்கு பிரமோத் அவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த வீட்டில் தங்கியவர்கள், மாலையில்தான் விழா என்பதால் அந்த ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டனர்.

அனைவரும் கிளம்பும் நேரத்தில், வாசலில் கார் ஒன்று வந்து நிற்க, அதிலிருந்து சீமாவும் விதுரனும் இறங்கினர்.

அழகிய மைசூர் கிரேப் புடவையணிந்து தேவதையாக வெளியில் நின்றிருந்த சௌம்யாவைக் கண்ட விதுரனின் விழிகள், ஒரு கணம் விரிந்து ரசனையுடன் பளபளத்தன.

மறுகணமே, அந்த உணர்வுகள் பொய்யோ எனும்படி கண்ணோரங்கள் சுருங்கி, முகம் இறுகிவிடத் திரும்பிக் கொண்டான் அவன்.

அந்த ஒற்றைப் பார்வை மயிலிறகாய் வருடினாலும், அவனிடமிருந்து மீட்சி வேண்டி ஈனக் குரல் எழுப்பியது, இதயம்!

அவனிடம் தன்னைத் தொலைத்திருப்பதை, எவ்வளவுதான் மாற்றிக் கொள்ள எண்ணினாலும், ஒத்தழைக்கவும் மறுத்தது.

எல்லோரும் அவர்களை மரியாதையுடனும் உற்சாகத்துடனும் வரவேற்க, அவள் மட்டும் ஒதுக்கத்துடன் வேறுபுறம் விலகி நின்றாள்.

ஊர் சுற்றிப் பார்ப்பதற்கு அவர்களும் வருவதாகக் கூற, அனைவரும் ஒரு வேனில் புறப்பட்டுச் சென்றனர்.

முதலில் அருகிலிருந்த பரிசினிக் கடவு என்ற ஊருக்குச் சென்று, அங்கிருந்து முத்தப்பன் கோவிலுக்குச் சென்றனர்.

அமைதியான அந்த சூழலும், அருகில் ஓடிக் கொண்டிருந்த வாடிப்பட்டினம் ஆறும், மனதை பெரும் இதமாக்கின.

நாய்களின் காவல் தெய்வம் என்று அழைக்கப்படும் அந்தக் கோவிலில் சுற்றி வந்து சாமி கும்பிட்டுவிட்டு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர்.



மன்னா! மகாராணியாருக்கு இடுப்பு வலி வந்து விட்டதாம். அரண்மனை வைத்தியரை அந்தப் புரத்துக்கு அனுப்பவா?

வைத்தியரை அந்தப்புரம் அனுப்பு.. அழகான சேடிப் பெண்ணை இந்தப்புறம் அனுப்பு!

-சி.ரகுபதி, போளூர்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''இன்னிக்கு கோவில்லே ஏதும் திருவிழாவா?'' என்று கேட்டாள் சௌம்யா.

''இன்னிக்கு 'தெய்யம்' நடனம் நடக்கப் போவுது அதுதான் ''என்றார் அவர்களுடன் வந்திருந்த ப்ரமோத்தின் உறவினர்.

அக்டோபர் மாதத்திலிருந்து ஜுன்வரை இது போன்ற நடனங்கள் நடைபெறும் என்று அவர் கூறியபோது அனைவரும் ஆர்வத்துடன் கோவிலின் முன்புறம் சென்றனர்.

பிறகு நடனம் ஆரம்பித்ததும் அனைவரின் கவனமும் அதில் கட்டுண்டு போக, தொன்மையான அந்த நடனம் மனதிற்கும் செவிக்கும் இனிய விருந்தளிப்பதாய்!

ரசனையுடன் அதில் ஈடுபட்டிருந்த சிறிது நேரத்திற்குப் பிறகு நடனம் முடிந்ததும் அவளறியாமல் விழிகள் விதுரனிருந்த திசையில் பயணித்தன.

அந்த நிமிடம், அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நடனங்களின் தாள ஓசையில் இதயம் சிறைப்பட்டிருக்க, அந்த நாதத்தின் சுக ராகமாய் கலந்தன, நான்கு விழிகள்.

என்றிலிருந்து எனக்கு நீ அனைத்துமாக ஆனாய் என்ற விந்தை புரியாது ஒரு கணம் தவித்தது, விதுரனின் மனது. அவளை நினைத்து நினைத்து, நெஞ்சம் உருகியது... மறுகியது! உடனே, அவளுக்கும் தனக்குமிடையே உள்ள உறவு... சினச் சுவராய்...!

மறுநிமிடம், அந்தப் பார்வை இனம் புரியா சீற்றமாக மாற, விழி பேசும் மொழிகள் வாட் போர்களமாய் உருவெடுத்தன.

சட்டென்று பார்வையைத் தழைத்தவளுக்குள், விதுரன் ஏன் இப்படி நொடிக்கு நொடி நிறம் மாறுகிறான் என்ற பரிதவிப்பு!

ஒரு நிமிடம் தவித்துப் போய் வெறித்த விதுரனுக்குள், சம்மட்டி அடியாய் அவள் பூர்விகமும், உறவுமுறையும் நினைவிற்கு வந்தன.

ஒவ்வொரு செல்களிலும் வெறுப்பும் ரவுத்ரமும் பரவி அவனது உடல் விரைத்துப் போய் பாறையாய் இறுகியது.

பிறகு வந்த மணித் துளிகள் பெரும் நரகமாய் மாறிவிட, தனக்குள்ளேயே சுருங்கிக் கொண்டாள் சௌம்யா.

ஒரு ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து கிளம்பியவர்கள், பக்கத்து ஊரிலிருக்கும் குகைக்கு வேனில் பயணித்தனர்.

சரித்திர காலத்துக்கு முந்தைய அந்தக் குகை ஓவியங்களைக் காணவே ஒரு மணி நேரத்துக்கும் மேல் ஆகியது.

மிகவும் அழகிய ஓவியங்கள் கண்களையும் கருத்தையும் கவர, விதுரனின் தோளிலேயே தொற்றிக் கொண்டு சென்ற சீமாவின் புறம், அவன் திரும்பவேயில்லை.

எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு ப்ரமோத்தின் வீட்டிற்கு வந்தவுடன், உடனே மாலையில் நடக்கும் சடங்குளில் பங்கு கொள்ள அனைவரும் தயாராக ஆரம்பித்தனர்.

அழகிய பிங்க் நிறப் பட்டுப் புடவையணிந்து சிறு நகைகளுடன், கூந்தலை அழகாக விரித்து விட்டபடி வன ரோஜாவாகக் காட்சியளித்த சௌம்யாவை, சீமா எரிச்சலுடன் உறுத்து விழிக்க, விதுரனின்



மனதிற்குள்ளோ பெரும் போராட்டம்!

அவள்புறம் திரும்பாமல் தன்னை அடக்கிக் கொள்ள, அவன் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

தான் உயிராய் விரும்பியவளை பார்வையால் கூடத் தீண்ட முடியாதபடி, தந்தையின் சொற்கள் அவனைக் கட்டுப்படுத்தின.

சடங்குகள் முடிந்து அவர்கள் அனைவரும் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தபோது பூஞ்சாரலாய் மழை பெய்ய ஆரம்பித்தது.

அந்த மழை இரவின் குளிர் உடலெங்கும் விரவிப் பரவ, தன் தேகம் தீண்டும் அவன் பார்வைச் சூட்டிற்காக, சௌம்யா தவமிருக்க ஆரம்பித்தாள்.

மறுநாள் காலையில் கேரளப் புடவையணிந்து அழகுற மிளிர்ந்த சௌம்யாவை பபி தனியே செல்ல விடவே இல்லை.

தன்னருகிலேயே இருத்திக் கொண்டாள்.

அவளும் மேடையிலேயே பபிக்குத் துணையிருக்க, ப்ரமோத் பபியின் வெட்கப் பார்வைகளும், செல்லச் சீண்டல்களும் இனிய சிணுங்கல்களுமாய், திருமணமும் இனிதாக நடந்து முடிந்தது.

## 14

மதியம் வரை சடங்குகள் தொடர, சாப்பிட்டு ஓய்வெடுத்த பிறகு அனைவரும் கடற்கரைக்குச் சென்றனர்.

அழகாக நீல நிறத்தில் விரிந்து பளபளத்த கடலும், அதன் ஆர்ப்பரித்த வரவேற்கும் அலைகளும் சுகமான அழைப்பு விடுத்தன.

சுரிதாரை மடித்து விட்டபடி, வெகு நேரம் நீரில் சுகமாய் கால்கள் அலைய நின்றிருந்தாள் சௌம்யா.

ஊருக்கு வந்ததிலிருந்து, மாதவன் நாயர் அவளுக்குத் துணையாய் அவள் அருகியேயே இருந்தார்.

''என்ன மோளே! ஏதும் பிரச்னையுண்டோ? ஏன் முகம் வாட்டமாயிருக்கு?'' அக்கறையுடன் கேட்டார்.

''ஒண்ணுமில்லை அச்சா... ரெண்டு நாளா ஒரே அலைச்சலா அதான்...'' என்றவள் மெல்லத் திரும்பினாள்.

அங்கு விதுரன் எங்கோ தொலை தூர வானத்தைப் பார்த்தபடி, பெரும் யோசனையுடன் நெற்றிப் புருவங்கள் நெரிய நின்றிருந்தான்.

கடலலைகளின் வேகம் கூட அசைக்கமுடியாதபடி, ஒரு இரும்புத் தூணின் உறுதியுடன், நெடிய உருவமாய் நின்றிருந்தவனை விட்டு விலக முடியாமல் தவித்தன, சௌம்யாவின் விழிகள்!

அன்றிரவு எல்லோரும் ரயிலில் கிளம்ப, விதுரன் தொழில் முறையில் ஏதோ வேலையாக அங்கேயே தங்கிவிட்டான்.

சௌம்யாவிற்குத் தான், தனக்குள்ளிருந்த ஏதோ ஒன்றை அங்கேயே விட்டுச் செல்வதுபோல் தோன்றியது.

அந்த வாரம் முழுவதும், அவன் வரவேயில்லை.

தனக்கும் அவனுக்குமிடையே மெலிதாக நெய்யப்பட்டிருந்த நேசத்



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

திரை ஒன்று விலகி, வெறுப்பும் கோபமும் நிறைந்த இரும்புத் திரையாய் மாறியது. எதனால் என்ற கேள்வி மனதை செல்லரித்துக் கொண்டே இருந்தது.

★ ★ ★

மறு வாரத்தில் ஒரு நாள், ரிசப்ஷனில் ஆஷாவிற்கு உதவி செய்து கொண்டிருந்தாள் அவள்.

திடீரென்று, அவனுடைய அழுத்தமான காலடியோசை கேட்டு உடனே திரும்பினாள் செளம்யா. அவனுடைய காலடிச் சுவடுகள் கூடத் தனக்குள் கனமாகப் பதிந்திருப்பது புரிவதாய்!

வெகு நாட்களுக்குப் பிறகு அவனை சந்தித்தது போல ஒரு பரவசம் முகத்தில் படர்ந்தது.

இதழ் விரித்த புன்னகையுடன் ''குட் மார்னிங் சார்'' என்று வாழ்த்தியவள்,

அவனுடைய சில்லென்ற உணர்ச்சியற்ற விழிகளைக் கண்டதும், உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

பதிலுக்கு வாழ்த்தாமலே அவளைக் கடந்து சென்றவன், உடனே அவளை இன்டர்காமில் அழைத்தான்.

அவள் உள்ளே நுழைந்ததுமே. ''போன வாரம் முழுக்க மாதவன் நாயர் லீவு! இந்த வாரமும் அவருக்கு லீவு சாங்ஷன் பண்ணியிருக்கே! அங்கே ஊரிலேயே கவனிச்சேன்... மோளே மோளே'ன்னவுடனே அப்படியே உருகிப் போய் லீவு கொடுக்க இது ஒண்ணும் உன்னோட ஹோட்டல் இல்லை... ஒரு ஹெட் குக் இல்லேன்னா இங்கே எவ்வளவு கஷ்டம்னு உனக்குத் தெரியாது...?'' கடித்த பற்களுக்கிடையே சீறினான்.

''சார்! நான் அனாவசியமா லீவு கொடுக்கலை! அவருக்கு சிக்கன் பாக்ஸ்! இங்கே வெளிநாட்டுப் பயணிகள் வந்து போற இடம்.. அந்த வைரஸ் பரவ ஆரம்பிச்சா அப்புறம் நமக்குத்தான் கஷ்டம்... அதான் ஊருக்கு அனுப்பி வச்சேன் சார்''பொறுமையாகவே பதிலளித்தாள்.

''ஓ... அப்படியா?''

அவன் குரல் இறங்கியிருக்க, உடனே ஒரு கோபம் அவளிடம் தொற்றிக் கொண்டது.

''வந்ததுமே உங்களுக்கு என்னை குற்றம் சொல்லணும்னா, வேற ஏதாவது சின்ன சின்னக் காரணங்கள் இருக்கும் சார்... அதைத் தேடிப் பாத்து வைங்க... இப்ப எனக்கு வேலையிருக்கு... நான் கிளம்பறேன்!''

சுள்ளென்று கூறிவிட்டு அவள் திரும்ப, வேகமாக அவளுடைய கையைப் பிடித்து சுழற்றி நிறுத்தினான் அவன்.

''ஏய்... என்கிட்ட உன் திமிரைக் காட்டாதே! அதெல்லாம் வேற யார் கிட்டயாவது வச்சுக்க... என்ன பண்றது? அது வழிவழியா வர்றது... தப்பு பண்ணிட்டாலும் ஒத்துக்காம பெரிசா நல்லவளாட்டம் நடந்துக்கறது, இதெல்லாம்தான் உங்களுக்கு கை வந்த கலையாச்சே...?'' அவளுடைய கை இற்றும்விடும் போல் நெறித்தது.

''நீங்க யாரைப் பத்திப் பேசறீங்க? எல்லாப் பெண்களையும் ஒரே மாதிரி எடை போடாதீங்க..'' அவளும் விடவில்லை.



''என்னைப் பொறுத்த வரைக்கும் எல்லாப் பெண்களுமே ஒரே மாதிரிதான்! அதனாலதான் ஒரு பொண்ணை நம்பி என் எதிர்காலத்தை ஒப்படைக்கிற முட்டாள்தனத்தை நான் இதுவரைக்கும் செய்யலை.. செய்ய நினைக்கிறதுக்குள்ளேயே ஒரு பெரிய அடி விழுந்தாச்சு... அது தப்புடா மடையான்னு! அதனால ஒரு எச்சரிக்கையும் வந்துடுச்சி ''நக்கலாகக் கூறினான்.

பெண்களைப் பற்றிய அவனுடைய தவறான கருத்தை மாற்ற வேண்டுமென்ற வேகம், உடனே மனதில் எழுந்தது.

தன்னை அவன் மனதிலிருந்து விலக்கிவிட்ட காரணத்தையும் அறிந்து கொள்வதற்காக உடனே கேட்டுவிட்டாள்.

''பெண்களைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? பொண்ணுங்கறவ ஒரு பொக்கிஷம் மாதிரி! மண்ணாசை, நாவாசை, தன் ஆசை, மூணையும் துறந்த ரிஷி அவ! தான் வளர்த்த மண்ணைத் துறந்து வேற குடும்பத்துக்குப் போய் அந்த உறவுகளை மனசளவுல தன் உறவுகளா ஏத்துக் கொள்வதாகட்டும்.. தன் வயிற்றில் இருக்கிற குழந்தைக்காக தனக்குப் பிடிச்சதெல்லாம் விட்டு ருசிகளைத் துறந்து அந்த நிமிடம் பிறருக்காக வாழ்ந்து தியாகம் செய்யறதாகட்டும்... தன் சுக துக்கத்தை விட தன் கணவனோட சுகத்தை முதலா நினைச்சி பேணிக் காக்கறதிலயாகட்டும்... அவ்வளவு ஏன்... இந்த மண்ணில ஒரு உயிரை உருவாக்கிறவ பெண்!

அவ்வளவு அற்புத குணங்கள் நிறைஞ்ச பெண்களைப் பத்தி என்ன சார் தெரியும் உங்களுக்கு?'' ஆவேசத்துடன் கேட்டாள்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது.. ஆனா உன்னையும் உன் அம்மாவையும் பத்தி நல்லாத் தெரியும்... நம்ப வச்சி கழுத்தறுக்கற மோசக்காரிங்கன்னு தெரியும்.'' காழ்ப்பும் கசப்புமாய் கூறினான்.

''நான்... எங்கம்மாவைப் பத்திப் பேச நீங்க யாரு? சே... அவங்க எவ்வளவு நல்லவங்க தெரியுமா...? அவங்களைப் பத்தி இனி ஒரு வார்த்தை பேசினீங்க...''

அவள் முடிப்பதற்குள் குறுக்கிட்டவன், ''நல்லவங்க...ஹா''ம்! அந்த



அந்த டாக்டர் எப்படி ஒவ்வொரு ஆபரேஷன் கேஸையும் வெற்றி கரமா முடிக்கிறாரு?

அந்த டாக்டருக்கு ஜோசியம் பார்க்கத்தெரியும்... ஆயுள் ரேகை கெட்டியா இருந்தாத்தான் ஆபரேஷனே பண்ணுவார்!

-சி.ரகுபதி, போளூர்

வார்த்தைக்கு உண்மையான அர்த்தம் தெரியுமா உனக்கு? நடத்தை சரியில்லாத ஒருத்தரை.. புருஷனுக்கு துரோகம் செஞ்ச ஒருத்தரைத்தான், உங்க அகராதியில நல்லவங்கன்னு சொல்வீங்களா? உங்கம்மாகிட்டப் போய் கேளு... உன் அப்பா யாருன்னு?''... வார்த்தைகளைக் கொட்டிவிட்டான்.

''விதூ...''

ஆத்திரத்துடன் கத்தியவள் ''சே... நீங்களெல்லாம் ஒரு மனுஷன்...'' பரிதவிப்புடன் உடனே அங்கிருந்து வெளியேறி வேகமாக வீட்டிற்குச் சென்றாள்.

ஆனால், மனம் உலைக் களமாய் கொதித்துக் கொண்டிருந்தது.

★★★

மதியத்திற்கு சமைத்துக் கொண்டிருந்த சம்பூர்ணம், அவளை அப்போது எதிர்பார்க்கவில்லை.

''சௌமி... என்னடா? உடம்பு சரியில்லையா?'' பரிவுடன் நெற்றியில் கை வைத்தவரை வெறித்தாள்.

''எனக்குத் தெரியாத ரகசியம் ஏதாவது அம்மாகிட்ட இருக்கா பாட்டிம்மா...?

எனக்கு நம்ப முடியலை... உடனே அம்மாவுக்கு போன் போட்டு வரச் சொல்லுங்க..'' என்று கூறிவிட்டுத் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

மனக் குமுறல் அழுகையாய் வெளிப்பட, அழுது கொண்டிருந்தவளை சம்பூர்ணம் சமாதானம் செய்யும்போதே, சியாமளா வந்துவிட்டார்.

அவள் அருகில் வந்து அமர்ந்தவர், ''சௌமீ! என்னாச்சுடா? ஏன் அழுதிட்டிருக்கே..'' பிசிர் தட்டும் குரலில் கேட்டார்.

''அம்மா!'' அவர் மடியில் சாய்ந்து விசித்தவளின் கேவல்கள் அடங்க, வெகு நேரமானது. பிறகு மெதுவாக நிமிர்ந்தவள், ''இன்னிக்கு விதுரன் என்கிட்ட ரொம்ப கேவலமாப் பேசிட்டாரும்மா... எங்கப்பா யாருன்னு கேளுங்கிறாரு... உங்களைப் பத்தி தப்பு தப்பா... என்னால தாங்க முடியலை... நீங்க வந்த சொல்லுங்க... யாரோ அவர்கிட்ட நம்ப குடும்பத்தைப் பத்தி தப்பா சொல்லியிருக்காங்க போலிருக்கு...''

அழுகையின் நடுவே கூறினாள்.

''சௌமி! யாரோ சொல்லியிருக்க மாட்டாங்க... விதுரனோட அப்பாதான் சொல்லியிருப்பாரு. நானே இத்தனை நாளா மனசுக்குள்ளேயே போட்டு புழுங்கிட்டிருந்த விஷயம்... அது உனக்கு தெரியக் கூடாதுன்னு நினைச்சேன்.. ஆனா இப்ப சொல்ல வேண்டிய நேரம் வந்துடுச்சு'' ஒரு பெரு மூச்சுடன் நிறுத்தினாள்.

அதிர்ச்சியுடன் நிமிர்ந்த சௌம்யாவின் விழிகளில், அவர் தன் இருண்ட வாழ்க்கையைப் பற்றிக் கூறக் கூற, பலவித உணர்வுகள் பிரதிபலித்தன.

★★★



தன் காதல் வாழ்க்கை... விதுரன் பிறந்த சந்தோஷ காலம்... மனோகரின் தூய நட்பு... ராஜவேலுவின் வஞ்சகம்... வித்யாதரனின் சந்தேகம்... அதனால் நேர்ந்த இழப்பு... பிறகு குழந்தையைத் தூக்கிக் கொண்ட அவர் தலைமறைவானது வரை எல்லாவற்றையும் அவர் கூறி முடித்தபோது, அவருடைய விழிகள் நிறைந்திருந்தன.

எதை வேண்டுமானாலும் ஒரு பெண் சகித்துக் கொள்வாள்... ஆனால் நடத்தை கெட்டவள் என்ற பழியையும், வாழா வெட்டியாய் சமூகத்தில் தனித்து விடப்படுகின்ற அவலத்தையும் மட்டும் மறக்கவே முடியாது..

அது ரணமாய் படிந்து வடுவாய் மாறிவிட்ட குமுறல், அவர் வார்த்தைகளில் தெறித்தன. எல்லாவற்றையும் கேட்டு முடித்த சௌமிக்குள் பெரும் போராட்டமும், வேதனையும் குடி புகுந்திருந்தாலும் அந்த நிமிடம் தான் யார் என்ற கேள்வி பூதாகாரமாய் கண்முன் எழுந்தது.

''அம்மா... நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்ல? எனக்கு நம்பவே முடியலை... ரொம்பக் கஷ்டமா இருக்கு... நமக்கு மட்டும் ஏன் இப்படி? அழாதீங்கம்மா...

உங்களுக்கு எப்பவுமே துணையா நான் இருப்பேன்... உங்களை விட்டுட்டுப் போக மாட்டேன்!''

மெலிதாய் நடுங்கும் தாயின் கரங்களை, ஆறுதலாய் பிடித்தபடி கூறினாள்.

பிறகு அவருடைய விழிநீரைத் துடைத்தவள், ''நான்... யாரும்மா? அதை மட்டும் நீங்க இன்னும் சொல்லவேயில்லை! விதுரன் சொன்ன மாதிரி நான் தப்பா நினைக்கலை... என்னை அநாதை ஆசிரமத்துல இருந்து எடுத்து வளர்த்தீங்களான்னுதான் கேக்கறேன்'' தவிப்புடன் கேட்டாள்.

''நீ அநாதை இல்லைடா... என் பொண்ணுதான்... என்னோட வா'' என்றவர் அவளை பூஜையறைக்கு அழைத்துச் சென்றார்.

வெங்கடேசனின் படத்திற்கு முன்பு அவளை நிறுத்தினார்.

''இவர்தான் உன் அப்பா... அது உண்மை!'' எனும்போதே சௌமியின் இதயம் வெடித்துவிடும்போல் துடிக்க ஆரம்பித்தது.

விழிகளில் கேள்விக் குறியுடன் நிமிர்ந்தவளை, இன்னொரு புகைப்படத்திடம் அழைத்துச் சென்றார்.

''நான் உன்னைப் பொண்ணா என் வயித்துல சுமக்கற அதிர்ஷ்டத்தைப் பெறலைடா... இவங்க என் அண்ணி சியாமளா... இவங்க தான் உன்னைப் பெத்த அம்மா.. உன் அப்பா என் கூடப் பிறந்த அண்ணன்.. ரெண்டு பேருமே நீ ஆறுமாசக் குழந்தையா இருக்கிறப்ப ஒரு விமான விபத்துல இறந்துட்டாங்க...

''எங்க அண்ணியோட பேரும் சியாமளாங்கிறதால ஸ்கூல் சர்டிபிகேட்ஸ்ல அம்மா, அப்பா பேரு சியாமளா, வெங்கடேசன்னு இருக்கும்... அதனால வேற தப்பான கேள்வியும் எழலை... இதுதான் உன்னோட ரிஷிமூலம்! நான் உன் அம்மா இல்லைன்னதும் என்னை வெறுத்திட மாட்டியே சௌமிம்மா!''

பரிதவிப்பும், நெஞ்சம் பிளக்கும் வேதனையுமாய் கேட்டவரை,



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அப்படியே அணைத்துக்கொண்டாள் சௌம்யா.

''அம்மா! இப்படி ஒரு கேள்வியக் கேட்க எப்படி உங்களுக்கு மனசு வந்தது? எனக்கு உயிர் குடுத்தது அவங்களா இருந்தாலும், வாழ்க்கை குடுத்தது நீங்கதானே? விதுரனும் மாமாவும் பிரிஞ்சு போனப்புறம், நீங்க உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை அமைச்சிட்டிருந்திருக்கலாம்.. ஆனா அதை செய்யாம, உங்க லைஃபை எனக்காகவே தியாகம் பண்ணி ஒரு அற்புதமான தாயா வாழ்ந்திருக்கீங்க... எப்படிம்மா நான் உங்களை வெறுக்க முடியும்? கையெடுத்து வணங்கணும் போல இருக்கு... இந்த நன்றிக்கடனை நான் எப்படி...?

''என் அம்மா இருந்திருந்தாக்கூட இப்படி பாசத்தோட வளர்த்திருப்பாங்களோ என்னவோ தெரியலை. இப்பதாம்மா, உங்க மேல இன்னும் அன்பும் பாசமும் அதிகமாகுது.

நீங்க எனக்கே எனக்குன்னு இருக்கணும்கிற பொஸஸிவ் நெஸ் கூட வருது. விதுரனுக்கு அதுவும் உங்க அருமை தெரியாதவருக்கு உங்களை நான் எந்தக் காலத்திலயும் விட்டுத்தர மாட்டேன்..'' கூறிவிட்டு அவருடைய கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டாள். அவள் உடல் குலுங்கியது.

தன்னை சௌமியாவது புரிந்து கொண்டாளே என்ற ஆனந்தக் கண்ணீர், அவர் விழிகளில்!

வெகு நேரம் கழித்து, அவளிடம் அசைவு தெரிந்தது. ''நான் இப்பவே விதுரன் கிட்டப்போய் எல்லா உண்மையையும் சொல்லப் போறேன்.. எங்கம்மா ஒரு தெய்வம்! ஒரு வஞ்சகம் புடிச்ச மனுஷனோட வக்ரபுத்தியால எங்க அம்மாமேல பழி சுமத்தி விறட்டினது உங்கப்பாதான்! எங்களுக்கு உங்க பணமும் உறவும் வேண்டாம். ஆனா அவங்க மேல சுமத்தின பழியை உங்கப்பா துடைக்கணும்னு சொல்லப் போறேன் ''கோபத்துடன் எழுந்தாள்.

15

சியாமளா வேகமாக அவளைத் தடுத்தார்.

''வேணாம் சவுமியா! பொறுமையா இரு... இப்ப நாம போய் எவ்வளவு சொன்னாலும் என்னை அவங்க நம்பறது கஷ்டம்! மனசு முழுக்க விஷமாகி இருக்கும்போது உண்மையை சொன்னா ஏத்துக்க டியாது. நான் உன்கிட்ட ஒரு கேள்வி கேட்பேன்... நீ உண்மையச் சொல்லணும்...''

அவர் கேட்டவுடன், என்னவென்பது போல் ஏறிட்டாள் சவுமியா.

''நீ விதுரனை விரும்புறே... இல்லை?'' என்றார் சியாமளா அமைதியான குரலில்.

''அம்மா...!'' ஆச்சரியத்துடன் நோக்கினாள் அவள்.

''உன்னைப் பத்தி பேசறதுக்காகன்னு நினைக்கிறேன்..., கொஞ்ச நாள் முன்னாடி ரெண்டு பேருமே நம்ம வீட்டுக்கு வந்திருந்தாங்க... என்னைப் பாத்ததும் அதிர்ச்சியாகித் திரும்பிப் போயிட்டடாங்க... அப்பதான், இந்தக் கல்யாணம் நடக்காதுன்னு விதுரன் இட்ட சத்தம் போட்டுட்டு போனார், அந்தப் பெரிய மனுஷர்...! அன்னிக்குத்தான் எனக்கு விஷயமே புரிஞ்சது'' யோசனையுடன் கூறினார்.


''எப்போம்மா.... ஓணம் பண்டிகை அன்னிக்கா?''

''ஆமாம்... நீ கூட அன்னிக்கு லேட்டா வந்தே.. விதுரனைப் பார்த்த இனிய அதிர்ச்சியும், அவங்கப்பாவைப் பாத்த கோபமும் வெறுப்புமா நான் அழுதிட்டே படுத்திட்டேன்...'' என்று முடித்த போது, அன்று தன்னைக் காத்திருக்க சொல்லிவிட்டு விதுரன் வராத காரணம், புரிந்தது.

என் காதலன் பேரு மாசிலாமணி.... நான் சுருக்கமா 'மாசி'ன்னு கூப்பிடுவேன்...

நல்ல வேளை... அண்ணாமலையினு இருந்தா, 'அண்ணா'ன்னு கூப்பிட வேண்டியிருக்குமே...

-ஜே.தனலட்சுமி.



உடனே தங்கள் காதலையும், இப்போது விதுரனின் பாராமுகத்தையும் சீமாவையும் பற்றி அவள் கூறியபோது, கனிவுடன் அவளையே பார்த்திருந்த சியாமளா யோசனையுடன் பேச ஆரம்பித்தார்.

''உன் கிட்டே ஒரு ரிக்வெஸ்ட் சவுமியா! விதுரன் என் மகன் தான்... இல்லேங்கலே! ஆனா நீ அவனை மறுந்துடா! எப்படி இருந்தாலும் அப்பாவோட குணம் கொஞ்சமாவது அவனுக்கு இருக்கும்! அதே சந்தேகமும், பொண்டாட்டிய நம்பாத வக்ர குணமும் தலை தூக்குச்சின்னா?... எனக்கு உன் வாழ்க்கை ரொம்ப முக்கியம்! அது என் பையனாலே பாதிக்கப்படும்னா, நான் அதுக்கு நிச்சயமா ஒத்துக்க மாட்டேன்..!

''இன்னொரு சியாமளா உருவாகறதில எனக்கு இஷ்டமில்லை.. ஆனா துரோகி ராஜவேலுவோட பொண்ணு என் மகனைக் கல்யாணம் செஞ்சுக்கறதும் எனக்கு பிடிக்கலை'' உறுதியாகக் கூறினார்.

சட்டென்று சவுமியின் விழியோரங்களில், நீர்த்துளிகள் ஜனித்தன.

எத்தனை உன்னதமான மனுஷி இவர் என்ற பெருமையும், மனமெங்கும் நிறைந்தன. தன் மகனே என்றாலும், அதற்காக சவுமியின் வாழ்க்கையை பலியிட விரும்பாத இந்த அற்புதமான மனதிற்கு எத்தனை அன்பக் கொடுத்தாலும் ஈடாகாதென்று தோன்றியது. வாஞ்சையுடன் அவருடைய தோளில் சாய்ந்து கொண்டாள் அவள்.

''நாம தப்பு பண்ணலைன்னு நாம சொன்னாதானே தெரியும்மா... நாம பேசாம இருந்தா அவங்க நினைச்சதுதான் சரின்னு, திமிரா இருக்கத் தோணுமே..! அதுக்கு நாம வழிவிடக்கூடாது...தன் பக்கத்து நியாயத்தை சொல்றதுக்கு குற்றவாளிக்கே உரிமை உண்டுங்கிறப்ப, நிரபராதி





Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

எதுக்காக செய்யாத குற்றத்துக்கு பழி சுமக்கணும்.. எனக்கு ரொம்பக் கோபமா வருது. இந்த நிமிஷம் என்னை விட்டீங்கன்னா, உடனே போய் மாமா கிட்ட எல்லாத்தையும் சொல்லி நியாயம் கேட்டு நிப்பேன்...''

கண்களில் கனல் பறக்கக் கூறினாள்.

விட்டுடுடா.. அதெல்லாம் வேண்டாம்... ஆனா ''சவுமீ...! நிச்சயமா ஒரு நாள் விதுரன் என்னைப் புரிஞ்சிப்பான்..'' சியாமளா கண்கள் கசியக் கூறினார்.

அவரால் மட்டுமே எப்படி எல்லாவற்றையும் இவ்வளவு சுலபமாக ஏற்று கொள்ள முடிகிறது... இதுவே தான் அந்த இடத்தில் இருந்திருந்தால், உடைந்து சிதறி இருப்போம் என்று சவுமிக்கு தோன்றியது.

தன் மனதில் நினைத்ததை அப்படியே கூறியபோது, விரக்தியாகப் புன்னகைத்த சியாமளா மெதுவாகக் கூறினார்.

''சோகம் எனும் பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதைத் தடுக்க முடியாது... ஆனால் அவை உங்கள் தலையிலே கூடு கட்டி வாழ்வதைத் தவிர்க்கலாம்!'' அப்படின்னு ஒரு அறிஞர் சொல்லியிருக்கார்... அந்த வரிகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.. சோகங்கள் என்னை ஆளுமை செய்ய எப்பவுமே அனுமதிக்கிறதில்லை..! அது மாதிரிப் பிறர் முன்னாடி நம்ம சோகத்தை வெளிப்படுத்தித் தோத்துப் போறதும் பிடிக்கறதில்லை!'' அவருடைய தைரியமும், தெளிவும், தீர்க்கமும் சவுமியாவை மெய் சிலிர்க்க வைத்தன.

அந்த நிமிடம், அவள் மனதில் ஒரு உறுதி வந்தது.

எப்படியாவது விதுரனிடம் பேசி, தன் தாயின் மேலுள்ள பழியைத் துடைக்க வேண்டும் என்ற வேகமும் முடிவும் வந்தன.

அதே நிமிடம், அனைவரையும் இழந்து நின்ற சம்பூர்ணத்தின் மேல் பெரும் பரிதாபமும் எழுந்தது.

★★★

அன்று இரவு உறங்காமல் விழித்திருந்த போது, அவளுக்குள் ஆயிரம் எண்ணங்கள்!

முதன் முதலாக விதுரனைப் பார்த்ததுமே அவளுக்கு எத்தனையோ யுகங்கள் பழகிய உணர்வு வந்ததன் காரணம், அவர் சியாமளாவைப் போலிருந்ததுதான் என்பது, இன்று புரிந்தது.

ராஜவேலுவிற்குத் தன்னைக் கண்டவுடனே வந்த வெறுப்பும், முகச் சுளிப்பும் கூட விதுரன் தன் மகளுக்குத்தான் என்ற ஆளுமை உணர்வில் வந்ததென்பதும் விளங்கின.

அவர்களுடைய குடும்பம் பிரியக் காரணமாக இருந்த அந்த வஞ்சக மனிதரின் மேல், கடும் கோபமும், பகையுணர்ச்சியும் வந்தன.

ஆனால் சியாமளாவின் வார்த்தைகள் நினைவிற்கு வந்தபோது, விதுரனை மறப்பது தான் சரியா என்று தோன்றினாலும், காதலை உறுதியாகத் தாங்கியிருந்த மனதில்... நம்பிக்கைத் தூணாய் அவனுடைய நினைவுகள்!



எவ்வளவு ஓட்டமிருந்தாலும் சட்டென்று தெளிவடைந்து கண்ணாடியாய் சலசலக்கும் ஓடையாய் மாற முடியாமல், மனம் தாய்க்கும், விதுரனுக்கும் இடையே குழம்பித் தவித்தது.

மறுநாள், மனதில் ஒரு பெரும் முடிவுடன் ஓட்டலுக்கு கிளம்பிக் கொண்டிருந்தாள் அவள்.

அப்போது, சியாமளா அவளெதிரில் வந்து நிற்க, கண்களுக்கு கீழ் தெரிந்த கருவளையங்களும் சோர்ந்தமுகமும், இரவில் அவரும் சரியாக உறங்கவில்லை என்பதை கூறினான்.

''சவுமி! நான் சொன்னதை மறந்துடாதே! காதல்ங்கிறது ஒரு அற்புதமான உணர்வு தான்! ஆனா சரியான ஒருத்தரை துணையா தேர்வு செய்யாததாலே, நான் என்னோட வாழ்க்கை, இளமை, குழந்தை எல்லாத்தையும் தொலைச்சிட்டு பழியும் சுமந்து தனி மரமா நிக்கிறேன். இதிலே எனக்கு இருக்கிற ஒரு துணை நீ மட்டும்தான்! உன் வாழ்க்கையும் என்னோடது மாதிரி கேள்விக்குறியா மாற நான் அனுமதிக்க மாட்டேன்.

அதனால விதுரனை நீ மறக்கறதுதான் உனக்கு நல்லது...

''உனக்கு காதல்தான் பெரிசுன்னு நீ நினைச்சா, நான் என் பையன்கிட்ட உண்மையை சொல்லிக் கெஞ்சி உன்னை சேர்த்து வைக்கிறேன். ஆனா அப்பவும் அவன் என்னை நம்புவானா, அவனோட அப்பாவை நம்புவானான்னு நிச்சயமாத் தெரியாது...

''எனக்கும், என் மகன் என்னை நல்லவன்னு ஏத்துக்கணும்னு ரொம்ப ஆசையா தான் இருக்கு... ஆனா என் தூய்மையை மெய்ப்பிக்க அந்த ராஜவேலு வரணும்...

''அவன் எங்கே இருக்கானோ தெரியலையே? அவன் உண்மையப் பேசவானான்றதும் நமக்குத் தெரியாது...அவ்வளவு மோசமானவன் அவன்! ''பெரிய சீறலான மூச்சுடன் நிறுத்தினார் சியாமளா.

அவருடைய கையைப் பற்றி ஆதரவுடன் அழுத்தியவள், ''நான் பார்த்துக்கறேம்மா... நீங்க நிம்மதியா இருங்க... என் வாழ்க்கைய நானே பலி கொடுக்க மாட்டேன். வரேன்! நான் உங்க பொண்ணு! அனுபவங்கள் தந்த ரணங்களை பாடமா எனக்கு உணர்த்தியிருக்கீங்க நீங்க!'' உறுதி கூறிவிட்டுக் கிளம்பினாள்.

★★★

அன்று ஹோட்டலுக்கு சென்று வேலையை ஆரம்பித்து வெகு நேரம் கழித்தே விதுரனும் சீமாவும் அங்கு வந்தனர்.

பிரமோத் வராததால், வரவேற்பில் ஆஷாவிற்கு உதவிக் கொண்டிருந்த சவுமியாவை ஒரு பொருட்டாகவே நினையாமல், விதுரனின் கைப்பிடித்தபடி உள்ளே சென்றாள் சீமா.

மனம், தாய் கூறிய நினைவுகளைத் திரும்பிப் பார்க்க, அவள் ராஜவேலுவின் பெண் என்கிற ஒரு நினைவே, சீமாவை வெறுக்கப் போதுமானதாய்!

அந்த நிமிடம், சட்டென்று ஒரு உண்மை மனதில் அறைந்தது. இதே போலத் தானே விதுரனுக்கும் தோன்றியிருக்கும்... தன் தாய் நடத்தை சரியில்லாதவள்... அவருடைய பெண் சவுமியா எனும் போது,

அதனாலேயே தன் மேல் நம்பிக்கையின்மையும் வெறுப்பும் வந்திருக்கலாம்... அத்துடன் தன்னை அவன் தங்கையாகவும் எண்ணியிருக்க கூடும் என்ற உண்மை உறைக்க, இதற்கு உடனே தீர்வு காண வேண்டுமென்ற வேகம் மனதில் எழுந்தது.

தலை விண்ணென்று தெரிக்க ஆரம்பித்து, காய்ச்சல் வருவது போன்ற அறிகுறி தெரிய, உடனே ஒரு லீவு லெட்டரை எழுதி கருணாகரனிடம் கொடுத்து விட்டு ஒரு முடிவுடன் விதுரனை சந்திக்கச் சென்றாள்.

அப்போது, சீமா இன்னும் கிளம்பாதிருப்பது தெரிந்தது.

இருவரும், ஏதோ முக்கியமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

தான் பேச வந்த விஷயத்தை சீமாவின் எதிரில் பேச வேண்டாமென்று தோன்ற, மௌனமாக அவனிடம் ரிப்போர்ட்டை அளித்துவிட்டுத் திரும்பினாள் அவள்.

ஆனால் அவள் பின்னோடு வெளியில் வந்த சீமா ''ஒரு நிமிஷம்'' என்று அவளை நிறுத்தினாள்.

''இனிமே இது மாதிரி வேலைக்கெல்லாம் நீ வர வேண்டாம்! யாராவது ஒரு ஆளுகிட்ட அனுப்பி வைக்கலாம். உன்னை இங்கே தனியா இவரோடப் பாத்தா அது எல்லாருக்கும் தப்பாப் படும்.. கூடிய சீக்கிரமே எங்க கல்யாணம் முடிவாகப் போகுது...''

அவள் முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் சவுமியா.

''லுக் மேடம்! மிஸ்டர் விதுரன் சொன்னதாலே தான் நானே இதை எடுத்துட்டு வந்து தரேன்... இங்கே என்னைப் பத்தி எல்லோருக்கும் தெரியும்! உங்க கல்யாணத்துக்கு என் வாழ்த்துக்கள்! இன்னொருத்தருக்கு உரிமையா இருக்கற ஒருத்தரை பறிக்க நினைக்கிறது எங்க குடும்பப் பழக்கம் இடையாது...'' அடிக்குரலில் சீறினாள்.

திடீரென்று, விதுரனின் குரல் கோபத்துடன் குறுக்கிட்டது.

''ஓ... அப்ப கட்டின புருஷனை ஏமாத்தறது மட்டும் தான் உங்க குடும்பப் பழக்கமா....ம்..? நக்கலும் ஏளனமுமாக வந்த வார்த்தைகள், அவளை எரிதழலாய் ஆக்கின.

சீமா புரியாமல் திரும்பிய போது, கோபத்தின் உச்சிக்கு



''என்மனைவி என்னை சந்தேகப்பட ஆரம்பிச்சுடா''

''எப்படி?''

''மளிகைக் கடைக்கு சாமான் வாங்கப் போனால் கூட வேலைக் காரியும் கூட கூப்பிட்டுப்போறானே''

-எம்.எஸ். வாழவந்தான், தேனி.



சென்றிருந்தாள் சவுமியா.

''யார் ஏமாத்தனது? எங்கம்மாவா.. இல்லை, இதோ நிக்கிறாங்களே இவங்களோட அப்பவா? தான் செஞ்ச தப்பை மூடி மறைச்சு எங்கம்மா மேலப் பழியப் போட்டு அவங்க வாழ்க்கையையே பாழாக்கினவரு.. உங்க மரியாதைக்குரிய ராஜவேலுதான்!

''நட்புக்கு துரோகம் செஞ்சு, நட்பை சாகடிச்சு இன்னிக்கும் அந்தக் குற்றவுணர்வு கொஞ்சம் கூட இல்லாமப் பழகிட்டு, இப்ப தன் பொண்ணையே அந்த நண்பனோட மகனுக்கு கட்டித் தரணும்னு நினைக்கிற ஒரு நய வஞ்சகனை நீங்க நம்புவீங்க... இன்னி வரைக்கும் சுத்தமா சொக்கத் தங்கமா, ஒரு அற்புதமான மனுஷியா வாழ்ந்துட்டிருக்கிற எங்க அம்மாவை சந்தேகப்படுவீங்க.. இல்லை?''

படபடவென்று வார்த்தைகளைக் கொட்டிவிட்டு நீதி கேட்டு நின்றபெண் தெய்வமாய் ரௌத்ரத்துடன் நின்றாள் அவள்.

அவளுடைய முகமும், ரௌத்ரமான பேச்சும், தவறுகளுக்கு சிறிதும் சம்பந்தமில்லாததைப் புரிய வைத்தன.. விதுரனை யோசிக்கவும் வைத்தன!

''சவும்யா! நாம உள்ளே போய் பேசலாம்.. வெளியே வேணாம்...'' என்றான் விதுரன் அழுத்தமான குரலில்.

''ஏன்.. எல்லாரும் தெரிஞ்சக்கட்டுமே.. இந்த ஹோட்டல் முதலாளியோட யோக்கியதையை...! எங்க அம்மா இப்படித்தானே பலர் முன்னாடி தப்பே செய்யாம அவமானப்பட்டு கூனிக்குறுகி நின்னிருப்பாங்க!''

விழிகள் தீப்பொறிகளை சிதற விட அவள் ஆதங்கத்துடன் கூறிய போது. இடிந்து போய் முகம் கறுத்து நின்றிருந்த விதுரன், மெதுவாகப் பேசினான்.

''சவுமியா? என்ன நடந்ததுன்னு உண்மைய சொல்லு! நீ எதையோ மனுசுல வச்சிட்டுதான் இப்படிப் பேசறே...'' எனும் போதே சீமாவின் குரல் கிறீச்சிட்டது.

''விது! அப்ப நீங்க அப்பாவை நம்பலியா? எங்கிருந்தோ வந்த இந்த அன்னக்காவடி சொல்றதை நம்புறீங்களா? இவ எங்கப்பா மேல பழி போடறதைக் கேட்டுட்டு என்னால சும்மா இருக்க முடியாது...'' என்றவள் சவுமியாவிடம் திரும்பினாள்.

''என்னடி? உன் ஊழைக் குசும்பை என்கிட்டயே காட்டறியா? ஒண்ணுக்கும் வக்கில்லாம எங்க கிட்ட வந்து வேலை செய்யற ஏழைக்கு இவ்வளவு இருந்தா, எனக்கு எவ்வளவு இருக்கும் ?'' ஆத்திரத்துடன் சீறினாள்.

''மிஸ் சீமா! உண்மையை சொல்றதுக்கு பணக்காரனா இருக்கணும்னு அவசியமில்லை அதோட வாழ்க்கை மேல, தன் மேல நம்பிக்கை வச்சிருக்கற யாருமே ஏழையுமில்லை! தன்னால முடியும்கிற தன்னம்பிக்கை மனசு முழுக்க நிரம்பி இருக்கிறதே பெரிய செல்வம் தானே? நான் உங்க கிட்ட பேசலை... மிஸ்டர் விதுரன் கிட்டதான் பேசறேன்..''



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''உனக்கு அவர்கிட் பேச என்ன உரிமை இருக்கு...! அவர் எனக்கு அத்தை பையன்... எங்கப்பாவோட தங்கைதான் விதுரோட அம்மா.. தெரியுமா உனக்கு...?''

''ஓ... அப்படியா? இன்னொரு உண்மை தெரியுமா உங்களுக்கு? நானும் அவருக்கு அத்தை பொண்ணுதான்! எங்கப்பாவோட தங்கச்சி பையன் தான் விது... அதுவும் அவங்க வயத்துல பிறந்த மகன்... இப்ப புரியுதா... எனக்கு உங்களை விட உரிமை அதிகமாவே இருக்குன்னு...?''

அவள் கூறியதை ஜீரணிக்க முடியாமல், இருவரும் சிலையாக உறைந்து நின்றனர்.

## 16

விதுரனுக்கோ, சவுமியா தன்னுடைய தங்கை இல்லையென்று பூக்களை யாரோ தலையில் கொட்டியது போல் ஒரு உணர்வு!

மூடுபனி மறைத்த விடியலிலிருந்து வெளிப்படும் முதல் ஒளிக்கீற்றாய், அவளின் வார்த்தைகள், இதிற்குள் பெரும் பிரகாசம் தந்தன.

''சவுமியா.. அப்ப நீ என் தங்கையில்லையா...?''

இதயத்தை அழுத்தியிருந்த இரும்புக் குண்டொன்று, மேலெழும்பி விடைபெற்றுச் சென்ற விடுதலை உணர்வுடன் கேட்டான் விதுரன்.

''இல்லை! ''என்றவள், அவனுடைய தாயின் வாழ்வில் நடந்த எல்லா உண்மைகளையும் விளக்கிக் கூறியபோது, அவன் முகத்தில் ஆயிரம் உணர்ச்சிகள்!

இதயக் கடலோரம் நேச அலைகள் வேகமாய் ஒதுங்க, பெரும் சலசலப்புடன் எதிர்பார்ப்பும் ஏக்கங்களும் அவன் மனதில் நிறைய ஆரம்பித்தன.

சீமாவிற்கோ, தான் அவளிடம் காதல் போரில் தோற்று விடுவோமோ என்ற பயமும், தந்தையைப் பற்றித் தெரிந்து கொண்ட அதிர்ச்சியும்!

எல்லாவற்றையும் அவள் கூறியவுடன், ''அம்மா...'' என்றபடி விதுரன் ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்த போது, அவனுடைய செல் ஒலிக்க ஆரம்பித்தது.

ஒரு தலையசைப்புடன் ''ப்ச்...'' என்றபடி அதை எடுத்தும் பார்த்தான் அவன் தன் தந்தையின் அழைப்பைக் கண்டதும், ''என்னப்பா..சொல்லுங்க?'' என்றான் இறுகிய குரலில்!

அவர் என்ன கூறினாரோ, உடனே சீமாவிடம் திரும்பினான்.

''உங்கப்பாவை மிஷன் ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணி இருக்காங்களாம்.. நீ உடனே கிளம்பிப் போ!'' என்றபடி தன் தந்தையிடம் பேச்சைத் தொடர்ந்தான்.

''நான் வரலைப்பா! உங்களோட நான் கொஞ்சம் தனியாப் பேசணும்.. அதுவும் உடனே ! '' என்றவுடன், அவர் உடனே கிளம்பி விட்டிற்கு வரும்படிக் கூறினார்.

சீமா முதலில் மருத்துவமனைக்குச் செல்ல, தன்னுடன் சவுமியாவையும் அழைத்துக் கொண்ட உடனே விட்டிற்குச் சென்றான்



விதுரன்.

அவன் விட்டிற்குச் செல்லும் வழியிலேயே செல் அழைத்தது. எடுத்தால், வித்யாதரன் தான் பதட்டத்துடன் பேசினார்.

''விதுரா, சீமா போன கார் ஆக்சிடெண்ட் ஆயிடுச்சாம்.. அவ ரொம்ப கிரிட்டிகலா இருக்காளாம்! வேலு அட்மிட் ஆகியிருக்கிற ஹாஸ்பிடலுக்கு பக்கத்துலயே விபத்துன்றதாலே அங்கேயே கொண்டு போயிருக்காங்க.. வேலுவோட தம்பி பசுபதிதான் போன் பண்ணினான். நான் அங்கேதான் போயிட்டிருக்கேன்.. நீயும் அங்கேயே வந்துடுப்பா! ''கவலையுடன் கூறினார்.

★★★

உடனே காரை ஹாஸ்பிடலுக்கு திருப்பி, அங்கு சென்றபோதுதான் தெரிந்தது... சீமா விபத்து நடந்த ஸ்பாட்டிலேயே இறந்து விட்ட விஷயம்!

காலையில் , 'ஸ்ட்ரோக்' வந்ததால் ஒரு கையும் காலும் செயலிழந்து ஐசியூவில் அனுமதிக்கப்பட்டிருந்த ராஜவேலுவின் நிலைமை, கவலைக்கிடமாக இருந்தது.

அந்த மருத்துவமனையின் காரிடாரில் வேலுவின் மனைவி யமுனா அழுதபடி அமர்ந்திருக்க, அவரை ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தார் வித்யாதரன். மகளும் இறந்து, கணவரும் உயிருக்கு போராடியதில், அவர் பெரிதும் உடைந்து போயிருந்தார்.

அந்த நிமிடம், வித்யாதரனை அழைத்து தனியே பேசவும் வகையின்றி, கூண்டுப் புலியாய் அந்தக் காரிடாரில் நடந்து கொண்டிருந்தான் விதுரன்.

சிறிது நேரம் கழித்து வெளியே வந்த ஒரு ஆள் ராஜவேலு, தன் நண்பரிடம் பேச விரும்புவதாக் கூறவும் வித்யாதரனும், யமுனாவும் உள்ளே சென்றனர்.

கருங்கல்லாய் இறுகிய முகத்துடன் கண்களை இறுகமூடி, வராண்டாவின் சுவரில் சாய்ந்து கைகளைக் கட்டியபடி நின்றிருந்த விதுரனின் விரைப்பான இறுகிய தோற்றம், சவுமியாவிற்குள் பெரும் பயத்தை விளைவிப்பதாய்!

சிறிது நேரம் கழித்து வெளியில் வந்த வித்யாதரனின் முகமோ, ரத்தப் பசையின்றி வெளுத்துப் போய் இருந்தது.

''விதுரா...'' தழுதழுத்த அவர் குரலும், தடுமாற்றத்துடன் தெரிந்த அவரின் நடையும் ராஜவேலு மரண வாக்குமூலம் அளித்திருப்பதை, உறுதிப்படுத்தின.

''விதுரா! நான் இத்தனை வருஷமா... நட்போட அருமை தெரியாத ஒருத்தன் சொன்ன பொய்யை நம்பி... உங்கம்மாவுக்கு எவ்வளவு பெரிய அநியாயம் செஞ்சிட்டேன்.... சே! என்னை நினைச்சா எனக்கே அருவெறுப்பா இருக்கு. உங்கம்மா எப்படித் துடிச்சிருப்பா.. இந்த ராஜவேலு எவ்வளவு பெரிய துரோகின்னு புரிச்சிக்கமாப் போயிட்டேனே!

நான் என்ன செய்யப் போறேன்?'' பைத்தியம் பிடித்தவரைப் போல் தலையில் அறைந்து கொண்டு அழுதார்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''அப்பா.. உங்களுக்கு அம்மாவைப் பத்தி இப்பவாவது புரிஞ்சுதா? அவ்வளவு உயர்ந்த மனுஷிய சந்தேகப்பட்டுட்டீங்களே!'' ஆதங்கத்தில் கம்மிய குரலுடன் கேட்டான் விதுரன்.

''உனக்கு எப்படி...'' அதிர்ச்சியுடன் நிமிர்ந்தார் அவர்.

சவுமியாவிடம் திரும்பி ''அப்ப இந்தப் பொண்ணு..'' கேள்விக் குறியுடன் நோக்கிய போது அவர் விழிகள் நிறைந்திருந்தன.

''அம்மாவோட அண்ணன் பொண்ணுப்பா! இப்பதான் சவுமியா எல்லாத்தையும் சொன்னா. எனக்கு உடனே அம்மாவைப் பாக்கணும் போலிருக்கு...'' தவிப்புடன் கூறினான் விதுரன்.

''எனக்கும்தான்! எப்படிப்பட்ட ஒரு துரோகத்தை நான் அவளுக்கு செஞ்சிருக்கேன்... என்னை அவ மன்னிப்பாளா?... ஒரு நல்லவளை சந்தேகப்பட்ட பாவம் தான் எனக்கு ரெண்டாவது மனைவியும் தங்கலை.. குடும்ப வாழ்க்கையே மறுக்கப்பட்டிருக்கு! இந்த தண்டனை எனக்கு தேவை தான்!'' உடைந்து போய் கதற ஆரம்பித்தார்.

சியாமளாவைப் பிரிந்து கேரளாவிற்கு வந்து தொழில் தொடங்கிய உடனே, ராஜவேலு அவனுடைய தங்கை பிரேமாவை தனக்கு மணம் செய்வித்ததும், அவளும் ஓரளவு பாசமாகவே விதுரனை வளர்த்ததும், ஆனால் திருமணமாகி மூன்று வருடத்திலேயே பிரேமா காசநோய் கண்டு இறந்ததும் புகைப்படத்தின் மூலமாக இதுவரை அவளையே அம்மாவென்று எண்ணி விதுரன் வணங்கி வந்ததும் தொடர் ஊர்வலமாய் அவர் நினைவுகளில் வலம் வந்தன.

யமுனா, ராஜவேலுவுடன் துணை இருந்ததால், பசுபதியிடம் மட்டும் விடைபெற்றுக் கிளம்பியவர், உடனே தன் மேனேஜரை அழைத்து சீமாவின் இறுதிச் சடங்குகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் கவனிக்கும் படி கூறினார்.

அவளுடைய உடல், போஸ்ட்மார்ட்டத்திற்குச் சென்றிருந்தது.

ராஜவேலுவின் துரோகம் புரிந்தாலும், சிறு வயதிலிருந்தே பார்த்து வளர்ந்த சீமாவின் இழப்பு, அவரை வெகுவாகப் பாதித்திருந்தது.

விதுரனும், மௌனித்திலிருந்தான்.

சீமாவின் இறப்பின் மூலம் தனக்கு உரிய தண்டனை கிடைத்து விட்டதாகக் கூறி ராஜவேலு அழுதபோது, சியாமளாவின் மேல் அவன் சுமத்திய பழிக்கு, கடவுள் ஒரு 'பொயடிக் ஜஸ்டிஸ்' போல் தீர்ப்பெழுதி விட்டது புரிந்தது அவருக்கு!

நல்லவர்களின் பழி பாவத்திற்கு ஆளாவது கூடாதென்பதும் தெரிந்தது.

சியாமளா தன் மகனைப் பிரிந்து புத்திர சோகத்திற்கு ஆளானதைப் போல், இப்போது ராஜவேலுவும், யமுனாவும் தனித்திருப்பது புரிந்த போது, 'தர்மம் வெல்லும்' என்ற வரிகள் உண்மையாய்!

காரில் ஏறி பின்புறம் அமர்ந்ததும், அடக்க முடியாமல் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தவரை, சவுமியாதான் சமாதானப்படுத்தினாள்.

''மாமா! நீங்க தெரியாம தப்பு செஞ்சிட்டீங்க... அதுதான் உண்மை! ஆனா அம்மாவுக்கு தன்னுடைய பக்கத்து நியாயத்தை சொல்ல கொஞ்சமாவது நீங்க அனுமதிச்சிருக்கணும்... ஆனா அவங்க சாதாரண



மனுஷி இல்லை.. தெய்வம்! மறந்து மன்னிக்கற குணம் என்னிக்குமே எங்கம்மாவுக்கு அதிகம்... நீங்க ரெண்டு பேருமே சேரணும்.. அதுதான் என் ஆசை! நிச்சயமா அது நடக்கும்...''

விழிகள், பாச நெகிழ்வில் கசியக் கூறினான்.

உடனே, அவனைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார் அவர்.

சியாமளா வேலை செய்கின்ற தொழிற்சாலைக்குள், விதுரன் காரைச் செலுத்தினான்.

அலுவலகத்திற்குச் சென்று, அவரை அழைத்துச் செல்ல வேண்டுமென்று கூறியபோது, அந்த நிர்வாகியே வந்து விட்டார்.

''விதுரன்! எங்கே இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க? வாங்க.. ஒரு காப்பி சாப்பிட்டுட்டு போகலாம்...'' என்று வரவேற்றார்.

''இல்லை... நான் எங்கம்மாவை அழைச்சிட்டு போகலாம்னு வந்திருக்கேன்'' என்றாள் சவுமியா.

''உங்கம்மாவா அவங்க எனக்குத் தெரியாது... சாரி! அழைச்சிட்டுப் போங்க..'' என்றபடி சியாமளாவை அனுப்பும்படிக் கூறிவிட்டு தன் அறைக்கு அழைத்துச் சென்று அமர வைத்து காபி வரவழைத்தார்.

காபி குடித்து முடிக்கும்போது, சியாமளா வந்திருப்பதாக ஒருவர் வந்து கூற வேகமாக எழுந்தான் விதுரன்.

''தேங்க் யூ விஷ்ணு...'' என்றபடி அவரிடம் விடை பெற்றான்.

சவுமியாவுடன் கம்பீரமாக வந்த விதுரனைக் கண்டதும், சியாமளாவிற்கு ஏதோ நடந்திருப்பது புரிந்தாலும், விதுரனை விட்டு அவர் தன் விழிகளை விலக்கவேயில்லை.

தன்னுடைய மகனின் உருவத்தை, விழிகளில் தேக்கி இதயத்தில் பதித்துக் கொண்டிருந்தது, அந்தத் தாயுள்ளம்! 'அம்மா' என்ற உறவிற்கு அர்த்தம் சொல்ல வந்த மாயக்கண்ணனாய் அவன் உருவம்!

வேகமாக அவரிடம் வந்தவன், சட்டென்று குனிந்து அவருடைய பாதம் தொட்டு வணங்கினான்.

பிறகு, ''அம்மா...'' என்ற ஏக்கக் குரலுடன் அவரை அணைத்துக் கொண்டான்.

சியாமளாவின் நெஞ்சம் பாசப் பரபரப்பில் விம்மித் தணிய, கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது.

''தலைவர் ஏன் ரொம்ப கோபமாய் இருக்கார்!''

''போட்டியிலே, தனக்கு சுண்டல்தான் ரொம்ப பிடிக்கும்னு சொன்னதை, 'தனக்கு சுரண்டல்தான் ரொம்ப பிடிக்கும்னு பத்திரிகையில் பிரசுரிச்சிட்டாங்களாம்!''

-அனன்யா, திருச்சி





Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இந்த ஒரு தருணத்திற்காக, தான் எத்தனை வருடமாக தவமிருந்திருக்கிறோம் என்று புரிந்தது.

அவரை அணைத்தபடி அழைத்து வந்து காரின் பின்புறம் அவன் ஏற்றி விட்ட போது உள்ளே அமர்ந்தவர், அங்கு சிவந்த விழிகளுடன் அமர்ந்திருந்த வித்யாதரனை சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

முகம் இறுகிவிட கதவோரம் சாய்ந்து கொண்டவர், மீதிப் பயணம் முழுவதும் மௌனமாகவே வந்தார்.

முன்புறம் அமர்ந்திருந்த விதுரனுக்கும், சவுமியாவுக்கும் அவர்கள் இருவரும் சேர வேண்டுமே என்ற பிரார்த்தனை, இதயம் முழுவதும்!

★★★

வீட்டிற்குப் போனதும், நேரே சம்பூர்ணத்திடம் சென்ற வித்யாதரன் அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு அழுது விட்டார்.

''என்னை மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்கம்மா! உங்க மகளை உங்க கிட்டயிருந்து பிரிச்சிட்ட பாவி நான்! முடியாது தான்.. ஆனாலும் என்னை மன்னிச்சி உங்க மகளா ஏத்துக்கங்க...'' உணர்ச்சிப் பெருக்குடன் கதறினார்.

அவர் குமுறியபோது, சம்பூர்ணமும் உணர்வு வயப்பட்டு அழுது விட்டார்.

பிறகு, சியாமளாவும், வித்யாதரனும் தனியே பேசுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக, சம்பூர்ணத்தையும் அழைத்துக் கொண்டு இருவரும் வெளியே கிளம்பினர்.

தனிமை மட்டுமே அமைதியாக துணையிருக்க, சிறிது நேரம் மௌனமாக இருந்த வித்யாதரன், மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

''சியாமளா... என்னை நினைச்சா எனக்கே வெக்கமா இருக்கு... அரு வெறுப்பாக்கூட உன்னோட எப்படிப் பேசறதுன்னே புரியலை.. இதுக்கு ராஜவேலு மட்டும் தான் காரணம்னு நான் சொல்ல மாட்டேன்.. நான்தான் முக்கியக் காரணம்...! என் பொண்டாட்டிய நான் நம்பறேன். அவ தப்பு செஞ்சிருக்க மாட்டான்னு அவன்கிட்ட நான் அடிச்சி சொல்லலையே..! அதுக்கு பதிலா என் மனசுல ரொம்ப நாளா புகைஞ்சிட்டிருந்த சந்தேகத்தை வக்ரத்தை ஊர்ஜிதப்படுத்திட்டு அவன் சொன்ன பொய்யை நம்பி உன் மேல தப்பா பழி சொல்லி, உன் வாழ்க்கை வீணாக்கி... சே!

''உன் கிட்ட மன்னிப்புக் கேட்கக் கூட எனக்கு அருகதையில்லை.. ஆனா நான் உண்மையத் தெரிஞ்சுகிட்டேன்.. நீ எவ்வளவு உத்தமமானவள்றதையும் புரிஞ்சுகிட்டேன்.... என்னை மன்னிச்சிடு! '' கண்களில் நீர்கசியக் கையெடுத்துக் கும்பிட்டார்.

அவரிடம் கேட்க, சியாமளாவிற்கு ஆயிரம் கேள்விகள் இருந்தன.

ஆனால் ஒரே ஒரு கேள்வியை மட்டுமே கேட்டார்.

''இப்ப நீங்க கேக்கற மன்னிப்பால.. ஒரு உயிரை, கள்ளம் கபடமில்லாம பழகின அந்த நல்ல மனுஷனை, அவங்கம்மாவுக்கு உங்களாலத் திருப்பித் தர முடியுமா?''

அவருடைய இத்தனை வருஷத்து தவமும், வேள்வியும்



மனதிற்குள்ளேயே போட்டு புழுங்கிக் கொண்டிருந்த வேதனையும், அந்த ஒரு கேள்வியாய் வித்யாதரனைச் சுட்டன.. நீதிக் கூண்டிற்குள் நிறுத்தின!

''முடியாது சியாமளா.. என்னால அந்த உயிரைத் திருப்பித் தர முடியாது தான்...'' முகத்தில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தவரை, சலனமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள் சியாமளா.

வெகு நேரம் அழுத வித்யாதரனுக்குள் ஒரு முடிவு தீவிரமாய் எழ, மெதுவாக நிமிர்ந்தார்.

''சரி.. உன்னால என்னை மன்னிக்க முடியாது தான்.... செஞ்ச தப்பை நான் உணர்ந்திட்டேன்.. நீ எனக்கு என்ன தண்டனை குடுத்தாலும் ஏத்துக்கறேன்... ஆனா இப்ப மனசளவுல செத்துப் போன எனக்கு அது பெரிய தண்டனையாக இருக்காது...! நாம இப்ப செய்ய வேண்டிய ஒரே ஒரு நல்ல காரியம், விதுரனையும், சவுமியாவையும் சேத்து வைக்கிறதுதான்..'' மெதுவாகக் கூறினார்.

''சாரி! அதுலே எனக்கு உடன்பாடு இல்லை.. என்னைப் பொறுத்த வரைக்கும் இன்னொரு சியாமளா உருவாகக் கூடாது.... என் மகனா இருந்தாலும், விதுரனக்குள்ளே உங்க குணமும் நிச்சயமா படிஞ்சிருக்கும். அதனால சவுமியா பாதிக்கப்படறதை நான் அனுமதிக்கமாட்டேன்... என்னால இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம் தர முடியாது'' தீர்மானமாகக் கூறினார் சியாமளா.

அந்த ஒற்றை வார்த்தையில் அவருடைய மனம் பாலையாய் வறண்டு விட; உடைந்து போய் நின்றிருந்தார் வித்யாதரன்.

## 17

கோவிலுக்கு சென்று வெளிப்பிரகாரத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போது, சம்பூர்ணம் கண்ணீருடன் எல்லா உண்மைகளையும், விதுரனுக்கு விவரித்தார்.

அவருடைய கையை, ஆதரவாகப் பிடித்துக் கொண்டான் விதுரன்.

''பாட்டிம்மா! நானும் அப்பாவும் இப்போ அம்மாவ முழுசா நம்பறோம்... நாங்க உங்க வீட்டுக்கு வந்த அன்னிக்கு தான், எங்கம்மா உயிரோட இருக்கிறதே எனக்குத் தெரியும். ஒரு தனி மனிதனோட சதியால நம்ம குடும்பத்துல எவ்வளவு இழப்புகள், குழப்பங்கள், பிரிவுகள்னு நினைச்சா ரொம்ப கஷ்டமா இருக்கு... இனிமே உங்களுக்கு நாங்க எல்லாரும் இருக்கோம்...நீங்க கவலைப்படக் கூடாது....'' என்று அவன் கூறிய போது, அவன் குரலில் பரிவும் பாசமும் நிறைந்திருந்தன.

''கேக்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு! மனோகரே திரும்பி வந்த மாதிரி இருக்கு! நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க.. நான் கோவிலை சுத்திப்பாத்துட்டு வரேன்.'' என்றபடி மெதுவாக எழுந்து சென்றார் சம்பூர்ணம்.

அவர் சென்றதும், ''சவுமி! என்மேல உனக்கு ரொம்பக் கோபம் இல்லை? என்னவோ தெரியலை.. முதன் முதலா பார்த்தவுடனே நீ



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

என்னை முழுசா ஆக்கிரமிச்சிட்டே! எந்தப் பொண்ணும் இந்தளவுக்கு என்னை பாதிச்சதில்லை.. அப்பறம் உன்னோட குணம், நம்ம ஹோட்டல் முன்னேற்றத்துக்காக நீ எடுத்துகிட்ட அக்கறை, சக தொழிலாளர்கள் கிட்ட நீ காட்டின அன்பு, கரிசனம், இக்கட்டான நேரத்தில அத சமாளிக்கிற உன்னோட சாமர்த்தியம்... இப்படி சொல்லிட்டே போகலாம்.... எல்லாமே என்னை ரொம்பக் கவர்ந்தது.. அப்பல்லாம், ஒரு வானவில்லே என்னோட வாசல் தேடி வந்த மாதிரி ஒரு உணர்வு!

அந்த மெக்கன்சி உன்கிட்ட தப்பா நடந்துக்க முயற்சி செஞ்சப்ப, என் உயிரே என்னை விட்டுப் போனாப்புல ஒரு வலி வந்த அப்புறம்தான், உன்கிட்ட என் மனசை தொலைச்சிட்டேன்றதையே நான் புரிஞ்சிக்கிட்டேன்.... உடனே அப்பாகிட்டேயும் பேசினேன்...

''அப்புறம் தான் ரெண்டு பேரும் நம்ம வீட்டுக்கு வந்தோம்...! அங்கே வந்ததும் எனக்கு பெரிய அதிர்ச்சி! ஆனா அப்பா சொன்னதைக் கேட்டவுடனே உன் பர்த் சர்டிபிகேட்ல அப்பா, அம்மான்னு வெங்கடேசன் சியாமளான்னு பாத்த ஞாபகம் வந்தது. உன் பர்த்டேயைத் தெரிஞ்சுக்கலாம்னு ஒரு நாள் பாத்ததினால வந்த வினை!

''நீ என்னோட தங்கைன்னு நினைச்சப்ப, என் நெஞ்சே ரெண்டாக பொளந்துடும் போல ஒரு வலி!

''அந்தக் காயத்தை, ரணத்தை ஆற வைக்கத்தான், உன் கிட்ட அவ்வளவு மோசமா நடந்துக்கிட்டேன்...

''ஆனா, என்னால உன்னை மறக்கவே முடியலை... எனக்குள்ளேயே நொந்து போய் என்னையே நான் வெறுத்து நாட்கள் அதெல்லாம்...! இதுல இடையில சீமா வேற உன்னைப் பத்தி தப்பா என்கிட்ட சொல்ல, நான் மிருகமாயிட்டேன்...! ஆனா, மாதவேட்டா தான் கதிர்கூட உன்னை அனுப்பின சீமாவோட சதியைப் பத்தி, மறுநாள் என்கிட்ட வந்து சொன்னாரு.. அதனால தான் நான் சீமாவை ஹோட்டலுக்கு இனிமே வரவேண்டாம்னு சொன்னேன்.... வார்ன் பண்ணினேன்! இதெல்லாம் மேல் நாட்டிலே சகஜம்... அதனால அவ உன்னைப் பத்தி தப்பா நினைச்சி, அது மாதிரி செஞ்சிட்டதா சொல்லி சாரி கேட்டா.... நானும் மன்னிச்சி விட்டுட்டேன். அப்புறம் எவ்வளவோ நடந்துடுச்சி.....

பிரமோத் கல்யணத்தப்ப, உன்னை அங்குலம் அங்குலமா ரசிக்க ஆரம்பிச்ச மனதை நானே கடிவாளம் போட்டு அடக்கிக்கிட்டேன். உன்னை பார்க்கும் போதெல்லாம் தீயா எரிஞ்ச உணர்வுகளை, நீ என் தங்கைங்கற உண்மையை சொல்லி அணைச்சிடுவேன்.....

''இப்படி எனக்குள்ளேயே நான் போராடிட்டு இருந்தப்பதான், அப்பா எனக்கும் சீமாவுக்கும் கல்யாணப் பேச்சை எடுத்தாங்க. உடனே நான் முடியாதுன்னு சொல்லிட்டேன்....

''அவளை ஒரு தங்கை மாதிரி தான் என்னால பாக்க முடிஞ்சது. ஆனா அதப் பத்தி பேசத்தான், இன்னிக்கு சீமா ஹோட்டலுக்கு வந்திருந்தா.. நீயும் வந்தே! இப்ப எல்லாமே தெரிஞ்சப்புறம், மனசு லேசாகி ரொம்ப நிம்மதியா இருக்கு...'' பேசிக்கொண்டே வந்தவன், தலை குனிந்து அமர்ந்திருந்தவளைப் பார்த்து நிறுத்தினான்.



''நான் இவ்வளவு சொல்றேன்... நீ என்னைப் பத்தி என்ன நினைச்சிட்ருக்கேன்னு ஒரு வார்த்தை கூட சொல்ல மாட்டேங்கிற சவுமி! என்ன வெக்கமா? ''குறும்புடன் கேட்டான் விதுரன்''.

மௌனமாக அமர்ந்திருந்தவளிடம், என்கிட்ட உனக்கு பிடிச்ச விஷயம் எதெல்லாம்னு சொல்லக் கூடாதா சவுமி...? ''கேட்ட போது ஆழம் காண முடியாத மென்மை, அவன் குரலில்!

மெதுவாக நிமிர்நதவளின் முகத்திலோ, நாணத்தின் வரிகள்! சுகம் மடை திறந்த வெள்ளமாய் பெருக, அந்த இனிய நேரத்தில் இந்தப் பெண் மயங்கியது புரிந்தது. பிறகு பார்வையைத் தழைத்து, கோர்த்திருந்த தன் விரல்களில் பதித்தாள் அவள்.

''எனக்கு முதன் முதலா உங்க கிட்டே பிடிச்சதே அந்த நேர்ப் பார்வை தான்... பெண்களைத் துகிலுரியாம, கண்களை மட்டுமே பார்த்துப் பேசற அந்த நேர்மையான கண்கள்! அப்புறம், பிசினஸ்லே நீங்க காட்டுற அக்கறை உங்க திறமை.. நம்ம கிட்ட வேலை செய்யறவங்கதானேன்னு நினைக்காம, மத்தவங்களை மதிச்சு, ஹோட்டலோட முன்னேற்றதுக்காக அவங்க கணிப்பையும் கேட்டு செயல்பட்டது...

அப்பறம் அந்தக் கம்பீரமான கோபம்.... அது கூட சில சமயங்கள்லே அழகா என்னால வெகுவா ரசிக்க முடிஞ்சதா இருந்தது... ம்.. சொன்னா கோபிச்சுக்கக் கூடாது.. சில சமயங்களிலே திமிரா, கர்வமா, பிடிவதமா.. ஒரு ஆளுமைத்தனத்தோட இருப்பீங்களே... அது கூட எனக்குப் பிடிக்கும்..! அப்பல்லாம் 'தபு சங்கரோட'' திமிருக்கும் அழகென்ற பேர் ''அப்படின்ற வரிகள் நினைவுக்கு வரும்.. ஆனா...''தவிப்புடன் நிறுத்தினாள்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டதும் ஒரு வித சிலிர்ப்பு உடல் முழுவதும் ஊடுருவிப் பரவியது. சொர்க்கத்தின் கதவுகள் தாழ் திறந்ததைப் போல் உணர்வுடன் அமர்ந்திருந்தவன், '' இப்பவாவது சொல்லேன் சவுமி.... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கிறேன்னு...!''எதிர்பார்ப்புடன் கேட்டேன்.

குறும்பும், எதிர்பார்ப்புமாய் வந்த அவனுடைய கேள்விக்கு, அவளிடமிருந்து அப்படி ஒரு பதில் வருமென்று, சத்தியமாக அவன் எதிர்பார்க்கவில்லை.

அதுவரை வெட்கம் சுமந்திருந்த சவுமியின் முகம், சட்டென்று மாறியது.

''சாரி விதூ...! அம்மாவுக்கு விருப்பம் இல்லைன்னா, என்னால இதுக்கு நிச்சயமா சம்மதிக்க முடியாது... என் சந்தோஷத்தை விட, அவங்க சந்தோஷம் தான் எனக்கு இப்ப முக்கியம்!'' அழுத்தமான குரலில் கூறினாள். சவுமியா.

பெரும் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தவன், ''ஏன்... நம்ம கல்யாணத்தைப் பத்தி முதல்லே சந்தோஷப்படப் போறதே அம்மா தானே?'' தவிப்புடன் கேட்டான்.

வண்ணக் காகிதங்கள் சுற்றியப் பரிசுப் பொருளாய், மனதிற்குள்ளிலிருந்த காதலை பொக்கிஷமாய் பாதுகாத்த மனதை



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அடக்கியவள், மெதுவாக எழுந்தாள்.

''தெரியலை.. அதை நீங்க அவங்க கிட்டதான் கேக்கணும்.... நாம கிளம்பலாமா ?'' என்றாள் மெல்லிய குரலில்.

அப்போது சம்பூர்ணம் வந்து விட, யோசனையுடன் நெரித்த புருவங்களுடன், முகமும் இறுகி விட, உடனே கிளம்பியவன், மௌனமாகவே காரை ஓட்டினான்.

## 18

வீட்டிற்கு சென்றதும், வித்யாதரன் சோகமாக எழுந்து அவனருகில் வந்தார்.

''உங்கம்மா என்னை மன்னிக்கலைப்பா! உனக்கு சவுமியாவைத் ரவும் ஒத்துக்க மாட்டேன்றா.. நான் பெரிய தப்பு பண்ணிட்டேன்! அதுக்கு, அனுபவிச்சி தானே ஆகணும்... எத்தனை வருஷம் அவ நரக வேதனை அனுபவிச்சிருப்பா! அவ சொல்றதும் சரிதான்.. என்னால போன அந்த உயிரை, இப்பத் திருப்பித்தர முடியாதே!'' உடைந்து போய்க் கூறினார்.

ன்ன செய்வதென்று புரியாமல் விதுரன் தவிக்க, சம்பூர்ணம் நேரே சியாமளாவிடம் சென்றார்.

''சியாமளா! எந்தத் தப்பையும் மறக்கறதும் மன்னிக்கறதும் சுலபமில்லை தான். ஆனா அதுதான் மனுஷனோட அடையாளம்... தெய்வ குணம்! அது உன்கிட்ட இருக்கும்னு நான் நினைச்சிட்டிருந்தேன்.. வாழ்க்கையில் பழசையே நினைச்சிட்டிருந்தோம்னா நிம்மதியாவே இருக்க முடியாது...! அய்யோ... நம்ம கிளையிலிருந்து பூ உதிர்ந்திடுச்சின்னு மரம் வருத்தப்பட்டுப் பூக்காமலே இருக்குதா? இல்லையே....

ஒரு குழந்தை இறந்தா மறு வருஷமே அந்த வீட்டில இன்னொரு குழந்தை பிறக்குது.. ''குழிப்பிள்ளை மடியிலே''ன்னு பெரியவங்க சொல்லுவாங்க ...! நாம எல்லாத்தையும் புரிஞ்சிகிட்டு அப்புறமா மன்னிக்கலாமான்னு யோசிக்கிறப்ப, நமக்கு அந்த சந்தர்ப்பமே கிடைக்காம போனாலும் போகலாம்!

என் மகன் இறந்ததுக்கு இவர் தான் காரணம்னு தெரிஞ்சும் திருந்தி வந்திருக்கிற இவரை மன்னிச்சிட்டேன்... நீயும் இவரை மன்னிக்கணும்! அதுதான் இத்தனை நாள் நீ இருந்தியே ஒரு மௌன தவம்... அதுக்கு ஒரு பலன் கிடைச்ச மாதிரி!

நான் கற்புக்கரசின்னு நீதி கேட்டு அந்த நீதி தேவதையோட வாசல்லே நின்னே பாரு.. இப்ப அவ எனக்கு ஒரு வரம் கொடுத்திருக்கா! அத நீ ஏத்துக்கணும்மா!

அந்த சின்னஞ் சிறுசுகளைப் பாரு.. ரெண்டுமே உன் குழந்தைங்க!

அதுங்களை நீ தானே சேத்து வைக்கணும்! ''உரிமையுடன் கூறினார்''.

''அம்மா! நீங்க சொல்றதுக்கு ஒத்துக்கறேன்.. மன்னிக்கிறது வேற.. வாழ்க்கை வேற! நீறு பூத்த ரணமா எரிஞ்சி முடிஞ்ச வடுவோட, வெளியில மட்டும் சிரிக்கிற மாதிரி நடிச்சு, என்னால இயல்பா அவரோட



வாழ்க்கை நடத்த முடியாது... அதற்கான வயசும் போயிடுச்சு! மனசும் தயாராயில்லை...

''நான் இப்படியே இருந்துடறேன். இப்ப தான் உங்களுக்கும் ஒரு துணை கட்டாயமா வேணும்... என்னைப் புரிஞ்சுக்கங்க! மன்னிக்கறதும் மறக்கறதும் தெய்வ குணம் தான்.. ஆனா நானும் மனுஷி தானே... அதுவும் வார்த்தைகளால நீக்குளிச்ச ஒரு சாதாரண மனுஷி..'' முதன் முதலாக உடைந்து போய் சம்பூர்ணத்தின் மீது சாய்ந்து அழ ஆரம்பித்தார் சியாமளா.

உடனே விதுரனும், சவுமியாவும் அவரை இரு புறமும் தூணாய் தாங்கிக் கொள்ள, அங்கு பாச உணர்வுகளின் இனிதான சங்கமம்!

சிறிது நேரத்திற்குப் பிறகு தன்னை சமாதானப் படுத்திக் கொண்டு நிமிர்ந்தவர், வித்யாதரனிடம் திரும்பினார்.

''நான் உங்களை மன்னிச்சிட்டேன்.. ஆனா என்னால உங்க வீட்டுக்கு வந்து இருக்க முடியாது.. எனக்கு பதிலா என் பொண்ணு அங்க வருவா! ''மெல்லிய குரலில் அழுத்தமாகக் கூறினார்.

''இல்லம்மா! நீங்களும் எங்களோட வந்து இருக்கணும்! அப்பதான் நான் சம்மதிப்பேன்....''பிடிவாதமாகக் கூறிய சவுமியயை சமாதானப் படுத்தினார் சியாமளா.

''அசடு! எப்பவுமே பெண்களுக்கு அம்மா வீடுன்னு ஒண்ணு இருக்கணும்... அவங்களுக்கு நிம்மதியா தலை சாய்ச்ச தூங்க, ஓய்வெடுக்க, வேதனைகளைப் பகிர்ந்துக்க, சலுகையாப் போய் தங்க... இதுக்கெல்லாம் கட்டாயமா ஒரு வீடு வேணும்... நான் உன்னோட இருந்தா அது உனக்கு நிச்சயமா கிடைக்காது... அதோட சம்பூர்ணம்மாவுக்கு ஒரு பொண்ணா கடைசி வரைக்கும் நான் துணையிருப்பேன்னு முடிவெடுத்திருக்கேன். அதனால என்னை வற்புறுத்தாதீங்க.. எனக்கு இப்ப யார் மேலயும் கோபமில்லை'' என்றபடி அவளுடைய முன்னுச்சியில் முத்தமிட்டார்.

பிறகு விதுரனிடம் திரும்பினார்.



''என்னப்பா சர்வர்... தோசை பிராந்தி வாடை அடிக்குது...

''சரக்கு' மாஸ்டர் சுட்டது சார்... அதான் அப்படி...!

-ஜெ.தனலட்சுமி



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''நான் ஏன் உனக்கு சவுமியாவை தர மாட்டேன்னு சொன்னேன் தெரியுமா விதுரா? உங்கப்பாவோட சந்தேக குணம் உனக்கும் வந்து, இன்னொரு சியாமளா உருவாகிடக் கூடாதேன்னுதான்! எனக்கு இப்ப நம்பிக்கை வந்திருக்கு.. இத்தனை நடந்தப்புறம், நீ அவளைப் புரிஞ்சி நடந்துப்பேன்னு...! உனக்கு சந்தோஷம் தானேப்பா?'' மென்மையாக அவன் கன்னத்தை வருடியபடிக் கேட்டார்.

அதை அப்படியே எடுத்து தன் உதடுகளில் ஒற்றியவன், ''நிச்சயமாம்மா! உங்க நம்பிக்கையை நான் சத்தியமாக் காப்பாத்துவேன்!'' அவரை அணைத்தபடி சவுமியாவிடம் திரும்பினான்.

''உன்னை என் உயிராய் விரும்புகிறேன்.'' என்ற மௌனச் செய்தி விதுரனின் விழிகளில்! ''இவ்வளவு நாட்கள் உனை நினைத்து நினைத்து என் நெஞ்சம் மறுகியதை நீ உணர்வாயா?'' என்ற கேள்வியும்! அதை வாசித்தறிந்த சவுமியாவின் முகத்தில், வெட்கப்பூக்கள் அழகாக மொட்டு விட்டு மலர்ந்தன.

அவர்களையே கவனித்துக் கொண்டிருந்த சியாமளா, இருவரின் கைகளையும் உடனே இணைத்து வைத்து விட்டு ''அடுத்த முகூர்த்தத்திலேயே ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணிடலாம்.'' மகிழ்ச்சிப் பரவசத்துடன் கூறினார்.

திடீரென்று வித்யாதரனின் குரல் கேட்டது.

''விதுரா! நான் ஓய்வெடுக்க வேண்டிய நேரம் வந்துடுச்சுன்னு நினைக்கிறேன். ராஜவேலுவுக்கு பிரிச்சித் தரவேண்டிய பங்கை வக்கீல் மூலமாக கொடுத்திட்டு, பார்ட்டனர்ஷிப்புல இருந்து அவனை உடனே விலக்கிடு. அவனே விலகிடறதா சொல்லிட்டான்...!

எனக்கு அவன் முகத்தைப் பார்க்கவே பிடிக்கலை! பட்ட கஷ்டமெல்லாம் போதும்.. இனிமே ஹோட்டல் நிர்வாகம், டிபார்ட்மெண்டல் ஸ்டோர் எல்லாம் உன் பொறுப்பு!

''சியாமளா தானே அங்கே நம்ம வீட்டுக்கு வர மாட்டா! நான் இங்கே வந்திடறேன்.. உங்கம்மா என்னை ஏத்துகலைன்னாலும் பராவாயில்லை.. அவளுக்கு கணவனா இல்லைன்னாலும், ஒரு துணையா இங்க நான் இருக்கேன்...

''என்னால தான் மகனை இழந்த சம்பூர்ணாம்மாவுக்கு ஒரு மகனா



''எல்லாரும் 200.. 300ரூன்னு பீஸ்வாங்கறபோது நீங்க மட்டும் 30...50ன்னு பீஸ்வாங்கறீங்களே..ஏன்?''

''அவங்கெளல்லாம் எம்.டி.எம்.எஸ், எம்.பி.பி.எஸ்.-ன்னு படிச்சவங்க...''

- ராஜிராதா, பெங்களூர்



-உனக்கு ஜாமீன் கொடுக்க இருபதாயிரம் ரூபாய் கட்ட வேண்டும்!

எஜமான்! இன்னிக்கு ராத்திரி மட்டும் வெளியில் விடுங்க...சரியா கொண்டாந்துடறேன்!

-சி.ரகுபதி, போளூர்



இருக்கேன்.... இது தான் என்னோட முடிவு!

அங்கே நீயும் சவுமியாவும் சந்தோஷமா இருங்க... நாங்க எப்பவாவது வந்து பார்க்கறோம். ஏதாவது பண்டிகைன்னா நீங்க இங்கே வாங்க... எல்லாரும் ஒண்ணா இருக்கலாம். இனிமே சம்பூர்ணத்தம்மா எனக்கும் அம்மா தான்! ''அவர் குரல் கம்மியிருந்தது.

''ஓகேப்பா! ரொம்ப சந்தோஷம்.. அம்மா.. இப்ப என்ன சொல்றீங்க ?'' குறும்புடன் கேட்ட மகனுக்கு சொல்ல, சியாமளாவால் முடியவில்லை.

அவர் அமைதியாக் இருக்கவே, சம்பூர்ணம் குறுக்கிட்டார்.

''வாழப்போறது இன்னும் கொஞ்ச நாள்தான்! என் பையன் எனக்கு திரும்ப கிடைச்சுட்டான்னு நான் நினைச்சுக்கறேன்... இது தான் கடவுள் சங்கல்பம்னா, அதை நான் ஏத்துக்கறதா முடிவு பண்ணிட்டேன் சியாமளா! ''நெகிழ்ச்சியுடன் கூறினார்.

உடனே இறுக்கத்துடன் அமைதியாகப் புன்னகைத்த சியாமளாவை இறுகக் கட்டிக் கொண்ட சவுமி, அவருடைய கன்னத்தில் தன் பட்டு இதழ்களைப் பதித்தாள். ''ஏய்! நீ இப்ப ரெண்டு பேரைப்பொறாமைப்பட வைக்கிறே.. அங்க பாரு..

'அப்பா கண்ணுல தெரியற கோபத்தை.. நீ முத்தம் தந்தியே, அது எனக்குச் சொந்தமான இடம்னு அந்தப் பார்வை சொல்லாம சொல்லுது ''குறும்புடன் கண் சிமிட்டியபடிக் கூறினான் விதுரன்.

சவுமியாவின் விழிகள் மின்னலாய் ஒளிர்ந்து, கன்னத்தில் வெட்கம் கசிந்து.

சட்டென்று தன்னையறியாமலே சியாமளா சிரித்துவிட, அவர்களுடைய வீட்டிற்குள் மகிழ்ச்சியம் கலகலப்பும் கை கோர்த்து, அம்சமாய் நுழைந்தன.

மறு நிமிடமே, அந்த வீடே பரவசத்துடன் புன்னகைக்க ஆரம்பிக்க, இரவு நேரத் தோட்டத்தில் மலர்க் கம்பளம் விரித்திருந்த மகிழம்பூக்கள், நாசிக்குள் ரம்யமான வாசனையை அறிமுகப் படுத்தின.

சியாமளா ஒரு தேவதை! அவள் மாற்றத்தை காலம் உணர்த்தும்.. அது வரை வித்யாதரன் காத்திருப்பார் என்று சம்பூர்ணத்திற்கு தோன்றியது. அதே நேரம் வேகமாக வீசிய சாரல் காற்று, வீட்டின் பின்புறமிருந்த மூங்கில் காட்டுக்குள் நுழைந்து, அற்புதமான இசையை போதிக்க ஆரம்பித்தது!

--- **நிறைந்தது** -----



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer